பக்கங்கள்-16 | வைகாசி,10.2015 | விலை-30.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

நடுநிலை இதழ்
# தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -120

## புளியங்குளம், தீச்சுவாலை, ஓயாத அலைகள் எனப் பல சமர்களில் தளபதி தீபனுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறிய சிங்களப்படை

## த.தே.கூட்டமைப்பை பதிவு செய்யவேண்டிய தேவை தமிழரசுக்கட்சிக்கு இல்லை

## ஜோன் கெரியின் இலங்கைப் பயணமும், வெளிவராத உண்மைகளும்...






-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# த.தே.கூட்டமைப்பை பதிவுசெய்யவேண்டிய தேவை தமிழரசுக்கட்சிக்கு இல்லை




**மறைமுகமாகக்கூறும் தமிழரசுக்கட்சி**

த.தே.கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் என்ற இந்த மூன்று கட்சிகளும் அண்மையகாலமாக கூட்டமைப்பின் பதிவுதொடர்பில் முக்கியகவனம்செலுத்தி வருகின்றனர். ஏப்ரல் மாத காலப்பகுதியில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் கனேடிய வானொலி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில், கூட்டமைப்பு பதிவுசெய்யப்பட்டுவிட்டது எனத்தெரிவித்த கருத்தினால் பெரும் சர்ச்சை நிலவியது. சூட்டோடு சூடாக கட்சியினை பதிவுசெய்யவேண்டியதன் நோக்கில் கடந்த 17,18ம் திகதிகளில் த.தே.கூட்டமைப்பும், அதன் அங்கத்துவக் கட்சிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கானதொரு நகல் ஒன்றினை மாவைசேனாதிராஜா அவர்களிடம் கையளித்தனர்.

இதனைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டிய தேவை இருக்கின்றது என பதிலளித்த த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இவ்வாறே கால தாமதங்களை இழுத்தடித்துவந்தார். இன்னமும் இவ்விடயம் தொடர்பில் பரிசீலனை செய்தபாடில்லை. பதிவுசெய்வது என்பது ஒருபுறம். மறுபக்கத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினைக்கூட சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை இதுவரையிலும் முன்னெடுக்கவில்லை. த.தே. கூட்டமைப்பு கூட்டமைப்பாக இருப்பதையே தமிழரசுக்கட்சி விரும்புகின்றது. த.தே.கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் பதிவு செய்வது தொடர்பில் அக்கறையினைக்காட்டிய போதிலும் இதற்குத்தடையாக தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களே பின்னின்று செயற்பட்டுவருகின்றனர்.

த.தே.கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டால் அத்னது சாதக பாதக விளைவுகள் எவ்வாறிருக்கும்? பிரதானமாக தலைவர், செயலாளர், பொருளாளர் என்கின்ற நியமனங்கள் தொடர்பாக கட்சிகளுக்குள் முரண்பாடுகள் தோன்றும். இவ்வாறிருக்கும்நிலையில்கூட்டமைப்பாக பதிவுசெய்யப்படும் பட்சத்தில் மூன்று கட்சிகளில் உள்ளவர்களுள் எவரையேனும் செயலாளர் அல்லது பொருளாளர் என தெரிவுசெய்யவேண்டிய தேவையும் இருக்கின்றது. எந்தவொரு தீர்மானத்தினை மேற்கொள்வதாயினும் உயர்மட்டத்திலுள்ளவர்களே இறுதியான தீர்வினை மேற்கொள்ளவேண்டிய நிலை உள்ளது. ஆகவே ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற உறுப்பினர்களுக்கு பதவிகளை வழங்கும்பொழுது தமிழரசுக்கட்சி தனது அதிகாரத்தினை பயன்படுத்தவேண்டிய சூழ்நிலை இல்லாதுபோகும்.

மக்கள் மத்தியில் ஆயுதமேந்திய கட்சிகள்தொடர்பாகதவறான கருத்தினை தமிழரசுக்கட்சி 'முன்வைத்துள்ளது. இவர்கள் தனித்து நின்று போட்டியிட்டால் கூட தோல்வியினை சந்திப்பார்கள் என்பது தமிழரசுக்கட்சிக்குநன்குதெரியும். ஆகவே ஆசனங்களை மாத்திரம் இவர்களுக்கு வழங்குவதே தமிழரசுக்கட்சியின் நோக்கமாகும். இதனோடு பார்க்கின்றபொழுது ஈ.பி.ஆர்.எல்.எப் மாத்திரமே தமிழரசுக்கட்சியினை எதிர்த்து அறிக்கைகளை வெளியிடுகின்றது. காலந்தாழ்த்தாது பதிவுசெய்யுங்கள் எனக்கோசமிடுபவர்களும் இவர்கள்தான். ஆனால் ரெலோவும், புளொட்டும் அனைத்தும் ஒன்றுதான் என்ற நிலையில் இருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாது தமிழரசுக்கட்சியினை எதிர்த்து தாம் தனித்துப்போட்டியிட்டால் எதிர்வரும் காலங்களில் மக்கள் ஆதரவினை வழங்குவார்களா? என்கின்ற சந்தேகமும் இவர்களுக்கு இருக்கின்றது. இவற்றை நன்கு அறிந்த தமிழரசுக்கட்சி த.தே.கூட்டமைப்பை பதிவுசெய்வது என்பது தேவையற்ற விடயம் என்று கருதுகின்றது.

த.தே.கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டால் அதில் பிரதானமாக மூன்று கட்சிகளது ஆதிக்கம் அதிகமாகக் காணப்படும். தமிழரசுக்கட்சிதான் என்று சுயமாக பேசுவதற்கு இடமிருக்காது. ஏற்கனவே ஆனந்தசங்கரி பதிவுசெய்யும் விடயத்தில் தமிழர்விடுதலைக்கூட்டணியின் சின்னத்தை வழங்காது தானே சுவீகரித்துக்கொண்ட விடயத்தினை தமிழரசுக்கட்சி மீட்டிப்பார்க்கின்றது. ஆயுதக்கட்சிகளுக்கு முதன்மை இடம் வழங்கப்படுகின்றபொழுது தமது அரசியல் இருப்பிற்கு ஆபத்துவந்துவிடுமோ என்கின்ற பயம் காணப்படுகின்றது.

இதில் பாதகமான விடயம் என்னவென்றால், தமிழரசுக்கட்சியில் இதுவரை வந்த தலைமைத்துவங்கள் அனைத்தும் தமிழ்மக்களுக்கான உரிய தீர்வுகளை பெற்றுக்கொடுக்க தவறியுள்ளது. பேச்சுத்திறமை இவர்களிடம் அதிகமாக காணப்பட்டது. அரசியல் அனுபவம் என்பது இவர்களது சிறப்புத்தன்மை. அரைத்த மாவை அரைத்துக்கொண்டிருப்பது அவசியமற்ற செயல் என அறிந்திருந்தும் தொடர்ந்தும் இதனையே மேற்கொள்கின்றனர். இதற்கான காரணம் என்னவென்றால், ஆயுதமேந்தாத அஹிம்சை வழியில் போராடிவந்த கட்சி எனக்கூறப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பாக ஆயுதக்கட்சிகளுக்கு தமிழரசுக்கட்சி கொடுக்கின்ற அழுத்தங்களை பார்க்கின்றபொழுது, ஒருவகையில் தமிழரசுக்கட்சி தனது கட்சியினை வளர்த்துக்கொள்வதற்கான வழிமுறைகளே இவை என நிரூபணமாகின்றது. ஒற்றுமை என்பது இரண்டாவது பட்சமாக சிந்திக்கப்படுகின்றது.

கட்சியினை பதிவுசெய்யுங்கள் என சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் தொடர்ச்சியாக கூறிவந்தபோதிலும் அவரை கட்சியிலிருந்து விலக்குவதற்கான முயற்சிகளை தமிழரசுக்கட்சி மேற்கொண்டது. த.தே.கூட்டமைப்பில் ஊடகப்பேச்சாளராக இருந்தும் கூட முக்கியமான சந்திப்புக்கள் இடம்பெறுகின்றதான தகவல்களை பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் மூலமாகவே தமிழரசுக்கட்சி ஏனையவர்களுக்கு தெரியப்படுத்துகின்றது. த.தே. கூட்டமைப்பிலிருக்கக்கூடிய சம்பந்தன், மாவைசேனாதிராஜா போன்ற இருவருடன் இவரது தொடர்புகளை குறைப்பதற்கான செயற்றிட்டங்களே அவை என்றும் கூறலாம். ஈ.பி.ஆர்.எல்.எப் முரண்பட்டுக்கொண்டு கட்சியினைவிட்டு விலகிச்சென்றால் புளொட்டின் சித்தார்த்தன் அல்லது ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் த.தே.கூட்டமைப்பினை விட்டு விலகி வரமாட்டார்கள் என்பது இவர்களுக்கு நன்குதெரியும். ஆகவே நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் அவர்களுக்கான ஆசனங்களை ஒதுக்கிவிட்டால் அவர்களது வாயினை அடைக்கமுடியும் என்பதும் தமிழரசுக்கட்சியின் தலைமைகளுக்கு நன்கு தெரியும்.

இவ்வாறிருக்கும் நிலையிலும் கூட இந்த மூன்று கட்சிகளும் கூட்டமைப்பிலிருந்து பிரிந்துசெல்லக்கூடாது என MOU என்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு இக்கட்சிகள் பணிக்கப்பட்டன. அதற்கான வரையும்கூட இந்த மூன்று கட்சிகளும் கலந்தாலோசித்தே இதனை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளன. இவ்வாறிருக்கும்நிலையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமைகள் இதனை புறந்தள்ளிவருகின்றன. தற்போதைய நிலையின்படி யாழில் 07 ஆசனங்கள் இருக்கின்றன. அதிலும் 04 ஆசனங்கள் கூட்டமைப்பு வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது. தற்பொழுது தேசியப்பட்டியல் சுமந்திரன் அவர்களையும் இதற்குள் உள்ளடக்க தமிழரசுக்கட்சி முயற்சிக்கின்றது.

இதில் சிவஞானம் சிறிதரன், சரவணபவான், மாவைசேனாதிராஜா, சுமந்திரன் போன்றோர்தான் வெற்றி பெறவேண்டும் என்று தமிழரசுக்கட்சி எண்ணுகின்றது. இதனைவிடவும் அவர்கள் தங்களது கட்சியின் உறுப்பினர்கள் பலரையும் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஒழுங்கு முறைகளையும் மேற்கொண்டிருக்கின்றனர். இவ்வாறானநிலையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பிலிருந்து விலகிச்செல்லும் தீர்வினை மேற்கொள்வது அர்த்தமற்றது. அவ்வாறு விலகும் தீர்வினை அவர் மேற்கொண்டால் நிச்சயமாக இவர் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாலும், தமிழரசுக்கட்சியினாலும் தமிழினத்தின் விரோதி எனவும் கொலை, கொள்ளை, கப்பம் போன்ற வேலைகளில் ஆரம்பத்தில் ஈடுபட்டார் என்ற பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகிவிடுவார். ஆனால் இவ்விடயத்தில் ரெலோவும், புளொட்டும் அரசியலில் முதுகெலும்பில்லாதவர்கள் எனக்கூறப்படுகின்றது. எனினும் நாம் கூட்டமைப்பாக இணைந்து செயற்படுவோம் என்று இந்த மூன்று கட்சிகளும் பல சந்திப்புக்களை மேற்கொண்டிருக்கின்றன. ஆனால் முதுகெலும்புள்ள கட்சிகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

அப்போது பிரச்சினைகளை காரணங்காட்டினர். இப்போது 19 தீர்வு எனக்கூறுகின்றார்கள். இவர்களுக்கும் அக்கட்சியிலிருந்து விலகுவதற்கு விருப்பமில்லை. விலகினால் மூவரும் கட்சியிலிருந்து விலகி அவர்களது பலத்தை தமிழரசுக்கட்சிக்கும் அரசிற்கும் காட்டவேண்டும். இதற்கு இவர்கள் தயக்கம்காட்டக்காரணம் தமிழரசுக்கட்சியினால் துரோகி எனப் பட்டம் சூட்டப்பட்டுவிடுவார்கள் என்பதனாலாகும். இவ்விடயங்கள் அனைத்தும் இயல்பாகவே நடைமுறையிலுள்ள ஒன்று.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அனைத்து ஆயுதக் கட்சிகளுக்கும் பொது மன்னிப்பை வழங்கி ஒருகுடையின் கீழ் த.தே.கூட்டமைப்பாக செயற்படுங்கள் எனக்கூறியது தமிழரசுக்கட்சியினை தூக்கி தலையில் கொண்டாடியதைப்போலவே அமைகின்றது. ஆயுதக்குழுக்களின் ஆரம்பகாலம் தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்பதாகவே இருந்தது. ஆனால் இன்று விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழரசுக்கட்சி தமது அதிகாரத்தினை பயன்படுத்திவருவதை அனைவரும் அறிந்ததே.

இவ்வாறானதொரு அதிகாரத்தினை ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற கட்சிகளால் ஏன் செலுத்தமுடியாது. அவ்வாறு செலுத்தினால் தாம் ஓரங்கட்டப்படுவோம் என்ற பயமே இதற்கு காரணம் என்றும் கூறலாம். பொதுவாக சிநேகபூர்வமாக பேசுகின்றபொழுது தமிழரசுக்கட்சியினை குறைகூறுவார்கள். இவர்கள் தான் நாம் ஆயுதம் ஏந்தக்காரணம் என்பார்கள். எத்தனையோ இளைஞர், யுவதிகள் மடிவதற்கு காரணமானார்கள். விடுதலைப்புலிகள் இல்லாமையின் காரணமாக இவர்கள் தமது அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்கின்றார்கள்.

இவையனைத்தையும் பகிரங்கமாக மக்களுடன் கலந்துரையாடுவதற்கு கட்சிகள் தயக்கம் காட்டிவருகின்றன. இவ்வாறு தமிழரசுக்கட்சியினை குறைகூறிக்கொண்டே இருக்கின்றார்களே தவிர, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தக்கட்சிகள் தவறிவிட்டன. வன்னித்தேர்தல் தொகுதியினைப்பொறுத்தவரையில் சிவசிதம்பரத்திற்குப்பின்னர் தமிழரசுக்கட்சி வென்றதற்கான சரித்திரமே இல்லை எனலாம். தற்பொழுது அப்பகுதியில் ரெலோ,புளொட்,ஈ.பி.ஆர்.எல்.எப்போன்ற கட்சிகள் போட்டியிடுகின்றபொழுது அதிகமான ஆசனங்களை வெல்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆகவே தமிழரசுக்கட்சி ஆசனங்களை தன்னகத்தே வைத்துக்கொள்வதற்காக, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பதிவு செய்யப்படாமல் இருக்கின்றது.

அதாவது வீட்டுச் சின்னத்தில்தான் போட்டியிடவேண்டும். வேறு கட்சிகள் உருவாகக்கூடாது. தமிழரசுக்கட்சிதான் பெரும்பான்மை வகிக்கவேண்டும். உயர் பதவிகளை தாங்களே வைத்திருக்கவேண்டும். தங்களது கட்டுப்பாட்டின் கீழ்தான் அனைத்து செயற்பாடுகளும் நடைபெறவேண்டும் என்பதே அவர்களது விருப்பம். இதனைத் தவறு என்றும் கூறிவிடமுடியாது. கட்சியினை இறுதிவரை தக்கவைத்துக்கொள்வதற்கான தந்திரோபாயம். இவ்வாறான தந்திரோபாயத்தினை இந்த மூன்று கட்சிகளும் இணைந்துசெயற்படுத்தினால் வெற்றியளிக்கும். ஆனால் அதனைவிடுத்து வெவ்வேறான கோணங்களில் செயற்படுவதே தோல்விக்கு காரணமாகும்.

இன்னுமொரு காரணம் என்னவென்றால், ஏனைய கட்சிகளின் சின்னம் அழிந்துபோகவேண்டும் என்றும் தொடர்ச்சியாக வீட்டுச்சின்னத்தில் போட்டியிடும் பொழுது மக்கள் ஏனைய சின்னங்களை மறந்துவிடுவார்கள். தனியாக பிரிந்துசென்றுபோட்டியிட்டால் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். வாழ்நாள் முழுவதும் இக்கட்சிகள் ஒரு பொதுச்சின்னத்தில் இருக்கவேண்டும் என்பதையே தமிழரசுக்கட்சி விரும்புகின்றது. இவ்வாறிருக்க, தமிழ்பேசும் மக்கள் த.தே.கூட்டமைப்பாக பதிவு செய்தபின்னரே தேர்தலில் போட்டியிடுங்கள் என யாரும் கேட்கவில்லை. இவ்வாறிருக்க நாம் ஏன் பதிவுசெய்யவேண்டும் என தமிழரசுக்கட்சி எண்ணக்கூடும். சர்வதேசத்தின் நிலைப்பாட்டின்படி ஆயுத கலாசாரமுடையவர்களது கருத்தினை குறைத்தே எடைபோடுகிறார்கள்.

08ம் பக்கம் பார்க்க...

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## பாராளுமன்றத் தேர்தலை நகர்த்தி இன்றைய அரசியல்

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரி அரசினால் மஹிந்த ராஜபக்ஷ வின் ஆட்சியைக் கவிழ்க்கும் அரசியல் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது. இதற்காக தென்னிலங்கையின் இனவாதக்கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் நின்று. நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையினை இல்லாதொழித்துள்ளமை மைத்திரியின் அரசிற்கு ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளது. இதனைத்தொடர்ந்து எதிர்வரும் பாராளுமன்றத்தேர்தலிலும் மூன்றில் இரு பெரும்பான்மையினைப் பெறும் அளவிற்கு மைத்திரியின் அரசு 100 நாள் வேலைத்திட்டம் என்பதன் கீழ் தமது அரசியல் நடவடிக்கைகளை நகர்த்திவருகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ வின் ஆட்சியின்போது இடம்பெற்ற ஊழல்மோசடிகள் மற்றும் குடும்ப அரசி யல் போன்ற நடவடிக்கைகளை மக்களுக்கு வெளிச்சம்போட்டுக்காட்டும் அளவிற்கு மைத்திரியின் அரசு தீவிரம் காட்டி அதில் வெற்றியும் கண்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு காய்நகர்த்தப்பட்ட மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சம்பள உயர்வு. எரிபொருள் விலைகுறைப்பு. ஓய்வூதியம். அத்தியாவசிய பொருட்கள் விலைகுறைப்பு என நாட்டின் அனைத்து மக்களும் நன்மை பெறும் நோக்கில் அவரது 100திட்டங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. தற்பொழுது தமிழ்த்தேசியம். சுயநிர்ணய உரிமை என்கின்ற கோட்பாடு களிலிருந்துவிலகி இணக்கப்பாட்டு அரசியல் என்ற போர்வையில் அரசுடன் இணைந்திருக்கிறது. நிச்சயமாக பாராளுமன்றத்தேர்தலில் அமைச்சரவை அந்தஸ்தினை த.தே.கூட்டமைப்பு பெற்றுக்கொள்வதற்கான காய்நகர்த்தல்கள் முன்னெடுக்கப்படும். அதற்கான முன்நகர்வுகளும் செயற்படுத்தப்படுகின்றன.

தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ். மலையக மக்கள் முன்னணி. ஜே.வி.பி. பொதுபலசேனா. முஸ்லீம் காங்கிரஸ். இடதுசாரி முன்னணி போன்ற கட்சிகள் தமது பலத்தை இம்முறை வெளிக்காட்டுவதற்கு தீவிரமாக முயற்சிகளை மேற்கொள்வார்கள். வெற்றி. தோல்வி யாருக்கு? என்பதைவிடுத்து தமது ஆசனங்களை கைப்பற்றும் நோக்கிலேயே இவர்களது செயற்பாடுகள் இடம்பெறும். கடந்த 30வருட காலங்களாக இருந்த அரசியல் நிலவரங்கள் மாற்றம்பெற்று நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை இல்லாதொழிக்கப்பட்ட நிலை யில். இம்முறை பாராளுமன்றத்தேர்தல் இடம்பெறக்காத்திருக்கின்றது. முஸ்லீம் மக்களைப்பொறுத்தவரை UNP அரசினை ஆதரிப்பார்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேனவைப் பொறுத்தவரை இருவரும் இனவாதிகள் என்பதிலும் மாற்றுக்கருத்தில்லை. சுகபோக வாழ்வினையும். தமிழினத்திற்கு அமைச்சுப் பதவிகளையும் வழங்குவதன் ஊடாக. இனப்படுகொலை என்கின்ற விடயத்தினை மூடிமறைப்பதற்காகவே இந்தத்தேர்தல் இடம்பெறுகிறது என்றுகூட கூறலாம்.

உள்ளூர் விசாரணைகளை மையப்படுத்தியே அனைத்து அரசியல் நடவடிக்கைகளும் அமையப்போகின்றன. ஆனால் சிங்கள தேசத்தினைப்பொறுத்தவரை சிறுபான்மை இனத்தவர்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் உட்பட ஏனைய அதிகாரங்களை வழங்குவதற்கு அவர்கள் விரும்பமாட்டார்கள். அதற்குமாறாக குறிப்பிட்ட அதிகாரங்களையே வழங்கும் ஒரு செயற்பாட்டினை தேர்தலின் பின்னர் கூறமுற்படுவார்கள். அதற்கு முன்னர் வழங்கப்பட்டாலும் கூட. அந்த ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்படும் நிலைமைகள் உருவாகும். ஆனாலும் தமது உரிமையைக் வெளிக் காட்டுவதற்காக த.தே.கூட்டமைப்பும். ஏனைய கட்சிகளும் வீடுவீடாக தேர்தல் பிச்சையினை எடுப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதிகளை வழங்குவது சாதாரண விடயம். தமிழ் மக்களைப்பொறுத்தவரை எமது உரிமைக்கான போராட்டத்தினை மனதிற்கொண்டு தமிழ்த்தேசியம். சுயநிர்ணய உரிமை என்பவற்றிற்கு பாதகமான நிலை மைகள் ஏற்படாதவகையில் அரசி யல் நடவடிக்கைகள் அமையவேண்டும். இல்லையேல் மைத்திரி அரசினாலும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு மீண்டும் ஒரு யுத்தம் உருவாவதற்கான சூழ்நிலைகள் ஏற்படுத்தப்படும்.

**47**

பள்ளமடுவிலிருந்து பெரியமடு போகும் சாலையைக் குறிப்பிட்ட தூரம் பாதுகாக்கும் பணியும் எங்களுக்கு இருந்தது. காலையில் காப்பரண் தேடுதலை அணிகள் செய்துகொண்டிருக்கும். அதே நேரத்திலேயே, எமது பிறிதொரு அணி சாலையின் இரு மருங்கையும் ஆராய்ந்தவாறேநகர்ந்துகொண்டிருக்கும். நாம் முடிக்குமிடத்திலிருந்து பெரிய மடுவரை ஜெயந்தன் படையணி அந்தப் பணியைச் செய்யும். சாலையின் கடற்கரையைக் . குப்பையாக்கிறீங்கள் எண்டு தான் நாங்கள் வாங்கிச் சமைச்சுச் சாப்பிடுறம் அவ்வளவுதான்"

என்று நகைச்சுவையாக நிலைமையைச் சமாளித்து விட்டோம். அவர்கள் சொன்ன எதைப்பற்றியுமே கவலைப்படாமல், நாங்கள் அந்த மீன் கறியையே தொடர்ந்தும் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். எங்களுக்குத் தெரியும், நாங்கள் தற்போது இருக்கும் நிலையில் எமது அமைப்பால் இதற்குமேல் எதுவும் செய்யமுடியாது என்று. வருவதை ஆகவேண்டும். அப்போது சூரிய கதிர்-2 நடக்கவில்லை. படையினர் வலிகாமம் முழுவதும் நிறைந்து வழிந்தனர். அசோகாவின் கொம்பனி மண்டானில் நிலையமைத்து நின்றது. அவர்களுக்கு அப்பால் தொண்டமானாறுவரையும் ஜெயந்தன் படையணியின் கொம்பனி ஒன்று தாத்தா அவர்களுடன் நின்றது. இதற்கு முதல் வருடம் தான் மட்டக்களப்பிலிருந்து அவர்கள் வந்திருந்தார்கள். இடம் அவர்களுக்குப் புதிது. இங்கிருந்த நிர்வாக அலகுகள் எல்லாமே புதிது. யாரிடம் என்ன உதவி

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

பாதுகாப்பை நாங்கள் உறுதிப்படுத்திச் சொன்னபின்னரே, உணவு ஊர்தி வரும். உணவு ஊர்தி உணவை இறக்கிவிட்டுப் போகும் இடத்துக்கும் காவல் விடுவோம். காப்பரணிலிருந்து உணவு எடுக்க வருபவர்கள் தேடுதல் செய்தவாறே வந்துபோகவேண்டும்.

வேலைக்கு வருகின்ற மக்கள் எங்களுக்கு வருகின்ற உணவையே சாப்பிடுவார்கள், எங்களுடைய உணவு ஸ்ரீலங்கா அரசு தமிழர் மீது விதித்திருந்த பொருளாதாரத் தடையின் கொடுமையை எங்களுக்கு உணர்த்திக்கொண்டிருந்தது. ஒவ்வொருநாளும் மீனும், பூசனிக்காய் கறியும் வரும். ஆனால் அது மிகவும் சுவையாக சமைக்கப்பட்டிருக்கும். மீனென்றால், ஏதோ பெரிய மீன் இல்லை. நெய்த்தெலியைவிடப் பெரிது. சூடையை விடச் சிறிது. எங்களுக்கு அதன் பெயர் தெரியாது.

ஒரு நாள் முழங்காவில், நாச்சிக்குடாப் பகுதிகளிலிருந்து கடற்றொழிலாளர்கள் வேலைக்கு வந்திருந்தார்கள். மதிய உணவை நாம் பரிமாறினோம். தட்டிலிருந்த உணவைக் கொஞ்ச நேரம் உற்றுப்பார்த்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். பின் எங்களை நிமிர்ந்து பார்த்து.

“நாங்கள் மீன் சாப்பிடமாட்டம் பிள்ளை” என்றார்கள். அன்று அவர்கள் ஏதும் விரதமாக இருக்கலாம் என்று நினைத்தவாறே பூசனிக்கறியோடு மட்டும் உணவைக் கொடுத்துவிட்டு, அவர்கள் சாப்பிடத்தொடங்கியதும்எமதுவிசாரணையைத் தொடங்கினோம்.

“ஏனய்யா, இண்டைக்கு விரதமோ” “இல்லைப் பிள்ளை. உந்த மீனையோ நீங்கள் சாப்பிடுறனீங்கள்?”

“ஒவ்வொருநாளும் இதைத்தான் சாப்பிடுகிறம். ஏன்?”

“இந்த மீனை நாங்கள் சமைக்கிறதில்லை. சனமும் வாங்கிறதில்லை. மற்ற மீனை எடுத்துக்கொண்டு, இதை நாங்கள் கரையில்கொட்டிவிடுவம். அதுதன்ரபாட்டுக்குக் கிடந்து காயும். கொஞ்ச நாளா இந்த மீனை இயக்கம் வாங்குது பிள்ளை. சும்மா எறியிற மீனை இயக்கம் கேட்ட உடனே பத்து ரூபாவுக்குச் சனம் குடுக்குது. ஏன் இவங்கள் இதை வாங்கிறாங்கள் எண்டு ஒருவருக்கும் தெரியாது. கோழித்தீனுக்கு வாங்கினம் போல எண்டு தான் நாங்கள் நினைச்சம். இப்பதானே விளங்குது மீன் எங்க வருகுது எண்டு.”

எங்களுக்குச் சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை.

“மீனைக் கொட்டி, நீங்கள்

மகிழ்வாக ஏற்றுக்கொள்வதற்கு ஏற்ப எமது மனதைத் தயார்ப்படுத்திக் கொண்டோம். எல்லாவற்றுக்கும் மேலாக மிகவும் சலிப்பைத் தந்த விடயம் ‘தேடுதல்’ தான். அங்கு நின்ற எல்லோருமே ஆளை ஆள் சந்திக்கும் போது கதைப்பதற்கு வேறு விடயங்கள் அற்று, ‘கிளியறிங், கிளியறிங்’ என்றே கதைத்துக் கொண்டிருந்த அந்தி நாட்களில் எமக்கு மகிழ்ச்சியைத் தந்த விடயம் ஒன்றும் இருந்தது.

அங்கு நின்ற பாலை மரங்களும், விளா மரங்களும் பழுத்துச் சொரியத் தொடங்கியிருந்தன. விளாம்பழம் பொறுக்குவதற்காகத் தேடுதல் நடவடிக்கையில் நாம் இறங்கிய சுவையான நாட்களெல்லாம் இதன் பின்னர் வந்துபோயின.

யைக் கேட்பது என்ற விடயங்கள் இன்னமும் அவர்களுக்குப் பழக்கப்படவில்லை.

ஒரு நாள் தற்செயலாக அசோகா அந்த விடயத்தை அறிந்தார். தாத்தாவின் கொம்பனி படுப்பதற்குப் பாய்கள் போதாமல், நிலத்தில் படுப்பதையும், ஊர்தியால் இறக்கப்படும் உணவை எடுத்துக் காப்பரண்களுக்கு வழங்குவதற்குப் பைகள் இன்றிச் சிரமப்படுவதையும் அறிந்த அசோகா, தன் கொம்பனியிடமிருந்த பாய்கள், உரைப்பைகள் முழுவதையும் வாங்கி, தேவைக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திருப்பிக் கொடுத்துவிட்டு, ஏனைய பாய்களையும் உரப்பைகளையும் தாத்தாவிடம் கொடுத்திருந்தார். எல்லா உறவுகளை



எங்களுக்கு இடப்புறம் பெரிய மடு நோக்கிய திசையில் நின்ற ஜெயந்தன் படையணிப் பொறுப்பாளராக நின்றவர் லெப்.கேணல் சிவமோகன். சிவமோகனின் ஆட்கள் பெரிய மடுவில் மக்கள் கைவிட்டுப் போன வீடுகளிலிருந்த வாழைக்குலைகளை அறுத்து, புகையடித்துப் பழுக்க வைத்து, தோள்களிலே காவிவந்து எங்களின் கொம்பனி முழுமைக்குமே தரத்தொடங்கினார்கள். வாரத்தில் இரு முறையாவது அவர்களின் வாழைப்பழம் வரும். எங்களுக்கும் அவர்களுக்குமான உறவு பலமடைந்தது. நாங்கள் மனம்விட்டு ஒருவரின் துன்பங்களை மற்றவர்கள் பகிர்ந்து கொண்டோம்.

பெரியமடுவின் குடியிருப்புப் பகுதியை அண்மித்து நின்றதால் அவர்களுக்கு நீர்த் தட்டுப்பாடு இருக்கவில்லை. கிணறுகள் தாராளமாக இருந்தன. குடிநீருக்கு நாம் பட்டுக் கொண்டிருந்த பாட்டை அறிந்துகொண்ட அவர்கள், எங்கள் பக்கம் இருந்த தங்களுடைய கடைசிப் பிளாட்டூனில் பாரியகொள்கலன்கள்இரண்டில்கிணற்று நீரை நிறைத்து, கொதிக்கவைத்துத் தந்துகொண்டிருந்தார்கள்.

இந்த நேரத்தில் பழைய கதை ஒன்றையும் நாம் சொல்லியே

யும் மட்டக்களப்பில் விட்டுவிட்டுச் சண்டைக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த அவர்கள் எம்மவர்களின் உதவியால் நெகிழ்ந்து போனார்கள். எங்களுக்கும் அவர்களுக்குமிடையிலான நல்லுறவு ஒன்று அப்போதே ஆரம்பமாகிவிட்டிருந்தது.

பெரியமடுவிலிருந்த பாலப் பழங்களெல்லாம் உணவுப் பகுதியினரின் ஊர்திகளில் ஏறி எங்களிடம் வந்துசேர்ந்தன. காப்பரண்கள் முழுவதும் பலாப்பழ வாசம்.

“மணத்திலேயே நாங்கள் நிக்கிற இடம் ஆமிக்காரனுக்குத் தெரியப்போகுது”

என்று சாந்தகுமாரி பம்பலடிப்பார்.

படையினரின் பதுங்கித்தாக்கும் அணிகள் பலதடவைகள் ஊடுருவியிருந்தன. அவர்களைப்போலவே நாமும் ஊடுருவியிருந்தோம். சாந்தகுமாரியின் சொந்த இடம் மன்னார் மாவட்டம். எனவே வேவுக்காகச் சிலரைக் கூட்டிக்கொண்டு சாந்தகுமாரி எமது முன்னரங்கைக் கடந்துபோனார். படையினரின் நிலைகளைத் தேடப் போனவர்களைக் கடைசியில் நாம் தேடவேண்டியதாயிற்று.


### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

தொடர்வான்...

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 300. | வீ.வே.திருமகள் | யோகேஸ்வரி பாலசுப்பிரமணியம் | யாழ்ப்பாணம் | 1997.09.12 | புதூர் ஜெயசிக்குறுய் |
| 301. | லெப்.தாரகை | இந்திராணி இராமையா | யாழ்ப்பாணம் | 1997.09.12 | புதூர் ஜெயசிக்குறுய் |
| 302. | கப்டன்.வாகீஸ்/வாகீஸ்வரி | புவனேஸ்வரி வைரமுத்து | கிளிநொச்சி | 1997.09.30 | புளியங்குளம் ஜெயசிக்குறுய் |
| 303. | லெப்.மதியழகி | வசுதராணி பரராசசிங்கம் | யாழ்ப்பாணம் | 1997.10.06 | கரப்புக்குத்தி ஜெயசிக்குறுய் |
| 304. | மேஜர்.மீனா/மீனாட்சி | மல்லிகா நாராயணன் | மன்னார் | 1997.10.06 | கரப்புக்குத்தி ஜெயசிக்குறுய் |
| 305. | 2ம்.லெப்.குமாரி | ரோகினி தவபாலன் | கிளிநொச்சி | 1997.10.07 | கரப்புக்குத்தி ஜெயசிக்குறுய் |

# ஜோன் கெரியின் இலங்கைப் பயணமும், வெளிவராத உண்மைகளும்...

2004ஆம் ஆண்டு சுனாமி அழிவுகளின் பின்னர் அமெரிக்க இராஜாங்கச் செயலாளராகவிருந்த கொலின் பவல் இரண்டு முன்னை நாள் அமெரிக்க அதிபர்களுடன் இலங்கை வந்தார். அதுவும் சுனாமி அழிவுகளைப் பார்வையிடுவதற்காக அரசியல் வட்டாரங்களின் கண்களில் சிக்காமல் பவல் இலங்கை வந்ததன் பின்னர், இப்போது ஜோன் கெரி இலங்கைக்கான விஜயத்தினை அண்மையில் மேற்கொண்டிருந்தார். 2004ஆம் ஆண்டு சுனாமியால் இலங்கை மட்டும் பாதிக்கப்படவில்லை. இந்தோனேசியாவே மிகவும் கோரமாகத் தாக்கப்பட்ட நாடாகும். ஜோர்ஜ் புஷ், பில் கிளின்டன் மற்றும் கொலின் பவல் ஆகியோருக்கு இலங்கையில் திடீர் மனிதாபிமானம் தோன்றியதில் தமது முழு வலுவையும் இலங்கையிலேயே செலுத்த ஆரம்பித்தனர்.



சுனாமி தாக்கிய பின்னர் இலங்கைக்குச் சென்ற முதலாவது இராஜாங்கச் செயலாளர் கொலின் பவல், 2004ஆம் ஆண்டு இலங்கையில் உலாவந்த இக் குழு உலகம் முழுவதும் எத்தனை குழந்தைகளையும், கர்ப்பிணித் தாய்களையும், முதியோரையும் கொன்று போட்டிருக்கும்? இலங்கைச் சுற்றுப் பயணத்தில் அவர்கள் தெரிந்தெடுத்த 'ஜனநாயகவாதி' தான் மஹிந்த ராஜபக்ஷ. இந்த மூவரும் இலங்கை சென்ற பின்னர் தான் ராஜபக்ஷ ஒரு தன்னார்வ நிறுவனத்தை ஆரம்பித்தார். அப்போது யாரும் தேடுவாரற்று சந்திரிக்காவின் கொல்லைப்புறத்தில் ஒடுங்கியிருந்த மஹிந்த, ‘ஹெல்பிங் ஹம்பாந்தோட்ட’ என்ற தன்னார்வ நிறுவனத்தை ஆரம்பித்தார். அதே காலப்பகுதியில் இலங்கை சென்ற இன்னொரு 'ஜனநாயக காவலன்' பான் கீ மூன். இவர் இந்தோனேசியாவிற்கு மேலால் பறந்து சென்று இலங்கையில் தரித்த போது, தென்கொரியாவின் வெளிநாட்டமைச்சராகவும், அமெரிக்காவின் விசுவாசியாகவும் இருந்தார். இலங்கையின் பல பாகங்களில் சுனாமி தாக்கிய போதும் பான் கீ மூன் ஹெல்பிங் ஹம்பாந்தோட்டவிற்கு மட்டுமே பணம் கொடுத்திருக்கின்றார்.

ராஜபக்ஷவின் தேர்தல் செலவிற்குப் பணம் வழங்கிய பான் கீ மூன், 2004 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இப்பணம் மக்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படவில்லை. மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றிபெற்று இலங்கையின் ஜனாதிபதியாவதற்குப் பயன்பட்டது. 2005,2006 காலப்பகுதிகளில் இத் தகவலை வெளிக்கொண்டுவந்த ஊடகவியலாளர்களை மஹிந்த அரசு 'போட்டுத் தள்ளிவிட்டது'. (சண்டே லீடரில் ஆதாரத்துடன் வெளியான இத்தகவல்களை இப்போதும் பார்வையிடலாம்) பின்னர் அமெரிக்கா மற்றும் இலங்கை அரச ஆதரவுடன் பான் கீ மூன் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் செயலாளராகிறார்.

2009 ஆம் ஆண்டில் அமெரிக்கா மற்றும் ஐ.நா சபை ஒத்துழைப்புடன் இனப்படுகொலை நடைபெறுகிறது. 2009 ஆம் ஆண்டின் பின்னர் புலம்பெயர் அரசியல் தலைமைகளும், ஈழத்தின் தமிழ் அரசியல் தலைமைகளும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் வந்துவிடுகின்றன. இனப்படுகொலையின் போது போர்க்குற்றங்கள் நடந்ததாகவும், அவற்றிற்கு தண்டனை பெற்றுத்தரப்போவதாகவும் அமெரிக்க அரசும், அதன் நேச நாடுகளும் ஆடிய நாடகத்தில் தமிழ் அரசியல் தலைமைகள் உள்வாங்கப்பட்டு, அமெரிக்காவின் ஒட்டுக்குழுக்களாக மாறிப்போயின. போர் வெற்றியில் அளவிற்கு அதிகமாக அதிகாரங்களைக் குவித்த ராஜபக்ஷவை நீக்கிய அமெரிக்கா, இப்போது தமிழ்த் தலைமைகள் போல தமது பேச்சைக் கேட்கும் இலங்கை அதிகாரவர்க்கத் தலைமையை உருவாக்கியுள்ளது.

அமெரிக்காவிற்கும், இலங்கை அதிகாரவர்க்கத்திற்கும் கிடைத்த இந்த இணைவின் பின்னணியில் தான் ஜோன் கெரியின் இலங்கைப் பயணம் அமைந்திருந்தது. 2004ஆம் ஆண்டு இலங்கையை மையமாகக்கொண்டு ஆரம்பித்த இலங்கையை நோக்கிய அமெரிக்காவின் பயணம், ஜோன் கெரியோடு நிறைவடையப்போவதில்லை. இதன் ஆழம் அதிகமானது. பிரித்தானியாவிலிருந்து வெளியாகும் கார்டியன் இதழ் ஜோன் கெரியின் பயணம் தொடர்பாகத் தனது கட்டுரை ஒன்றில், “கிழக்கு ஆசியாவின் உற்பத்தி மையங்களுக்கும் ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் கொள்வனவுச் சந்தைக்கும் இடையேயான கடல்வழிப் பாதையின் முக்கிய புள்ளியாக இலங்கை அமைந்திருப்பதால், இலங்கையுடன் உறவுகளை வலுப்படுத்தும் கட்டாயத்திற்கு அமெரிக்கா தள்ளப்பட்டுள்ளது என்று” கூறுகிறது.

கார்டியனின் இக் கூற்றில் ஓரளவு உண்மை தெரிந்தாலும், தெற்காசியாவையும் குறிப்பாக அதன் கடற்பிராந்தியத்தையும் இராணுவ மயமாக்கும் அமெரிக்காவின் வெறித்தனமான திட்டம் இவற்றின் ஆழத்தில் காணப்படுகிறது. கடற்பிராந்தியங்களை மக்கள் அணுக முடியாத வலயங்களாக மாற்றும் திட்டம் அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்படுகின்றது. திருகோணமலை, மன்னார் கடற்படுக்கைகள் மின் உற்பத்தி மற்றும் எரிவாயு அகழ்வு என்ற பெயரில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் தமது இராணுவ நலன்களை அமெரிக்கா தெளிவாகக் கூறியுள்ளது. இலங்கையில் தமது நலன்களை இராணுவ ரீதியாக நிலை நாட்டுவோம் என இலங்கையில் வாழும் அனைவரையும் அமெரிக்க அரசு மிரட்டியுள்ளது.

### அமெரிக்கப் போர்க்கப்பலில் இலங்கை அதிகாரிகள்

ஒரு பக்கத்தில் தமது நலன்களை உறுதிப்படுத்தும் மைத்திரி அரசும், மறுபக்கத்தில் தமது தமிழ்க் கைக்கூலிகளும் இருக்கும் போது அமெரிக்காவின் இலங்கை மீதான ஆக்கிரமிப்பிற்கு எதிராகக் குரல்கொடுக்க யாரும் இல்லாத நிலை தோன்றியுள்ளது. இச் சூழலில் தான் அமெரிக்க அரசு இலங்கையிலிருந்து 225 கடல் மைல் தொலைவில் தனது விமானம் தாங்கிய இராணுவக்கப்பல் ஒன்றை கடந்த மாத நடுப்பகுதியில் நங்கூரமிட்டது. அணுசக்தியில் இயங்கும் போர் விமானங்களை ஏற்றிச்செல்லும் இக் கப்பலைப் பார்வையிட என இலங்கை கடற்படையின் முக்கிய அதிகாரிகளை அமெரிக்க அரசு விமானத்தில் அழைத்துச் சென்றுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளை ஆக்கிரமித்த போதும், ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்த போதும் USS Carl Vinson CVN90 என்ற இக் கப்பலே அனுப்பிவைக்கப்பட்டது. உலக மக்களின் மரண ஓலங்களை இக்கப்பல் பல தடவை கேட்டிருக்கும் என்பதில் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. ஜோன் கெரி இலங்கை வருவதற்கு சற்று முன்பதாக, ஏப்ரல் 19ம் திகதி USS Carl Vinson CVN90 போர் விமானம் தாங்கிக் கப்பலைப் பார்வையிடுவதற்காக இலங்கையின் கடற்படைத் தளபதி ஜெயந்த பெரேரா உட்பட பலர் அழைத்துச் செல்லப்பட்டனர். உலங்கு வானூர்தியில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து அழைத்துச்செல்லப்பட்ட அதிகாரிகளுக்கு அமெரிக்க விமானப்படை தமது போர்க்கப்பலை முதலில் சுற்றிக்காட்டியது.

மத்திய கிழக்கில் இராணுவ விநியோகத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பும் வழியிலேயே இலங்கைக் கடற்படைக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. கப்பலில் நடைபெற்ற கடற்படைத் தளபதிகளுக்கு இடையேயான சந்திப்பில் இரண்டு பகுதிகளும் கட்டுப்படுத்தவேண்டிய கடற் பிரதேசங்கள் தொடர்பான ஆலோசனைகள் நடத்தப்பட்டன. இச்சந்திப்பில் எட்டப்பட்ட உடன்பாடுகளின் அடிப்படையிலேயே ஜோன் கெரி இலங்கைக்குப் பயணம் செய்தார். இப்பயணத்தின் பின்னணியிலுள்ள நாசகார நோக்கங்களை மூடி மறைத்த தமிழ் ஏகாதிபத்திய ஒட்டுக்குழுக்களும், அவற்றின் ஊடகங்களும் ஜோன் கெரி இலங்கைசென்றுபோர்க்குற்றவிசாரணை நடத்தப்போவதாக மக்களை ஏமாற்றின.

இலங்கை-அமெரிக்க கடற்படைத் தளபதிகளுக்கு இடையேயான சந்திப்பின் பின்னர், இலங்கை அரசின் நடவடிக்கைகளைத் தாம் ஆதரிப்பதாக அமெரிக்க அரசதுறைப் பேச்சாளர் அறிக்கை விடுத்தார். பின்னர் இலங்கை அரசுடன் உறவை வலுப்படுத்தும் நோக்குடன் ஜோன் கெரி இலங்கை செல்வதாக தகவல்கள் வெளியிடப்பட்டன. இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஜோன் கெரி இலங்கையில் ஜனநாயகம் பூத்துக் குலுங்குவதாகப் பூரித்துப் போனார்.

### வவுனியாவில் அமெரிக்க அரச படைகள்

இந்துசமுத்திரப் பிராந்தியத்தை இராணுவ மயமாக்குவதும், வட-கிழக்கில் சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையை அழிப்பதும், இலங்கையை தெற்காசியாவிற்கான இராணுவ மையமாகப் பயன்படுத்துவதுமே அமெரிக்க அரசின் உடனடி நோக்கம். இலங்கையில் ஏற்கனவே பலாலி, வவுனியா போன்ற பகுதிகளில் அமெரிக்க இராணுவத்தின் ஆசிய பசுபிக் கட்டளையகத்தின் இராணுவப்பிரிவுகள் நிலைகொண்டுள்ளன. ராஜபக்ஷ அரசும், மைத்திரி அரசும் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையை வெளியிடவில்லை.

கண்ணிவெடி அகற்றும் பணியில் அமெரிக்க இராணுவம் ஈடுபட்டுள்ளதாகக் கூறுகிறது. மத்திய கிழக்கு நாடுகள் உட்பட அமெரிக்கா கால்பதித்த உலகின் அத்தனை பிரதேசங்களும் இரத்த வெள்ளமாகக் காட்சி தருகிறது. ஜோன் கெரி அமெரிக்க இராஜாங்கச் செயலாளராகப் பதவியேற்றதும் மத்திய கிழக்கு நாடுகளில் கவனம் செலுத்திய அளவிற்கு ஆசியாவில் கவனம் செலுத்தவில்லை எனவும் இனிமேல் ஆசிய நாடுகள் மீதான கவனம் முக்கியமானதாக அமையும் எனக் குறிப்பிட்டார்.

### டியாகோ கார்சியாவில் அமெரிக்க இராணுவத்தளம்

பிரித்தானியாவின் ஆக்கிரமிப்பிலிருக்கும் டியோகாகார்சியா தீவில் அமைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க இராணுவத்தளம் 2016 வரை மட்டுமே செயற்படும். பிரித்தானிய அரசின் குத்தகை 2016 ஆம் ஆண்டுடன் முடிவிற்கு வருகிறது, அதன் பின்னர் இலங்கையை இராணுவத்தளமாக்கும் நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளதா? என்ற சந்தேகங்கள் பல்வேறு தரப்பாலும் தெரிவிக்கப்படுகின்றது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தால், அங்கு பல்வேறு பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து சிவில் நிர்வாகத்தை நடத்திவரும் பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியையும், அதன் ஆயுதப்படையையும் அழித்துவிட முடியவில்லை. போராட்டம் சரியான திசையில் திட்டமிடப்பட்டால் அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கு எதிரான மக்கள் எழுச்சியைத் தோற்றுவிக்க முடியும். மக்களிடமிருந்து உண்மைகளை மறைக்கும் ஊடகங்களும், ஏகாதிபத்திய ஒட்டுக்குழுக்களும்மக்கள்மத்தியிலிருந்து அன்னியப்படுத்தப்பட வேண்டும். அமெரிக்க இராணுவம் நிலைகொண்ட அனைத்து நாடுகளிலும் கலாச்சாரத்தைச் சீர் குலைத்திருக்கிறது. தென்கொரியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற நாடுகளில் அமெரிக்க இராணுவம் பாலியல் தொழிலை அறிமுகப்படுத்திற்று. போதைப்பொருட்கள் பாவனைக்கு வந்தன. பிரதேசங்கள் சிதைக்கப்பட்டன. ஆக, அழிக்கும் இராணுவத்துடன் ஒட்டிக்கொண்டு மக்களைக் காட்டிக்கொடுக்காமல் அதற்கு எதிரான மக்கள் சார்ந்த புதிய தந்திரோபாயத்தை வளர்த்துக்கொள்ளவேண்டும். தவறினால் சாம்பல் மேடுகள் மட்டுமே எஞ்சியிருக்கும்.

அமெரிக்கா தனது நேச நாடுகள் தவிர்ந்த அதிகமாக உறவு வைத்துக்கொள்ளும் நாடுகள் அனைத்திலும் இரத்த ஆறு பெருக்கெடுத்திருக்கிறது. ஈரான், ஈராக், லிபியா, மாலைதீவு என்ற ஒரு பட்டியலையே போட்டுக்காட்டலாம். உலகைக் கொள்ளையடிக்கும் பல்தேசியப் பெரு நிறுவனங்களின் தலைமையகமான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பயங்கரவாதம் உலகின் மூலை முடுக்கெல்லாம் படுகொலைகளை நடத்தியிருக்கின்றது. பல்தேசிய நிறுவனங்களின் பசியைத் தீர்ப்பதற்கு அமெரிக்க ஆக்கிரமிப்பு இராணுவம் ஆயிரமாயிரமாய் மனித உயிர்களைத் தீனியாகக் கொடுத்துள்ளது.

உலகில் மக்கள் வெற்றிபெற்ற எல்லாப் போராட்டங்களும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களாகவே அமைந்திருக்கின்றன. மக்களின் உரிமைக்கான போராட்டங்களை அழிக்கும் கருத்தியல் மற்றும் இராணுவக் கொலைக்கருவிகளை அமெரிக்காவே உலகில் முதல் தடவையாக அறிமுகப்படுத்திற்று. தன்னார்வ நிறுவனங்கள், உளவு அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், உலகவங்கி, நாணய நிதியம் போன்ற பொருளாதார அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் நிறுவனம், சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற மனித உரிமை அமைப்புக்கள் என்று நூற்றுக்கணக்கான உப கூறுகள் அமெரிக்க ஏகாதிபத்தியப் பயங்கரவாதத்தின் முகவர் நிறுவனங்களாகச் செயற்படுகின்றன.

புரட்சிகளையும், போராட்டங்களையும் அழிப்பதற்கு 'எதிர்ப்புரட்சி அமைப்புகளை' அமெரிக்காவே தோற்றுவித்தது. புரட்சிகளைத் தனது முகவர்கள் ஊடாகத் தலைமைதாங்கி அழித்தது. உலகத்தில் நாகரீமடைந்த சமூகங்கள், மக்கள் பற்றும், மனிதாபிமானமும் உடையவர்கள் அமெரிக்காவை எதிரியாகவே எண்ணுகின்றனர். தமிழர்கள் மட்டும் ஐ.நாவில் அமெரிக்கா கொண்டுவரப்போகும் போர்க்குற்ற அறிக்கையை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டு உரிமைகளைக் கோட்டைவிட்டார்கள். மத்திய கிழக்கு நாடுகளில் இதுவரை களமாடிய அமெரிக்கா அங்கு ஆயிரக்கணக்கான அகதிகளைத் உருவாக்கியது.

தொடரும்...

[illegible]

# சர்வதேச பொறிமுறைக்குள் இலங்கையின் அரசியல்



திம்பு முதல் ஒஸ்லோ என ஆரம்பித்து நிறைவடைந்த அனைத்துப் பேச்சுவார்த்தைகளிலும் சர்வதேசத்தின் தலையீடு காணப்பட்டது. இதற்கான புறக்காரணிகளை பலவேறு வகைகளாகக் கூறினாலும், இலங்கைப் பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கு எந்தவொரு சர்வதேச அரசுகளும் இணங்கவில்லை. 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் இலங்கைத் தீவில் இருக்கக்கூடிய தமிழ்மக்களுக்கு நிரந்தரமான தீர்வுகள் கிடைக்கும் என்பதே அனைவருடைய நிலைப்பாடாகவும் இருந்தது. ஆனால் அதற்குமாறாக காலணித்துவ நாடுகளினால் இலங்கையில் நிரந்தர சமாதானத்தினை எட்டமுடியாமல் போனது. குறிப்பாக இலங்கை, இந்தியா பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா, நோர்வே, பிரான்ஸ், தென்னாபிரிக்கா, ரஷ்யா என பல நாடுகள் இலங்கை அரசியலில் தீவிரம் காட்டியது. ஒரு கட்டத்தில் தமிழ் இனத்திற்கு எதிரான யுத்தத்தினை முற்றுகைக்குக்கொண்டுவர ரஷ்யா இலங்கையரசிற்கு போதிய ஆயுதங்களை வழங்கியது. அதேநேரம் விடுதலைப்புலிகளுக்கும் வழங்கியது. இதனால் தமது ஆயுத விற்பனையில் ரஷ்யா தீவிரம் காட்டியது. போராட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் அவர்களது தேசிய பாதுகாப்பிற்காக இலங்கையின் ஆயுதக்குழுக்களை இந்தியா பயன்படுத்தியது.

அமெரிக்காவினைப் பொறுத்தவரையில் இலங்கையின் கல்வித்துறையில் முன்னேற்றகரமானவர்களுக்கு உயர் கல்வி வசதியினை வழங்கி அவர்களை தனதுதேவைக்கேற்ப மாற்றிக்கொண்டது. பாகிஸ்தான் அரசு ஆயுதங்களையும், ஆயுதக்கப்பல்களையும் இலங்கை அரசிற்கு நன்கொடையாக வழங்கியது. இவையனைத்தும் ஏன் என பார்க்கின்ற பொழுது, இந்தநாடுகளுக்கு இலங்கையில் என்னதேவையாக இருக்கின்றது? பூகோள ரீதியாக உலக மகாயுத்தம் என்ற ஒன்று இனி மேலும் இடம்பெறுமாகவிருந்தால் இலங்கையினது தளமானது சர்வதேச ரீதியில் மிகவும் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. 1942ம் ஆண்டில் இடம்பெற்ற 02ம் உலக மகாயுத்தத்தின்பொழுது, கொல்லப்பட்ட 100 பிரித்தானிய வீரர்களின் கல்லறைகள் இன்னமும் இலங்கையின் திருகோணமலைப்பகுதியில் காணப்படுகின்றது.

திருகோணமலை துறைமுகமானது இயற்கையானது என்பதனால் கப்பல்கள் தரிப்பதற்கும், கப்பல்கள் கரையினை நோக்கி வருவதற்குமான வசதிகளைக்கொண்டிருக்கின்றது. இத்தனை வசதிகளைக்கொண்ட இப்பிரதேசத்தில் கால்பதிப்பது யார்? என்கின்றதொரு கேள்வியும் இந்த நாடுகளினால் எழுப்பப்பட்டதொன்று. இலங்கையின் யுத்தத்தினை மேற்கோள்காட்டி, அதன் தூதுவர்களாக செயற்படுகின்றவர்கள் அனைவரும் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத்துறைமுகத்தினை மையமாகக்கொண்டே காய்நகர்த்தல்கள் இடம்பெற்றிருக்கின்றன. இதற்கு முன்னர் அமெரிக்காவின் இராஜாங்க செயலாளராக கடமையாற்றிய ஒபே பிளேக்கும், தற்பொழுது இலங்கைக்கு வருகைதந்த ஜோன் கெரியும் சர்வதேச யுத்த முன்னெடுப்புக்களில் பாரிய புலனாய்வு மற்றும் இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள். இவர்களது செயற்பாடுகளின் காரணமாகவே அந்நாட்டிற்குள் பிரச்சினைகளும், சமாதானமற்ற நிலைமைகளும் தோற்றம் பெற காரணமாக அமைந்தன. அதேபோன்று தற்பொழுதும் கூட இலங்கை அரசுடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களை முன்னெடுப்பதாகவும் இலங்கையின் இனப்படுகொலைகள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் தாம் முக்கிய பங்கினை வகிப்பதாகவும் தற்போதைய அமெரிக்க இராஜாங்க செயலர் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்குத் தெரிவித்திருக்கின்றார். இவர்களைக் கொண்டு அவர் காய்நகர்த்தல்களை மேற்கொள்கின்றார் எனத்தெரிகின்றது.

இலங்கையில் அமெரிக்காவினது தலையீடுகளை இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக இந்தியா மற்றும் சீனாவினது செயற்பாடுகளை எதிர்த்த அமெரிக்க அரசானது, ஏதோவொரு வகையில் இவர்களை புறந்தள்ள வேண்டும் என்ற நோக்கில் மீண்டும் இலங்கையில் தனது ஆதிக்கத்தினை செலுத்தியுள்ளது. இதற்கிடையில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் உத்தியோகபூர்வமாக இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டு பாராளுமன்றில் கூட உரையாற்றிச்சென்றிருக்கின்றார். அந்த அளவில் இலங்கை அரசின் மேல் இவர்கள் கொண்டுள்ள பற்றுதலையா இவ்விடயம் வெளிப்படுத்துகின்றது என்றால் அதுவல்ல. வர்த்தக ரீதியாக இவர்களது அணுகுமுறைகளை தக்கவைத்துக்கொள்வதற்காகவும் ஆசியப்பிராந்தியத்தில் தாம் ஒரு வல்லரசு நாடாக காணப்படவேண்டும் என்பதற்காகவுமேயாகும்.

இலங்கையில் இடம்பெற்ற கொடிய யுத்தம் தொடர்பில் மௌனம் வெளிக்காட்டிய நரேந்திரமோடியினது நோக்கம், தமது தொடர் அரசியலை இலங்கையில் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்பதேயாகும். இதற்கு இணையாக சீன அரசும், அதன் ஜனாதிபதியும் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தனர். அவர் வருவதற்கு முன்பதாகவே இலங்கையின் கடற்பிராந்தியத்தில் அவர்களது நீர்மூழ்கிக் கப்பல் நிறுத்தப்பட்டிருந்தது. இதற்கான அனுமதியினை வழங்கியவர்கள் யார்?இந்த அரசியல் பொறிமுறைக்குள் தான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் சிக்கிக்கொள்ளவேண்டிய நிலை உருவானது.

சீனாவின் போர்க்கப்பல்கள் தொடர்பில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்கள் நிலவிய காரணத்தினால், இந்தியா இலங்கையில் தனது ஆதிக்கத்தினை செலுத்தவேண்டிய நிலை உருவானது. சீன அரசானது அமெரிக்கா, இந்தியாவினை மீறி இலங்கைத்தீவில் தனது செயற்பாட்டினை நிலைநிறுத்தியுள்ளது. ஆகவே தான் மஹிந்த ராஜபக்ஷவும், அவர் சார்ந்தவர்களும் அரசியலில் காலடிஎடுத்துவைக்க முடியாத அளவிற்கு இந்த நாடுகளது புலனாய்வுத்திட்டங்கள் நகர்த்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. தற்போதும் இந்தியா தனது நலன்கருதி, இலங்கையில் 13வது திருத்தச்சட்டத்தினை நடைமுறைப்படுத்த தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தது. ஆனால் ஜே.ஆரினால் கொண்டுவரப்பட்ட நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை இதற்கு தடைக்கல்லாக காணப்பட்டது.

ஒரு நாட்டின் ஜனாதிபதி தான் நினைத்ததை செயற்படுத்த முடியும் என்பதன் அடிப்படையிலேயே இந்த திருத்தச்சட்டம் அமைந்திருந்தது. இவ்வாறான நிலையில் ஒரு நாட்டு ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டு ஏனையோர் அனைத்து விடயங்களையும் சாதித்துக்கொள்ள இயலும். தற்பொழுது அதற்கு எதிர்மாறாக நிறைவேற்றதிகாரம்கொண்ட ஆட்சி முறை இல்லாதொழிக்கப்பட்டு 19வது திருத்தச்சட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது. 19வது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளரின் இலங்கைக்கான விஜயமும் இடம்பெற்றது. தமிழினத்தை வைத்து நகர்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்ற காய்நகர்த்தல்கள் சாத்தியமாகும் என்ற காரணத்தினால் அமெரிக்கா அதனை இலகுவில் எடுத்துக்கொண்டது. கூட்டமைப்பையும், வடமாகாண சபையின் உறுப்பினர்களையும் சந்தித்து அவர்களுடன் ஒரு நல்லாட்சி பற்றி தனது கருத்துக்களை முன்வைத்துள்ளது. தேசிய அரசாங்கம் அமைப்பதுதொடர்பில் ஏற்கனவே சிங்கள இனவாதக்கட்சிக்ள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போன்றோர் எதிர்த்துவரும் நிலையிலும், 19இனை அமுல்படுத்தியும் அதிலிருக்கக்கூடிய அதிகாரங்களை துரிதகதியில் வழங்குமாறும், இனப்படுகொலைகள், தமிழ் மக்களது பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் அமெரிக்காவின் ஜோன் கெரி அவர்களுக்கு கையளித்த ஆவணங்கள் தொடர்பாக, "எனக்கு நிறைய வேலைகள் வழங்கியிருக்கின்றீர்கள்" என ஜோன் கெரி அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறு அவர் தெரிவித்திருப்பதானது இன்னும் நீண்டகாலம் தனது உறவு மற்றும் தமது நாட்டின் தேசிய பாதுகாப்பினை வளர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பமாகவே கருதப்படுகின்றது. மோடி அவர்கள் "சிங்கள தீவினிற்கோர் பாலம் அமைப்போம்" என்று கூறியிருந்தார். அதுவும் அவர் இலங்கையில் நீண்டகால தேசிய அரசியலை மேற்கொள்ள வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றது. சீனாவை ஒருபுறம் வைத்தாலும், அமெரிக்கா மற்றும் இந்தியாவினைத்தாண்டி இலங்கையின் ஆட்சிமாற்றத்தில் தீர்வினைப்பெற்றுக்கொள்ள இயலாத சூழ்நிலை அன்றிலிருந்து இன்றுவரை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்களது பிரச்சினையில் தீர்வு என்பது இவர்களது அரசியல் சாணக்கியம். நடைமுறை யில் சாத்தியமாகாது. அவர்களது தேசிய பாதுகாப்பினைக்கருத்திற்கொண்டு இன்று வரை செயற்படுகின்றார்கள்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை பயங்கரவாதியாகவே தொடர்ந்தும் செயற்படுங்கள். ஒரு நாட்டிற்குள் இரு தேசம் அமையலாகாது எனக் கூறியபோது பிரபாகரன் அதனை ஏற்கவில்லை என்பதனாலும், பெண்டகன் தாக்குதலின் பின்னணியில் பயங்கரவாதிகள் செயற்பட்டனர் என்பதன் காரணமாகவும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தலைமையினால் இனி தமக்கு எந்தவித விமோசனமும் இல்லை என்பதன் காரணமாகவும், இந்த இருநாடுகளும் மஹிந்த அரசுடன் இணைந்து, மக்களின் அழிவினையும் பாராது, போராட்டத்தை அழிப்பதற்கு தமது சுயநலத்தோடு செயற்பட்டன. இன்று ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு என கூறிக்கொள்ளும் அரசு, இந்திய அரசின் பின்னணியில் தான் செயற்படுகின்றது. அதனையே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் விரும்புகின்றது. தற்போதைய த.தே.கூட்டமைப்பின் தலைவர்களும் இந்தியாவின் அடிவருடிகளாக செயற்படுகின்றனர். சர்வதேசத்தின் அரசியல் பொறிமுறைக்குள் இலங்கை அரசும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் மாக்சிச கொள்கை உடையவர்களும் அமெரிக்க இந்திய அரசுகளினால் உள்வாங்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். இதனைவிட தாய்லாந்து, மியன்மார் போன்ற சில நாடுகள் முஸ்லீம் இனத்தவர்களுக்கெதிராக இலங்கையில் போர்க்கொடியினை ஏந்துவதற்கு காரணங்களாக அமைகின்றனர். சர்வதேச நாடுகளின் சதிவலைக்குள் இருந்து இலங்கையரசு என்று மீளுகின்றதோ அன்றுதான் அவர்கள் சுயமாக தீர்வுகளை மேற்கொண்டு செயற்படமுடியும். ஒரு பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தினை ஆட்சிசெய்வது நடைமுறைகளில் இருக்கும் ஒன்று. ஆனால் அதே சிறுபான்மை இனம் பெரும்பான்மை இனத்தினை ஆண்ட வரலாறுகள் இல்லை. ஆனால் சமத்துவமான அதிகாரங்களுக்குட்பட்ட ஆட்சிமுறைகள் வழங்கப் பட்டிருக்கின்றது. சர்வதேசத்தின் தலையீடுகள் இல்லாது அந்த நாடு சுயமாக செயற்படுமாகவிருந்தால் சுமுகமான தீர்வுகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கும். ஒரு வரலாற்று ரீதியாக பெரும்பான்மை இனத்தினை சிறுபான்மை இனம் ஆட்சி செய்யும் அளவிற்கு விடுதலைப்புலிகளின் போராட்டம் வளர்ச்சி கண்டது.

இதனால் சிங்கள தேசம் அஞ்சி அமெரிக்கா, இந்தியா, சீனா, ரஷ்யா போன்ற நாடுகளிடம் அறைகூவல்விடுத்த நிலைதான் தமிழினத்திற்கெதிராக யுத்தம் முன்னெடுக்கப்பட காரணமாக அமைந்தது எனலாம். சர்வதேச நாடுக ளுடன் போரிட்டு அதில் கணிசமான பாதிப்புக்களை ஏற்படுத்திய பெருமை விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையே சாரும். விடுதலைப்புலிகளுடனான பேச்சு வார்த்தைகள் என்ற போர்வையில் அணுகுமுறைகளை ஏற்படுத்துவதற்கு நோர்வே அரசு சகுனியாக செயற்பட்டது.

விடுதலைப்புலிகளுக்கு சுகபோகவாழ்வைக்கொடுத்து, அவர்களது இராஜதந்திர நடவடிக்கைகளை முடக்குவதற்கு தீவிரம் காட்டியது இந்த நோர்வே. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் 14நாடுகள் இலங்கை அரசினை ஆதரித்து ஆயுத பொருளாதார உதவிகளை வழங்கின. சர்வதேச நாடுகளிடமிருந்து விடுதலைப்புலிகளுக்கு வந்த ஆயுதக்கப்பல்களும அமெரிக்கா காட்டிக்கொடுத்ததன் நிமித்தம் தாக்கப்பட்டது. இந்த ஆயுதக்கப்பல்கள் வன்னி மண்ணில் தரையிறக்கப்பட்டிருக்குமாகவிருந்தால் சர்வதேச நாடுகள் கூட விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட்டிருக்க இயலாது. சமாதான காலத்தின்போது கருணா–பிரபாவினை பிரித்ததும் நோர்வே அரசுதான். வலுவாகவிருந்த விடுதலைப்புலிகளின கட்டமைப்பு படிப்படியாக இந்த சர்வதேச நாடுகளால் உருக்குலைக்கப்பட்டது. அன்று தமிழினம் குறுகி இருந்த நிலைமாற்றப்பட்டு, இன்று சர்வதேச ரீதியாக தேடப்பட்டமைக்குக்காரணம் பிரபாகரனின் இனவிடுதலைப்போராட்டம்தான். சர்வதேச அரசியல் பொறிமுறை தமிழினத்திற்கு வைக்கப்படிருப்பது என்பது த.தே.கூட்டமைப்பிற்கும், தமிழரசுக்கட்சிக்கும், ஏனைய ஆயுதக்கட்சிகளுக்கும் நன்கு தெரியும்.

தற்பொழுது இணக்கப்பாட்டு அரசியல் எனக்கூறுவதும் இந்த சர்வதேசமே. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை இலங்கை அரசு மாத்திரமல்ல சர்வதேசமும் இணைந்தே மேற்கொண்டிருந்தது. அன்று படுகொலைகளை சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கின்றது. வன்னி மக்களை இறுதி நேரத்தில் காப்பாற்றுவார்கள். போராளிகளை மீட்டெடுப்பார்கள் என்று வதந்திகளாக கூறப்பட்டதே தவிர நடைமுறையில் ஒன்றும் சாத்தியமாகவில்லை. இன்று காலத்தின் தேவைகருதி இலங்கை அரசு சிந்திக்கவேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது.

08ம்பக்கம் பார்க்க...

நெற்றிப்பொறியன்


சவாலான களமுனைகளில் சாதனை செய்த புலிகளின் பிரிகேடியர் தீபன். தளபதி தீபன், ஈழத்தமிழர் விடுதலைப்போராட்டத்தின் பல வெற்றிக்களங்களின் நாயகனாக, தாக்குதல் ஒருங்கிணைப்பாளனாக, எதிரிக்குச் சவாலாக விளங்கிய தளபதி. அந்த வீரத்தளபதியை எதிரியின் கோழைத்தனமான, வஞ்சகத்தாக்குதலில் இழந்து 6 வருடங்கள் ஆகின்றன. புளியங்குளம், தீச்சுவாலை, ஓயாத அலைகள் எனப் பல சமர்களில் தளபதி தீபன் அவர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறிய சிங்களப்படைக்கு தீபன் எப்போதுமே ஒரு வெல்ல முடியாத சவால். எனவே நயவஞ்சகமாகத் தளபதியை வெல்லத் திட்டம் தீட்டிய சிங்களப்படை, 2009ம் ஆண்டு சமர்க்களத்தில், ஆனந்தபுரம் பெட்டிச்சமர் தாக்குதலைத் தலைமை தாங்கிய தளபதி தீபனின் வலிமைக்கு ஈடுகொடுக்க முடியாமல், அவரையும் அவரது படையணியையும் போரில் தடைசெய்யப்பட்ட நச்சுவாயு ஆயுதங்களைக் கொண்டு அழித்தது. போரியல் விதிகளுக்கு எதிராக, மானுடதர்மத்திற்கு முரணாக அமைந்த சிங்களப்படையின் இச்செயற்பாடானது, அவர்களின் இயலாத்தன்மையையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

தளபதி பிரிகேடியர் தீபன், ஈழப்போரின் பல இமாலய வெற்றிகளின் நாயகர்களாகப் பரிணமித்த தளபதிகளில் தனியிடம் பதித்த தளபதி. ஆர்ப்பாட்டமில்லாத ஆளுமையின் வடிவமாக விளங்கிய அவரின் பன்முகப்பட்ட தலைமைத்துவம் விடுதலைப் போராட்டத்தில் காத்திரமான வகிபாகத்தைக் கொண்டிருந்தது. காட்டிய தீவிரத்தன்மையும் செயற்பாடும் அவரை வன்னி மாவட்ட துணைத் தளபதியாக்கியது.

1990ம் ஆண்டு, தீவிரமடைந்த ஈழப்போர் இரண்டு காலப்பகுதியில், மிகவும் காத்திரமான போரியல் பங்கை வகித்து, முன்னுதாரணமாக விளங்கிய வன்னிக் களமுனையில், மைல்கற்களாக விளங்கிய பல சண்டைகளில் தளபதி பால்ராஜ் அவர்களிற்கு உறுதுணையாக தலைமைதாங்கிய பெருமை தளபதி தீபன் அவர்களையே சாரும். குறிப்பாக, தாக்குதல்கள் நடைபெறும் சமயங்களில் சில முனைகளில் சண்டை நிலைமை இறுக்கமடையும். அப்போது, தளபதி பால்ராஜ் களமுனைக்கு சென்று நிலைமையை சீர்செய்வார். அச்சமயங்களில், தலைமைக் கட்டளைப் பொறுப்பை தளபதி தீபன் அவர்களிடமே கொடுத்துவிட்டு செல்வார். அந்தளவிற்கு தளபதி தீபன் அவர்களின் தலைமைத்துவத்தில், ஒழுங்குபடுத்தலில் நம்பிக்கையுடையவராகவும், பால்ராஜ் முக்கியத்துவமானதாக அமைந்த தாக்குதல். இதில் தளபதிதீபன் அவர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. யாழ் குடாநாட்டுக்கு ஏற்படவிருந்த பேரழிவைத் தற்காலிகமாக தடுத்து நிறுத்திய இந்த வரலாற்றுச் சமரில் தளபதி பால்ராஜ் அவர்கள் காயப்பட்ட வேளையிலும், அவரது களமுனையை வழிநடாத்தி வெற்றியை எமதாக்கிய பெருமையில் தீபன் அவர்களிற்கு பெரும் பங்குண்டு.

இத்தாக்குதல் பற்றி தீபன் அவர்கள் தெரிவிக்கையில் 'ஒரு திடீர்த் தாக்குதலைத் தொடுத்து எதிரிப்படையைச் சிதைக்கும் நோக்குடன் இரவோடிரவாக தகுந்த இடத்தைத் தேர்வு செய்ய முயன்றோம். மணற்பாங்கான நில அமைப்புடன் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறு சிறு பற்றைகளையும், புற்கள் அற்ற வரப்புகளையும் தவிர துப்பாக்கிச் சண்டைக்குத் தேவையான அரண்களோ அல்லது உருமறைப்புச் செய்வதற்குரிய பொருட்களோ கிடைக்கவில்லை. நேர களமுனைகளைத் தலைமை தாங்கினார். இதன்போது தனது கையில் காயமடைந்த நிலையிலும் தொடர்ந்து களமுனைத் தளபதியாக தனது பங்கை வழங்கினார். வலிகாமத்திலிருந்து பின்நகர்ந்ததைத் தொடர்ந்து தளபதி தீபன் அவர்கள் முல்லைத்தீவு முகாம் தாக்குதலுக்கான வேவுப்பணியை செய்வதற்காக தலைவரால் பணிக்கப்பட்டார். முல்லைத்தீவு முகாம் வேவு சவாலான விடயமாகவே இருந்தது. இங்கு சிங்களப்படையினர் முகாமின் காவல்நிலைகளை மிகவும் நெருக்கமாக அமைத்து உச்ச அவதானிப்பில் வைத்திருந்தனர். தாக்குதலுக்கான வெளிப்பகுதி வேவுகள் முடிந்திருந்தாலும், சண்டையைத் தீர்மானிக்க முகாமிற்குள் நுழைந்து வேவு பார்க்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

வேவுப்பிரிவினர் கடுமையாக முயற்சி செய்தும் அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. எனவே இதற்கு மாற்றுவழி ஒன்றைச் சொன்னார் தளபதி தீபன் அவர்கள். எதிரியின் 'டம்மிக் காவலரணை' இனங்கண்டு, எதிரியின் ரோந்து செல்லும் நேரத்தைக் கணிப்பிட்டு, அந்தநேர இடைவெளிக்குள் காவலரணின் சுடும் ஓட்டைக்குள்ளால் காவலரணுக்குள் உட்புகுந்து, இராணுவத்தின் ரோந்தை அவதானித்துவிட்டு முகாமிற்குள் செல்லுமாறு திட்டம் வகுத்தார். அவ்வாறே உள்முகாம் வேவுகளை துல்லியமாகச் செய்து முடித்தனர். முல்லைத்தீவுத் தாக்குதல் நடவடிக்கையின் போது, முகாமின் மேற்குப்பகுதியைக் கைப்பற்றி, முகாமின் மையப்பகுதியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் பொறுப்பு தளபதி தீபன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.



## புளியங்குளம், தீச்சுவாலை, ஓயாத அலைகள் எனப் பல சமர்களில் தளபதி தீபனுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறிய சிங்களப்படை

முக்கியமானதும், கடுமையானதுமான சமர்க்களங்களில் தனது ஆளுமையையும் சிறந்த திட்டமிடலையும் வெளிப்படுத்தி, சவாலான களமுனைகளில் தனிமுத்திரை பதித்து, அதனூடாக தன்னை வெளிப்படுத்தி சிறந்த நம்பிக்கையான தளபதியாக பரிணமித்தவர்.

தளபதி தீபன் அவர்களின் தாக்குதல்களையும் அவரின் செயற்பாடுகளையும் சொல்ல விளையும்போது, தளபதி பிரிகேடியர் பால்ராஜ் அவர்களையும் சேர்த்தே சொல்லிக்கொண்டு போகமுடியும். ஏனெனில், சமர்க்களச் செயற்பாடுகளினூடாக தனக்கென ஒரு தனித்துவத்தை நிலைநிறுத்திய தளபதியாக மிளிர்ந்த தீபன், தளபதி பால்ராஜ் அவர்களினால் அடையாளம் காணப்பட்டு, அவரது பாசறையில் இருந்து வெளிவந்தவர். தளபதி தீபன் அவர்களின் ஆளுமை என்பது தளபதி பால்ராஜ் அவர்களின் தலைமைத்துவப் பாங்கிலிருந்தும் திட்டமிடும் தன்மையிலிருந்தும் சிறிது மாறுபட்டிருக்கும். ஆனால் இந்த தன்மைகளே இவர்களிருவரும் இணைந்து பல வெற்றிகளை பதிவு செய்வதற்கான தளத்தைக் கொடுத்திருந்தது. அத்துடன் தளபதி தீபன் அவர்கள் தனித்துவமாக பல போரியல் வெற்றிகளைப் பெற்றதனூடாக தனது தனித்துவத்தை பல இடங்களில் பதிவுசெய்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளையைப் பிறப்பிடமாக கொண்ட தீபன் அவர்களின் பூர்வீகம் யாழ்மாவட்டம், தென்மராட்சியின் வரணியாகும். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் விஞ்ஞானப்பிரிவில் படித்துக் கொண்டிருந்த சமயத்தில், விடுதலைக்காக கல்வியை இடைநிறுத்திவிட்டு, 1985ம் வருடம் மேஜர் கேடில்ஸ் அவர்களிடத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து தனது விடுதலைக்கான பயணத்தை ஆரம்பித்தார். கிளிநொச்சியில் தனது ஆரம்பகாலப் பணிகளை தொடங்கினார். இலங்கை இராணுவத்திற்கெதிராக கிளிநொச்சியில் நடைபெற்ற தாக்குதல்களில் பங்குகொண்டதுடன் இந்திய இராணுவத்தினருக்கு எதிராக கிளிநொச்சியில் நடத்தப்பட்ட பல தாக்குதல்களில் தளபதி தீபன் அவர்கள் அவர்கள் வழிநடாத்திய தாக்குதல்களில் பலவற்றில் முதுகெலும்பாகவும் செயற்பட்டவர்.

1990ம் ஆண்டு, வெற்றிபெற்றே ஆகவேண்டும் என்ற நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலை களத்தில் நேரடியாக நின்று வழிநடாத்தினார். இந்த தாக்குதலில், பெரல்களில் மண்ணை நிரப்பி அதனை உருட்டிக்கொண்டு காப்பாகப் பயன்படுத்தி முன்நகர்ந்தே சண்டைசெய்யப்பட்டது. இதன்போது தீபன் அவர்கள் களத்திற்கான தலைமைக்கட்டளையை வழங்கியது மட்டுமல்லாமல், தானும் ஒரு பெரலை உருட்டிக்கொண்டு முன்னேறி சண்டையிட்டார். அவ்வாறு சண்டையிட்டுக் கொண்டிருந்தபோதே கையில் காயமடைந்தார். உடனேயே களத்திற்கு விரைந்த தளபதி பால்ராஜ் அவர்கள் சண்டையை தொடர்ந்து நடாத்தி கொக்காவில் முகாமை வெற்றி கொண்டார்.

பின்னர் மாங்குளம் முகாம் தாக்குதல், வன்னிவிக்கிரம தடுப்புச்சமர் போன்றவற்றிலும் தனது தலைமைத்துவத்தை சிறப்பாக வழங்கியவர் தளபதி தீபன் அவர்கள். 1991ம் ஆண்டு சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் சிறப்புத்தளபதியாக பால்ராஜ் அவர்கள் பொறுப்பை எடுக்கும் போது, வன்னி மாவட்டத் தளபதியாக தீபன் அவர்கள் நியமிக்கப்பட்டார். வன்னி பெருநிலப்பரப்பின் சிறப்புத் தளபதியாக செயற்பாடுகளைத் தொடங்கிய தீபன் அவர்கள், வண்ணாக்குளம், கெப்பிட்டிக்கொல்லாவையில் எல்.3 எடுத்த சமர், முல்லைத்தீவு முகாமின் காவலரண்களைத் தகர்த்து 50 கலிபர் துப்பாக்கி உட்பட பல ஆயுதங்களைக் கைப்பற்றியது போன்ற பல தாக்குதல்களை தனித்துச் செய்தார். மேலும் மின்னல், ஆ.க.வே தாக்குதல், இதயபூமி ஒன்று, தவளைப்பாய்ச்சல், யாழ்தேவி என பல பாரிய சமர்களில் வன்னி மாவட்ட படையணிகளுக்குத் தலைமை தாங்கினார். இவற்றில், நான்குமணி நேரத்தில் நடத்தி முடித்த மாபெரும் சமரான யாழ்தேவிச் சமரானது எமது போராட்ட வரலாற்றில், மரபுவழிச் சண்டை முறையில் மும் விடிந்து கொண்டிருந்தது. எனவே, வரப்போரங்களிலும், பற்றைக் கரைகளிலும் கைகளாலும், தடிகளாலும் உடலை மறைக்கக்கூடிய பள்ளங்கள் தோண்டி, எதிரியின் விமானங்களுக்குப் புலப்படாமலும் நகர்ந்துவரும்படையினரின் கண்களுக்குத் தெரியாமலும் உருமறைப்புச் செய்தோம். விடிந்தபின்பும் எதிரி எமக்கருகில் வரும்வரை நாம் பொறுமையுடன் காத்திருந்து சண்டையிட்டோம்' என்றார். பாரிய இழப்புகளுடன் சிங்களப்படைகள் பின்வாங்கிய இச்சமரில் ராங்கிகள், கவசவாகனங்கள் அழிக்கப்பட்டதுடன் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து பூநகரி தவளை நடவடிக்கையில் பிரதான கட்டளை முகாம் தாக்குதலுக்கான தலைமையைப் பொறுப்பெடுத்து தாக்குதலை வழிநடாத்தினார். பல அடுக்குப் பாதுகாப்பு வியூகத்தைக் கொண்டமைந்த பிரதான முகாமைக் கைப்பற்றும் தாக்குதல் மிகவும் சவாலாக இருந்தது. எதிரி கட்டளை மையத்தை தக்கவைக்க கடுமையாகப் போராடினான். முகாமின் பலபகுதி கைப்பற்றப்பட்டபோதும், இறுதியாக ஒரு பகுதியைக் கைப்பற்றுவதற்காக தொடர்ந்த கடும் சண்டை மறுநாள் விடியும் வரை தொடர்ந்தது. பகல்வேளையில் அங்கு சிதறியிருந்த இராணுவத்தினரும் ஒன்றுசேர, முகாமின் எதிர்ப்பும் மிகவும் வலுப்பெற்றது. என்றாலும் அணிகளை மீள்ஒழுங்குபடுத்தி தாக்குதலை தீவிரப்படுத்தினார். இறுதியில் முகாமிலிருந்து மோட்டார்களை கைப்பற்றவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நவநீதன் தலைமையில் அணிகளை ஒழுங்கமைத்து மோட்டார்களை கைப்பற்றினார். இச்சம்பவத்தில் லெப் கேணல் நவநீதன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். 1993ம் ஆண்டு தவளைப்பாய்ச்சல் நடவடிக்கை முடிந்த பின்னர், சிறப்பு வேவுப்பிரிவு தளபதியாக பொறுப்பேற்று யாழ் தீவுப்பகுதித் தாக்குதலுக்கான முழு வேவுப்பணியையும் நிறைவு செய்தார். ஆயினும் அத்தாக்குதல் செயற்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டதால் கொக்குத்தொடுவாய்ப் பகுதி முகாம் வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

தொடர்ந்து, 1995ம் ஆண்டு சூரியகதிர் பாதுகாப்புச் சமரில் பல

லெப்.கேணல் தனம், லெப் கேணல் பாக்கியராஜ், லெப்கேணல் ராகவன் தலைமையிலான சாள்ஸ் அன்ரனி படையணியுடன் களமிறங்கினார் தீபன். தாக்குதல் ஆரம்பித்து முன்னணிக் காவலரண் கைப்பற்றப்பட்டவுடன், உட்தாக்குதல் அணியுடன் சென்று மிக வேகமாக முகாமின் மையப்பகுதியில் தாக்குதலை ஆரம்பித்தார். ஏனெனில் எதிரியின் இரண்டாவது காவலரண் தொகுதியானது நீரேரியின் கரையில் அமைந்திருந்தது. கடற்கரைப்பக்கத்தால் உள்ள சிறிய தரைப்பாதையாலேயே படையணிகள் உள்நுழைய வேண்டும். அதில் பலமான காவலரண்களை எதிரி அமைத்திருந்தான். அந்தப்பகுதியில் வெடிமருந்து நிரப்பப்பட்ட கரும்புலிப்படகால் வேகமாக வந்து பாய்ந்து வெடிக்கவைப்பதனூடாக எதிரியை அழித்து படையணியை நகர்த்துவதாக திட்டமிருந்தாலும், அந்த நடவடிக்கை சாத்தியமில்லாமல் போகும் நிலையேற்பட்டால் மாற்றுவழி படையணிகளிடமே கொடுக்கப்பட்டிருந்தது. முல்லைத்தீவின் வெற்றியைத் தீர்மானிக்கும் பிரதான களத்தில் தான் நிற்கவேண்டும் என்பதை கருத்தில் வைத்து, முன்னணிக் காவலரண்கள் சரியாக பிடிபடாத நிலையிலும், 2 கிலோ மீற்றர் பின்னால் உள்ள தாக்த்தல் முனைக்கு படையணிகளுடன் வேகமாக நகர்ந்து தாக்குதலில ஈடுபட்டார்.

மையப்பகுதி தாக்கப்பட்டதால் நிலைகுலைந்த சிங்களப்படை, ஆட்லறிகளையும் மையப்பகுதியையும் பாதுகாக்க முடியாமல் விட்டுவிட்டுப் பின்நகர்ந்தது. இராணுவத்தினரின் மையக் கட்டளைப்பகுதி ஆட்டங்காணத் தொடங்கியதுடன் இராணுவத்தின் ஒழுங்கமைப்புத்திறன் பாதிக்கப்பட்டது. இதுவே முல்லைத்தீவு முகாமின் தாக்குதல் வெற்றியில் பிரதான பங்கை வகித்தது. சத்ஜெய - 03 நடவடிக்கையில் பாதுகாப்புச் சண்டையை வழிநடாத்திய போது, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முக்கியமான சண்டையாக உருத்திரபுரம் 8ம் வாய்க்கால் எள்ளுக்காட்டுப் பகுதியைக் கைப்பற்றி நிலைகொண்ட சிறப்புப் படையணி மீது நடாத்தப்பட்ட உடனடி ஊடறுப்புத் தாக்குதல் அமைந்தது.

மறவன்

தொடரும்...

# புலிகளின் இராணுவ வல்லமையை உலகறிய வைத்த வரலாற்றுச் சமரின் நாயகன் பிரிகேடியர் பால்ராஜ்

**கடந்தவாரத்தொடர்ச்சி...**

இத்தாவிலில் உருவாக்கப்பட்ட போர்வியூகத்தை உடைப்பதற்காகவும், கண்டிவீதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்பதற்காகவும் கடுமையாகப் போரிட்டது சிங்களப்படை. உக்கிரமான சமர். எதிரி புலிகளின் நிலைகளை உடைப்பதும், அதை புலிகள் மீளக் கைப்பற்றுவதுமாக, நீண்ட நேரமாக தக்கவைப்பதற்காகவும் கைப்பற்றுவதற்கானதுமான சண்டைகள் நடைபெற்றன. அர்ப்பணிப்பும் உறுதியும் நிறைந்த போராளிகளின் செயல்வீரம், அவர்களின் தீவிரமான் போரிடும் ஆற்றல், மெய்சிலிர்க்க வைக்கும் தியாகங்கள், நிலைகளை விடாமல் தனித்து நின்று சமரிட்ட பண்பு, அவர்கள் வெளிப்படுத்திய துணிச்சலான செயற்பாடுகள் இத்தாவில் பெட்டியை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தது. கிட்டத்தட்ட பத்திற்கு மேற்பட்ட பெரியளவிலான படையெடுப்புக்கள், பதினைந்திற்கும் மேற்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் என முப்பத்துநான்கு நாட்களாகக் கடுமையான பல சண்டைகளை எதிர்கொண்டது புலிகள் சேனை.

பொதுவாகவே இராணுவம் காலை வேளைகளில்தான் தனது தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடங்கும். ஒரு தடவை காலை இராணுவம் தனது நகர்வை செய்யவில்லை. எனவே களமுனைத் தளபதிகளுடன் சண்டை தொடர்பாகக் கதைக்கத் தீர்மானித்த தளபதி மதியமளவில் களமுனைத் தளபதிகளை தனது கட்டளைமையத்திற்கு அழைத்திருந்தார். அவர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தவேளை (தொலைத்தொடர்பு கண்காணிப்பின் மூலம் எல்லோரும் கட்டளைமையத்தில் இருக்கின்றனர்என அறிந்து) சிங்களப்படை நீரேரிக்கரையால் திடீர் ஊடறுப்புத் தாக்குதலை மேற்கொண்டு பால்ராஜ் அவர்களின் கட்டளைமையத்திற்கு அருகில், கிட்டத்தட்ட 25 மீற்றரில் அமைந்திருந்த கட்டளை மையத்திற்கான பாதுகாப்பு நிலையில் சண்டையைத் தொடங்கினான்.

அதிலிருந்து 75 மீற்றரில் ராங்கிகள், பவள் கவசவாகனங்கள், துருப்புக்காவிகள் கட்டளை மையத்தைத் தாண்டி சென்று கொண்டிருந்தன. இராணுவத்தால் "வெலிகதற" எனப் பெயரிடப்பட்ட இத்தாக்குதல் நடவடிக்கையானது, இத்தாவில் பக்க கண்டல் நீரேரிக்கரையால் ஊடறுத்து ஒட்டுமொத்த தரைத்தொடர்பையும் துண்டித்து, நிலைகொண்டிருக்கும் அணிகளை அழிக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். கட்டளைமையத்தில் பாதுகாப்பிற்கு நின்றவர்கள் இராணுவத்தைக் கண்டு சண்டையைத் தொடங்கி, நிலமையை புரிந்து சுதாகரித்த தளபதி நிதானமாக களமுனைத் தளபதிகளை அவரவர் இடங்களுக்குச் செல்லுமாறு கூறிவிட்டு, தனக்கருகில் சண்டை நடக்கின்றது என்பதைப்பற்றி அலட்டிக்கொள்ளாமல், அங்கு நடந்த சண்டையையும் எதிரி ஊடறுத்து வந்த இடங்களை மீளக்கைப்பற்றுவதற்கான கட்டளைகளையும் எந்தவித பதட்டமும் இல்லாமல் வழங்கிக்கொண்டிருந்தார்.

இராணுவம் ஊடறுத்து வந்த பகுதியில் விடுபட்ட நிலைகளைத் தவிர ஏனைய நிலைகளைத் தக்கவைத்து அங்கிருந்து தொடர்ச்சியாக தாக்குதலை மேற்கொண்டனர். ஆர்.பி.ஜி கொமாண்டோஸ் அணிகள், சிங்களப்படையின் துருப்புக்காவிகள், ராங்கிகள் மீது தாக்குதலை நடாத்தினர். ஒரு ராங்கி அழிக்கப்பட்டதுடன் பல ராங்கிகள் சேதமாக்கப்பட்டன. இரண்டு பவள் கவசவாகனங்கள் கைப்பற்றப்பட்டன. உள்நகர்ந்த எதிரியை அழிக்க வகுத்த உடனடித் திட்டத்தில் எதிரி நகர்ந்த இடங்களிலெல்லாம் தாக்குதலுக்குள்ளானதால் திணறிய எதிரி செய்வதறியாது திரும்பியும் போக முடியாமல் திண்டாடினான். இதில் நடந்த தற்துணிவான சம்பவங்கள் பல. உதாரணமாக சண்டையிட்டுக்கொண்டிருந்தபோது ரவை முடிந்துபோய் இருந்த பெண் போராளியின் நிலைக்குள் பாய்ந்து கொண்டான் ஒரு சிப்பாய். அவனது துவக்கையே பறித்து அவனை சுட்டுவீழ்த்தினார்.

அதுபோல ரவை முடிந்தும் செல்லால் அடித்து ஒரு எதிரியை வீழ்த்தினார் இன்னுமொருபெண்போராளி. இதுபோல பல சம்பவங்கள் இந்த சண்டைக்களத்தில் நடைபெற்றன. பிறிதொரு சம்பவத்தில், ராங்கிகள் வந்தபோது அவற்றின் மீது குண்டு வீசி அழித்த பெண்புலிகளின் வீரம் என்பது புறநானூறுக்குப் பின் தமிழ்ப்பெண்களின் வீரத்திற்கான எடுத்துக்காட்டு. இறுதியாக இருட்டு வேளையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி பாரிய இழப்புடன் பின்வாங்கியது இராணுவம். எப்போதும் போராளிகளின் உளவு அரணை தனது உறுதியான கட்டளை மூலம் தெம்பாக வைத்திருப்பது பால்ராஜ் அவர்களின் குண இயல்பு. ஒரு பெண்போராளி ஒரு பகுதிக்கான தாக்குதலை வழிநடாத்திக் கொண்டிருந்தார்.

நீண்ட நேரமாக இறுக்கமாக சண்டை தொடர்ந்து கொண்டிருந்தபோது தொடர்பு கொண்ட தளபதி "எங்கட க்டைசி மூச்சு இருக்கும் வரைக்கும் எதிரி நினைக்கிறதை அடைய விடக்கூடாது. வந்த எதிரிகளுக்கு நாங்கள் யார் எண்டதைக் காட்டிப்போட்டு விடவேணும்" என்று கூறினார். அப்போராளிகளும் கடுமையாகச் சண்டையிட்டு இராணுவத்தை பலத்த இழப்புகளுடன் பின்வாங்கச் செய்தனர். மற்றும் சண்டைக்கான கட்டளையை வழங்கும் சமநேரத்தில் விநியோகம் சரியாக செல்கின்றதா? காயம். வீரச்சாவடைந்தவர்களை அனுப்புதல் உட்பட களத்தின் சகல ஒழுங்குபடுத்தல்களையும் கவனித்துக்கொண்டிருப்பார். சிறிலங்காவின் முப்படைத்தளபதிகளும் பலாலியில் இருந்து இத்தாவில் முற்றுகைச் சின்னாபின்னமாக்க நினைத்தபோதும் அது அவர்களால் முடியாத காரியமாகவே இருந்தது.

இந்நடவடிக்கையில் சிறிலங்கா இராணுவத்தின் பெருமைமிக்க தளபதிகளான பிரிகேடியர் காமினி கொட்டியாராச்சி, வான்நகர்வு பிரிகேட் கட்டளைத்தளபதி கேணல் றொசான் சில்வா, மேஜர் ஜெனரல் சிசிற விஜயசூரியா உட்பட பல தளபதிகளின் சண்டைத்திட்டங்கள், தந்திரோபாயங்கள் எல்லாம் தவிடுபொடியாக்கப்பட்டன. இறுதியாக ஒரு தடவை பாரிய நடவடிக்கை ஒன்றை திட்டமிட்டு, பால்ராஜ் அவர்களை உயிருடனோ அல்லது பிணமாகவே கைப்பற்றுவோம் எனக் கங்கணங்கட்டி மேற்கொள்ளப்பட்ட பாரிய நடவடிக்கை கூட தோல்வியில் முடிந்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியின் பிரதான பங்கை வகித்த பால்ராஜ் அவர்களின் சேனையை வெற்றிகொள்ள சிறிலங்கா இராணுவத்தின் அனைத்து சிறப்புப் படையணிகளும் பயன்படுத்தப்பட்டன.

ஆனால், அச்சேனையை அவர்கள் வெல்லமுடியாததால் ஆனையிறவுத்தளம் பெரும் சிக்கலுக்குள்ளாகியது. தொடர்ந்து சண்டையை கொண்டு நடாத்த முடியாத நிலைமைஏற்பட்டதுடன்மறுபக்கம்தளபதி தீபன் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட நகர்வையும் தடுக்கமுடியாததால் நெருக்கடிக்குள்ளான இராணுவத்திற்குப் பின்வாங்கி ஓடுவதைத்தவிர வேறுவழி இருக்கவில்லை. இத்தாக்குதல் நடவடிக்கையின் கடினத்தை தளபதி பால்ராஜ் விபரிக்கும் போது "சண்டையென்றால் இதுதான் சண்டை. குளிக்க ஏலாது. சப்பளை இல்லை. வெட்டி நிற்கும் பங்கருக்குள்தான் சாப்பாடு. தூக்கம் எல்லாமே. வீரச்சாவடைந்தவர்களை வீரவணக்கம் செலுத்தி விதைக்க வேண்டும் என்று விபரித்தார்.

# இராணுவ அட்டூழியத்தாலும், வன்முறையாலும் தமிழ் மக்களை அடிபணியச்செய்ய முடியாது – பிரபாகரன்

**கடந்தவாரத்தொடர்ச்சி...**

உங்களுக்குத் தெரியும், இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாட்களைக் கொண்டாடுவது வழக்கம். ஆனால் இந்த வருடத்தில் இருந்து வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒருநாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாள் ஆகப் பிரகடனப்படுத்தி உள்ளோம். அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமாக இன்று அந்த மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப் பட்டவர் களைத்தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல் எமது விடுதலைப் போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக்கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை நாம் கொண்டாட முடிவு எடுத்துள்ளோம். அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒரு நாளில் வைப்பதால் எல்லோரும் அன்று எமது இயக்கத்தில் இருந்து வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாரணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர்வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவு அடைந்த எல்லா போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக இன்று கொண்டாடுகிறோம். இல்லாவிட்டால் காலப்போக்கில் குறிப்பிட்ட சிலசில ஆட்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அந்த மரியாதைகள் குறிப்பிட்ட சில ஆட்களுக்குப் போகாமல் தடுத்து, எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்படவேண்டும் என்பதற்காகத் தான் இந்த மாவீரர்நாள் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம்.

ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத இனம் ஓர் காட்டுமிராண்டி இனமாகத்தான் மாறி அழிந்துவிடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது, எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள். அதேவேளை வீரர்களுக்குத்தான் பஞ்சமாக இருந்தது. ஆனால் இன்று இந்த மாவீரர் நாளில், ஒரு மாற்றத்தை ஏற்படுத்திவிட்டோம். ஆம், எமது வீரர்களைக்கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம். இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. ஆனால் இன்று நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது.

மாவீரர் நாள் கையேடு இன்று எமது இனம் உலகிலேயே தலைநிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம்தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு இன்று உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்" என்றார்.

**தமிழீழப் போர் 2**

சிங்களக் காவல்துறையினரின், ஈடுபட்ட விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழு அரசுக்கு சுட்டிக்காட்டி வந்தனர். ஆனால் சிறீலங்கா அரசோ அதுபற்றிய அக்கறையின்றி இருந்தது. இதன் காரணமாக பேச்சுவார்த்தைகளில் முறுகல் நிலை ஏற்பட்டுக் கொண்டிருந்த போது ஆனி 10, இராணுவத்தினரின் அத்துமீறல்கள் பற்றிப் பலமுறை சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைகளில் 1990 இல் தென்தமிழீழத்தில்உள்ளகல்முனை என்ற இடத்தில் இஸ்லாமியத் தமிழர் ஒருவருக்கு எதிராக சிங்களக் காவற்துறையினர் மேற்கொண்ட மனிதவுரிமை மீறல் காரணமாக விடுதலைப் புலிகளுக்கும் சிங்களக் காவல்துறையினருக்கும் இடையில்எழுந்த சச்சரவு இறுதியில் யுத்தமாக மூண்டது. தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் உடனடியாகவே இவ்யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் சிறீலங்காவின் சிங்கள இனவாத அரசும் அதன் படைகளும் தமிழின அழிப்பும் தமிழ்மண் பறிப்புமே தமது இறுதி முடிவு என்ற ரீதியில் செயற்பட்ட போது தமிழீழ மக்களையும் தமிழீழ மண்ணையும் பாதுகாப்பதற்குச் சிறீலங்கா அரசு ஏவிவிட்ட யுத்தத்தை எதிர்கொள்வதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை.

1991 புரட்டாதி 1ம் நாள் தமிழீழப் பத்திரிகையாளர்களைச் சந்தித்து அப்போதைய அரசியல், இராணுவ நிலைமைகள் பற்றி விளக்கும்போது 'தமிழீழப் போர் 2 தொடங்கும் போது இருந்த பல சிங்கள இராணுவ முகாம்கள் தற்போது இல்லை. கொக்காவில், மாங்குளம் போன்ற இடங்களில் இருந்த இராணுவ முகாம்கள் அழிக்கப்பட்டதால் வன்னிப் பிரதேசத்தின் பெரும்பகுதி எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. யாழ் கோட்டை முகாம் அழிக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்தின் நகரப்பகுதியும் விடுவிக்கப்பட்டது. ஆனையிறவுப் போரில் மரபு ரீதியான இராணுவ அணியாக எதிரிகளுடன் நேரடியாக மோதி அழிக்கும் நிலையின் முதற்படியை எடுத்து வைத்தோம். பெரிய எண்ணிக்கையிலான இராணுவத்தை நீண்ட நாட்களாக தடுத்து வைத்துப்போரிட்டோம். ஆனையிறவுப் போரில் ஏற்பட்ட இழப்புக்களுக்கு அஞ்சினால் யுத்தம் நடத்த முடியாது. இழப்புக்களை வளர்ச்சியின் ஊன்றுகோலாகக் கருதவேண்டும்.

10-07-91 இல் ஆனையிறவுப் போர் ஆரம்பித்து 23-08-91 வரையிலான 43 நாள் போரில் 564 போராளிகளை இழந்திருக்கிறோம். எதிர்பார்த்ததைவிட பெரியளவில் படையினர் இறக்கப்பட்டு நீண்ட நாட்கள் இடம் பெற்ற யுத்தத்தைப் பார்த்தால் எமது தரப்பிலான இழப்பு பெரிதெனச் சொல்ல முடியாது. துன்பங்களை அனுபவிக்கும் மக்களிடம் அடுத்து என்ன என்ற ஏக்கம் இருக்கத்தான் செய்யும். எனினும் பெரிய அளவில் அவர்கள் அணிதிரள வேண்டும். போராட்டத்தில் ஏற்படும் இழப்புக்களை உடனுக்குடன் ஈடுசெய்ய வேண்டும். மக்கள் முழுமையாக எம்மோடிணைந்து எமது கஷ்டதுன்பங்களையும் புரிந்துகொள்ள வேண்டும். நாம் நிபந்தனையற்ற வகையில் சிறீலங்கா அரசுடன் பேசுவதற்கு எப்போதும் தயாராக இருக்கிறோம். ஆனால் பேச்சுவார்த்தைக்குரிய சூழ்நிலையை சிறீலங்கா அரசுதான் உருவாக்க வேண்டும். விடுதலைப் புலிகள் இலங்கைத் தீவில் சிறீலங்கா அரசுக்கு எதிராகத்தான் போராடுகிறார்கள். இந்திய அரசு விடுதலைப்புலிகளைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்றே கருதுகின்றேன்.

மலையகத் தமிழ்மக்களின் தொடரும் துன்பங்களுக்கு மலையகத் தலைமைகளின் தொடரும் துரோகமே காரணம் என்பதை மலையகத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எந்த ஆயுதத்தாலும் எத்தகைய குண்டு வீச்சாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழித்துவிட முடியாது' என்றார். தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு 1984 இன் ஆரம்பப்பகுதியில் முதன் முதலாக பெண்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தில் மறைமுகமாக ஆதரவு நல்கத் தொடங்கியவர்கள் பின்பு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் அனுமதியுடன் ஆயுதப்பயிற்சி பெற்று இந்திய – தமிழீழப் போர் 1987 ஐப்பசி 10 இல் ஆரம்பமாகிய போது நேரடியாக யுத்தமுனைக்குச் சென்று பல வீர சாதனைகளை இன்றுவரை படைத்து வருகிறார்கள்.

தொடரும்...

# பிராந்தியச் செய்திகள்

## பெயர் பலகையினால் மக்கள் பெரும் சிரமம்




மஸ்கெலிய பெட்ரோல் நிலையத்துக்கு அருகில் உள்ள பிர தான நெடுஞ்சாலையில் முச்சந்தியில் அமைந்துள்ள வழிகாட்டி 'பெயர் பலகை யில் முறையான வழிகாட்டி அம்புகுறிகள் இல்லாததால் சிவனடிபாதத்திற்கு வரும் பக்தர்கள் பாதை தவறி செல்வது அதிகரித்துள்ளது.

ஆகையால் வீதி அபிவிருத்தி அதிகார சபை உடன் நடவடிக்கை மேற்கொண்டு புனரமைக்குமாறு பாதிக்கப்பட்டோர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

**படங்கள் மற்றும் செய்தி:- செ.தி.பெருமாள். மஸ்கெலியா**

## கருக்கலைப்பு வில்லைகளுடன் விமான நிலையத்தில் ஒருவர் கைது



சட்டவிரோதமான முறையில் மருந்துப் பொருட்கள் சிலவற்றை கொண்டு வந்த சந்தேகநபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த கற்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த குறித்த சந்தேக நபரின் பயணப் பொதியில் இருந்து 80,530 வலி நிவாரணிகளும், 280 கருக்கலைப்பு வில்லைகளும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த சந்தேகநபர் விசாரணைகளுக்காக விமான நிலைய சுங்கப்பிரிவிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## யாழ். பருத்தித்துறையில் கஞ்சாவுடன் ஒருவர் கைது



யாழ்.பருத்தித்துறை பகுதியில் 19 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சா போதைப்பொருளை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியில் 42 வயதுடைய சந்தேக நபர் ஒருவரைகைதுசெய்ததாககாங்கேசந்துறை பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு இராணுவத்தினர் வழங்கிய தகவலின் படி அப் பகுதியில் உள்ள வீடொன்றை சுற்றி வளைத்த பொலிஸார் 19 கிலோ கஞ்சாவுடன் சந்தேக நபரையும் கைது செய்தனர்.

மீட்கப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 47 லட்சத்து 50 ஆயிரம் ஆகும். சந்தேக நபருக்கு கஞ்சாவை வழங்கியவரை தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். கைப்பற்றப்பட்ட கஞ்சா, பொதி செய்யப்பட்டிருக்கும்பொழுதே பொலிஸாரால் சுற்றி வளைத்து மீட்கப்படுள்ளது.

## வாழவைப்போம் அமைப்பின் ஏற்பாட்டில் மக்களுக்கு உதவிகள்

பா.உறுப்பினர் சி.சிறீதரனின் வேண்டுகோளுக்கு அமைய கனடா வாழவைப்போம் அமைப்பு, புலம்பெயர் உறவுகளை இணைத்து வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகின்றது. மாற்று வலுவுள்ளோர் மற்றும் பெண்களை தலை மையாகக் கொண்ட குடும்பங்களை மையமாகக் கொண்டு வழங்கப்படும் வாழ்வாதார உதவிகள் கடந்த நான்காம் திகதி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கைவேலியிலும் வழங்கப்பட்டுள்ளன.

வாழவைப்போம் அமைப்பின் செயற்பாட்டாளர் ஜெயகாந்தன் தலை மையில், நடைபெற்ற நிகழ்வில் யாழ். மாவட்ட பா.உறுப்பினர் சி.சிறீதரன், வன்னி மாவட்ட பா.உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் செயற்பாட்டாளர்கள், கைவேலி கிராமத்தின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பயனா ளிகள் கலந்து கொண்டிருந்தனர்.

கனடா வாழவைப்போம் அமைப்பின் இயக்குநர் மாற்றுத்திறனாளியாக இருந்த நிலையிலும்தாயகத்தில்வாழும்மக்களின் வாழ்வின் முன்னேற்றம் கருதி தொடர்ந்து பல்வேறு உதவிகளை பெருமளவு நிதி யின் மூலம் வழங்கிவருகின்றது. அதன் இன்னொரு கட்டமாகவே கைவேலியில் உதவிகள் பல்வேறு நோக்கங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. அமரர் அருந்தவச்செல்வத்தின் நினைவாக உணவுப்பொதிகள் இந்த நிகழ்வில் கனடா வாழவைப்போம் அமைப்பு ஊடாக அமரர் சின்னத்தம்பி அருந்தவச்செல்வத்தின் 5ம் ஆண்டு நினைவாக அவரது குடும்பத்தினரால் 20 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உணவுப்பொதி வழங்கப்பட்டது.

**மிக்சர் தொழிலகம் திறப்பு**

கனடா வாழவைப்போம் அமைப்பால் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் நோக்குடன் சிவன் மிக்சர் தொழிலகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. இதில் கணி சமான பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் பயன்பெற உள்ளன. மற்றும் மாணவர் ஒருவருக்கு துவிச்சக்கர வண்டியும், முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு நீரிறைக்கும் மோட்டார் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

**இலங்கையின் மிக உயரமான மனிதருக்கு அன்பளிப்பு**

இலங்கையின் மிக உயரமான மனி தராக இருக்கின்ற கு.கசேந்திரன் எனப்படும் நெடுமாறன் இவர் ஒரு தமிழர் என்பது மகிழ்ச்சிக்குரியது. இவர் எமது சொத்தாக காணப்படுகின்றார் என்ற வகையில் அவரின் நலனிலும் அக்கறை கொண்டு கனடா வாழ வைப்போம் அமைப்பு அவருக்கு அன்பளிப்பு வழங்கி மதிப்பளித்துள்ளது.

**தூய தமிழ் பெயர் சூட்டியவர்களுக்கு ஊக்குவிப்பு**

தமிழர்கள் தமிழ் பெயர்களை தங்கள் பிள்ளைகளுக்கு சூட்டுவது அருகி வருவதை அடுத்து தமிழ்பெயர்களை தங்கள் பிள்ளைகளுக்கு சூட்டி முன்மாதிரியாக திகழ்பவர்களுக்கு கனடா வாழவைப்போம் அமைப்பு இந்த நிகழ்வில் ஊக்குவிப்பு செய்துள்ளது. கைவேலியில் கனடா வாழவைப்போம் அமைப்பு சுமார் ஐந்தரை இலட்சத்துக்கும் மேற்பட்ட பெறுமதிக்கு உதவிகளை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வவுனியா பாலாமைக்கல் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருவிழா

இலங்கைத்தீவின் வடபால் வவுனியா மாவட்டத்தின் மேற்கே நெல்வயல்களும், சோலைகளும், களனிகளும் தன்னகத்தே கொண்டு பாலாமைக்கல் எனும் கிராமத்தில் கோயில் கொண்டு வேண்டுபவர்க்கு வேண்டுவதை ஈந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கு நிகழும் மங்களகரமான மன்மத வருடம் சித்திரை 26ம் நாள் (09.05.2015) சனிக்கிழமை சஷ்டி திதியும், பூராடநட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபவேளையில் ஆரம்பமாகி வைகாசி 4ம் நாள் (18.05.2015) திங்கட்கிழமை வரை திருவிழாக்கள் இனிதே நடைபெறுவதற்கு அம்பாள் அருள்பாலித்துள்ளார். இக்காலத்தில் நடைபெறுகின்ற அபிசேக, ஆராதனை, அன்னதான நிகழ்வுகளில் அடியார்கள் பங்குபற்றி அம்பாளின் அருட்கடாட்ஷத்தை பெற்று பெருவாழ்வு வாழ்வீராக.

08.05.2015 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு அனுக்ஜை, கணபதிஹோமம், வாஸ்த்து சாந்தி. 18.05.2015 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அஸ்டோத்திரசங்காபிஷேகம், விசேட பூசையும் மாலை 5.00 மணிக்கு விசேட வசந்தமண்டபபூஜை, நவசக்தி அர்ச்சனை, ஊஞ்சல், கிராம ஊர்வலம், 19.05.2015 செவ்வாய்க்கிழமை . மாலை 5.00 மணிக்கு வைரவர் சாந்தி என்பன இடம்பெறும்.

செய்தியாளர்:- பா.கதீஸன்

## மின்னல் தாக்கத்தினால் மூவர் வைத்தியசாலையில் அனுமதி

மலையகப் பகுதிகளில் மாலை நேரங்களில் இடியுடன் கூடிய மழை தொடர்ச்சியாக பெய்து வருகின்றமையினால் அம்மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் பெய்த இடி மின்னலுடன் கூடிய கனத்த மழை காரணமாக லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிளகுசேனை தோட்டத்தில் மின்னல் தாக்கத்தால் வீடு ஒன்று முற்றாக சேதமடைந்துள்ளது. அத்தோடு வீட்டில் இருந்த பெறுமதிமிக்க பொருட்கள் அனைத்தும் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் இச்சம்பவத்தினால் வீட்டிலிருந்த மூவர் காயங்களுக்குள்ளாகியுள்ளதுடன், லிந்துலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சையின் பின்னர் இருவர் வீடு திரும்பியுள்ளதாகவும், மேலும் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பிள்ளைகளின் மீது மண்ணெண்னை ஊற்றிய தந்தை

பொகவந்தலாவ வானகாடு தோட்டத்தில் இரண்டு பிள்ளைகள் மீது மண்ணெண்னை ஊற்றி தீ வைக்க முயன்றதந்தைஒருவரைபொகவந்தலாவ பொலிஸார் இரவு கைது செய்துள்ளனர். குறித்த பிள்ளைகளின் தாய் மலேசியா நாட்டிற்கு வீட்டு பணிபெண்ணாக சென்றுள்ளார். குறித்த நபரின் மனைவி வெளிநாடு சென்று நான்கு மாதங்கள் நிறைவடைந்துள்ளதாக தெரியவருகின்றது.

தான் பெற்ற பிள்ளைகளை மண்ணெண்னை ஊற்றி தீ வைக்க முயற்சித்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸாரால்மீட்கப்பட்ட 08வயதுமற்றும் 04வயது கொண்ட பிள்ளைகள் இருவரும் பொகவந்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தந்தையால் தாக்கப்பட்டு மண்ணெண்னை ஊற்றி தீ வைக்க முயன்ற 08வயது சிறுவனின் வலது காலில் காயங்கள் காணப்படுகின்றன. இதே வேளை குறித்த இரண்டு பிள்ளைகளை இரவு அறை ஒன்றுக்கு அழைத்து சென்று மண்ணெண்னையை ஊற்றி தீ வைக்க முயன்றபோது குறித்த இரண்டு சிறுவர்களின் சத்தத்தை கேட்ட அயலவர்களால் இருவரும் காப்பாற்றப்பட்டதாக 08வயது சிறுவன் பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்தில் இருந்து தெரியவந்துள்ளது.

**05ஆம் பக்கம் பார்க்க...**

தொடர்ந்தும் நாம் சர்வதேசத்தின் அடிவருடி களாக இருக்கப்போகின்றோமா? இந்த அரசியல் பொறிமுறைக்குள் இருந்து எப்பொழுது மீள்கிறோமோ அன்றுதான் நாட்டிற்கும், சிறுபான்மை இனத்திற்கும் விடுதலை, தலைமுடி பழுக்கும் வரை அரசியல்வாதிகள் தமது வார்த்தைகளை பேசிக்கொண்டேயிருப்பார்கள். இதுவரை காலமும் இலங்கையின் அரசியல் வட்டாரத்தில் இலங்கை அரசு கண்ட முன்னேற்றம் என்ன? வெறுமனே யுத்த அழிவுகள் மாத்திரமே. அபிவிருத்தி என்ற போர்வையில் இலங்கைக்குள் வந்த நாடுகள் தமது சுயநலத்திற்கான புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்ததே உண்மை. இதுவே இன்றும் இலங்கையின் அரசியலில் வாழையடி வாழையாக தொடர்கின்றது. இவை மாற்றம் பெற என்ன செய்யவேண்டும் என்பதை சிந்தித்து செயற்பட்டால் ஒழிய மாற்றத்திற்கான வழி வேறொன்றும் கிடையாது.

**02ஆம் பக்கத்தொடர்ச்சி...**

முப்படைகளையும் கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் தலைமையினை அழிப்பதற்கு இதுவும் ஒரு காரண மாக இருந்திருக்கலாம். எனினும் பிரபா கரன் இன்னமும் உயிரோடுதான் இருக்கின்றார் எனக்கூறப்படுகின்றது. அது வேறுவிடயம். கூட்டமைப்பு பதிவுசெய்யப்படும் விடயத்தில் தமிழரசுக்கட்சி சர்வாதிகாரப்போக்கினை கடைப்பிடிக்கின்றது என்றகுற்றச்சாட்டு ஏனைய கட்சிகளின் மத்தியில் இருக்கின்றது.

இதில் தமிழரசுக்கட்சியின் பலம் ஓங்கியிருக்கின்றது. ஆனால் விடுதலைப்புலிகள் அரசியற் கட்சியாக பதிவுசெய்யப்பட்டால் மாத்திரமே ஏனைய கட்சிகள் அனைத்தும் அவர்களுடன் இணைவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. அப்போதுதான் தமிழரசுக்கட்சி ஓரங்கட்டப்படும் அல்லது அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். விடுதலைப்புலிகளின் கட்சியினை மீண்டும் உருவாக்குவதற்காக அமெரிக்கரசு நாடுகடந்த தமிழீழ அரசின் ஊடாக செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றது. விடுதலைப் புலிகள் அரசியற்கட்சியாக என்று பதியப்படுகின்றார்களோ அன்றுதான் தமிழரசுக்கட்சிக்கு தலையிடி ஏற்படும். ஏனைய கட்சிகளான தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ் போன்றவற்றிற்கு இல்லாத உரிமை விடுதலைப்புலிகளுக்கு இருக்கின்றது. அவ்வாறான ஒரு சூழ்நிலை வருகின்றபோதும் கூட தமிழரசுக்கட்சி ஒரு பழமைவாய்ந்த கட்சி என்கின்ற வகையில் அவர்களுக்கான வாய்ப்புக்களும் வழங்கப்படும். ஆனால் இன்றைய சூழ்நிலையில் பொதுத்தேர்தல் இடம்பெறும்பொழுது இருக்கக்கூடிய ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் என்ற இந்தக்கட்சிகள் தமிழரசுக்கட்சியினை அனுசரித்தே செல்லவேண்டும். இவர்களைவிட்டால் வேறுவழியில்லை என்பதையே சுட்டிக்காட்டுகின்றோம். மாட்டுக்கு மணி கட்டப்போவது யார்?




## ஸ்ருதிஹாசன் அம்மாவிற்கு விபத்து



தமிழ், தெலுங்கு, ஹிந்தி என அனைத்து மொழிகளிலும் கலக்கி வருபவர் ஸ்ருதிஹாசன். இவர் கமலஹாசன் மற்றும் சரிகா அவர்களுடைய மூத்த மகள் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. கமல்ஹாசனிடமிருந்து பிரிந்து சரிகா மும்பையில் தனியாக வசித்து வருகிறார். இந்நிலையில் சமீபத்தில் சாலையில் வோக்கிங் செல்லும் போது ஒரு ஆட்டோ சரிகாவின் மீது மோதியுள்ளது. உடனே அருகில் இருந்த மருத்துவ மனையில் அனுமதிக்க, பெரிய காயங்கள் ஏதும் இல்லை.

ஆனால், ஓய்வெடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்களாம். ஸ்ருதி படப்பிடிப்பில் பிஸியாக உள்ளதால் அக்ஷரா தான் அருகில் இருந்து இவரை பார்த்து கொள்கிறாராம்.

## வித்தியாசமான முறையில் வெளிவரும் மாஸ் படத்தின் பாடல்கள்



வெங்கட் பிரபு இயக்கத்தில் சூர்யா நடிப்பில் விரைவில் வெளிவரும் படம் மாஸ். இப்படத்தின் பாடல்கள் வெளிவந்துவிட்டது. யுவன் ஷங்கர் ராஜா இசையில் இப்படத்தின் பாடல்கள் வருவதால் ரசிகர்களிடையே ஏற்கெனவே எதிர்ப்பார்ப்பு அதிகரித்து விட்டது.

படத்தின் பாடல்கள் சென்னையின் பிரபல FMகளில் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு பாடல் என ரிலிஸாகவுள்ளது. இப்படத்தின் ஒவ்வொரு பாடலையும் தமிழ் சினிமாவின் முக்கிய திரைப்பிரபலங்கள் தனித்தனியாக வெளியிட இருக்கின்றனர். தெறிக்குது மாஸ் என்ற பாடலை சிம்பு வெளியிட்டுள்ளார்.


## சல்மான் கான் ரசிகர்கள் மகிழ்ச்சி



குடித்துவிட்டு கார் விபத்து ஏற்படுத்தியதற்கான வழக்கில் சல்மான் கானுக்கு 5 ஆண்டு சிறைத்தண்டனை கிடைத்திருந்தது. இதனையடுத்து 2 நாட்கள் ஜாமின் வாங்கியிருந்த சல்மான் கான், தண்டனையை நிறுத்தி வைக்க கோரியும், ஜாமீன் வழங்கக் கோரியும் சல்மான் கான் தரப்பில் மும்பை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுக்கள் மீதான விசாரணையில் சல்மான் கான் சார்பில் அவரது தரப்பில் வழக்கறிஞர் ஹரீஷ் சால்வே ஆஜராகி வாதாடினார்.

வழக்கை விசாரித்த மும்பை உயர் நீதிமன்ற நீதிபதி திப்சே, நடிகர் சல்மான் கானின் தண்டனையை நிறுத்திவைத்து உத்தரவிட்டார். இந்த செய்தி அறிந்த சல்மான் கான் ரசிகர்கள் மிகுந்த சந்தோஷத்தில் உள்ளனர்.


## சிவகார்த்திகேயனின் விபரீத ஆசை?



கோலிவுட்டில் 'ஒரு நாயகன் உருவாகிறான்' என்பது போல் மெல்ல மெல்ல உச்சத்தை நோக்கி பயணிப்பவர் சிவகார்த்திகேயன். இவர் 5 படங்களுக்கு மேல் தான் முழு நீள' ஆக்ஷன் கதையை தேர்ந்தெடுத்து நடித்தார். தற்போது இவருக்கு விபரீத ஆசை ஒன்று வந்துள்ளது. சிவகார்த்திகேயன் சூப்பர் ஸ்டாரின் தீவிர ரசிகர் என்பது அனைவரும் அறிந்ததே.

இந்நிலையில் சமீபத்தில் இவர் ஒரு பேட்டியில் 'எனக்கு சூப்பர் ஸ்டாரின் பாட்ஷா படம் தான் மிகவும் பிடிக்கும்' என்று கூறியுள்ளார். பேட்டி கொடுத்ததோடு மட்டும் இல்லாமல், நெருங்கிய நண்பர்களிடம் இப்படி ஒரு கதையை ரெடி செய்து வாருங்கள் என்று கூறி வருகிறாராம்.

## அஜித்தால் என் கனவு நிறைவேறி விட்டது - லட்சுமி மேனன்



தமிழ் சினிமாவில் முன்னணி நட்சத்திரமாக வலம் வருபவர் அஜித். இவருடன் ஒரு படத்திலாவது நடித்து விட வேண்டும் என்பதே அனைத்து ஹீரோயின்களின் விருப்பமும். இந்நிலையில் சிவா இயக்கத்தில் அஜித் நடிக்கும் படத்தில் தங்கச்சி கதாபாத்திரத்தில் நடிக்க பல ஹீரோயின்களுடன் பேச்சு வார்த்தை நடந்தது. இறுதியில் இக்கதாபாத்திரத்தை லட்சுமி மேனன் நடிக்க முன்வந்துள்ளார்.

இதை உறுதி செய்யும் பொருட்டு இவர் தன் பேஸ்புக் பக்கத்தில் 'அஜித் படத்தில் நடிக்க வேண்டும் என்ற நீண்ட நாள் கனவு நிறைவேறி விட்டது, படப்பிடிப்பிற்கு செல்ல மிகவும் ஆர்வமாக இருக்கிறேன்' என்று தெரிவித்துள்ளார். அஜித்திற்கு ஜோடியாக ஏற்கனவே ஸ்ருதி இருப்பதால், இவர் தான் தங்கச்சி என உறுதி செய்யப்பட்டுள்ளது.

## உச்சக்கட்ட கோபத்திற்கு ஆளான செல்வராகவன்

கோலிவுட்டிற்கு இந்த வாரம் த்ரிஷா தான் மாட்டினார் போல, திருமணம் நின்றது, யாரால் நின்றது, இவர் தான் காரணமா? அவர் தான் காரணமா? என்று இவரை சுற்றியே சர்ச்சைகள் இருந்து வந்தது.

தற்போது வந்த தகவலின் படி இவர் செல்வராகவன் படத்திலிருந்து விலகி விட்டாராம். இவரே தான் இப்படத்தில் நடிக்க முன் வந்தாராம். ஆனால், தற்போது வேறு படங்களில் கமிட் ஆனதால் இதிலிருந்து விலகியதாக கூறப்படுகிறது.

மே 11ம் திகதி இப்படத்தின் படப்பிடிப்பு ஆரம்பிக்கும் நிலையில் த்ரிஷா இப்படி செய்தது, செல்வராகவனை உச்சக்கட்ட கோபத்திற்கு ஆளாக்கியுள்ளது.



## இக்கட்டான நேரத்தில் ரஞ்சித்துக்கு வழிவிட்ட ஞானவேல்ராஜா



இயக்குனர் ரஞ்சித்துக்கு தன் வாழ்கையில் மிகப்பெரிய ஜாக்பொட் (ரஜினி படம்) அடித்த சந்தோஷத்தில் இந்த வாரம் முழுவதும் குஷியில் இருந்தார். அதே சமயம் ஒரு இக்கட்டான சூழ்நிலையிலும் மாட்டி கொண்டு இருந்தார். அதாவது ரஜினி படம் கமிட் செய்வதற்கு முன்பு ஸ்டுடியோ கிரீன் (Studio Green) நிறுவனத்திடம் சூர்யாவை வைத்து ஒரு படம் மற்றும் இன்னொரு முன்னணி ஹீரோ வைத்து ஒரு படத்தையும் இயக்க ஒப்பந்தம் போட்டிருந்தார்.

இந்த இடைப்பட்ட நேரத்தில் தான் ரஜினி படம் வாய்ப்பு அவருக்கு வந்தது. ஸ்டுடியோ கிரீன் நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்து இருக்கிறோமே என்று தவித்து கொண்டு இருந்தார் ரஞ்சித். இதை கேள்விப்பட்ட ஞானவேல்ராஜா நீங்கள் போய் தலைவர் படம் முடித்து விட்டு வாருங்கள் நம்ம படத்தை அதன் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று வழிவிட்டாராம் ஞானவேல்ராஜா.

## சந்தானத்திற்காக ஒன்றிணைந்த அஜித் பட இயக்குனர்கள்



தமிழ் சினிமா இயக்குனர்களுக்கு மிகவும் பிடித்தநகைச்சுவைநடிகர்சந்தானம். இவர் தற்போது ஹீரோ என்ற அந்தஸ்த்திற்கு வந்து விட்டார். இவர் நடிப்பில் இனிமே இப்படித்தான் படத்தின் பாடல்கள் மே 10ம் திகதி வெளிவரவுள்ளது. இப்பாடலை சிம்பு வெளியிட ஆர்யா பெற்று கொள்கிறார்.

அதே போல் படத்தின் ட்ரைலரை வீரம் சிவா வெளியிட கௌதம் மேனன் பெற்று கொள்கிறார். இவர்கள் இருவரும் கடைசியாக அஜித்தின் படத்தை தான் இயக்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாரி படத்தின் ரிலீஸ் எப்போது?



தமிழ் சினிமாவில் கதாநாயகனாக மட்டுமில்லாமல் ஒரு தயாரிப்பாளராக, பாடகராக, பாடலாசிரியராக அனைத்திலும் வெற்றி கொண்டு வலம் வருபவர் தனுஷ். தனுஷின் அடுத்த வெற்றி படமாக களம் காணப்போவது மாரி. இப்படத்தை பாலாஜி மோகன் இயக்க, அனிருத் இசையமைத்து இருக்கிறார்.

ஏற்கனவே தனுஷ் - அனிருத் கூட்டணி நல்ல வரவேற்பை பெற்றுள்ளதால் இப்படத்தின் பாடல்களுக்கும் நல்ல எதிர்பார்ப்பு இருக்கிறது. இதன் பாடல் வெளியீட்டு விழாவை இம்மாதம் 25ம் திகதி நடத்த முடிவு செய்துள்ளனர். அதோடு படத்தை ஜூலை 17ம் திகதி வெளியிடப்போவதாக திட்டமிட்டுள்ளனர்.

## ரோமியோ ஜூலியட் படத்திற்கு ஆரம்பமே வெற்றி?



ஜெயம்ரவி - ஹன்சிகா நடிப்பில் விரைவில் வெளிவரவிருக்கும் படம் ரோமியோ ஜூலியட். இப்படத்தின் பாடல்கள் ஏற்கனவே பட்டி தொட்டியெல்லாம் பட்டையை கிளப்பி வருகின்றது. சமீபத்தில் தான் இப்படம் சென்ஸார் சென்றது.

படத்தில் எந்த ஒரு காட்சியையும் நீக்காமல் படத்திற்கு சென்ஸார் குழு 'யு' சான்றிதழ் அளித்துள்ளது. இதனால், படக்குழு மிகுந்த உற்சாகத்தில் இருந்து வருகிறது. இந்த கோடை விடுமுறையில் உங்களை குதுகலப்படுத்த வருகிறது ரோமியோ ஜூலியட்.

## சிம்புவின் காதலில் விழுவாரா சமந்தா?




சிம்பு என்றாலே வம்பு என்று தான் கோலிவுட்டில் ஒரு பேச்சு உள்ளது. ஆனால், தற்போதெல்லாம் இவர் மிகவும் மாறி விட்டாராம். தேவையில்லாமல் எந்த இடத்திலும் மைக் பிடிப்பதில்லை என்று ஒரு முடிவில் இருக்கிறார். சிம்பு, கௌதம் மேனன் இயக்கத்தில் 'அச்சம் என்பது மடமையடா' என்ற படத்தில் நடித்து வருவது அனைவரும் அறிந்ததே, ஆனால், இந்த படத்திலிருந்து சில கால்ஷிட் பிரச்சினை காரணமாக கதா நாயகி பல்லவி விலகி விட்டார்.

தற்போது இவருக்கு பதில் கௌதம் மேனனின் ஆஸ்தான நாயகி சமந்தாவிடம் தான் நடிக்க பேச்சு வார்த்தை நடந்து வருகிறதாம். அப்படி சமந்தா ஓகே சொன்னால், சிம்பு காதல் வலையை படத்தில் வீசப்போவது இவர் மேல் தான்.




# கவிதைப் பூங்கா



கூரையை பிய்த்துக்கொண்டு
எதுவும் கொட்டவில்லை
துளை மட்டும்
மிஞ்சுகின்றது
ஏழையின் கூரையில்...

- தோழன் அமிர்



நான் பேசுவேன்
என நீயும்
நீ பேசுவாய் என
நானும் எதிர்பார்த்து
நொடிகளும்
நீள்கிறது யுகங்களாக!

நீ நீதான்
என நினைத்தால்
நான் நானாகவே இருப்பேன்
தானாக நான் வந்து
தேனாக பேசியும்,
என் எண்ணம் வீணாகத் தான்
போனது
ஒரு நாள்
ஏனோ ! தான் பேசவில்லை என
தானாக புலம்ப வரும்
அப்போதும்,
நான் நானாகவே இருப்பேன்
உன் நினைவுகளோடு...



## வலிகளும் சுமைகளும்

இவன்
விழுந்து கிடக்கிறேனே
என்று சிலர் சிரிக்க
சிலர் அழ

முறிந்த
சிறகுகளோடு
எழுந்து பறக்கிறேன்
நான்

ஒரு
பக்கம் வறுமை
மறுபக்கத்தில்
யுத்தத்தின்
காயம்

இரண்டும்
என்னை சேர்த்து பிழிய
கிழிந்துபோகிறது
நெஞ்சு

வலிகள்
எனக்கு புதியது அல்ல
பழையது
தான்

அப்படி
இருந்தும் விழிகளில்
ஆறாய் ஓடுகிறது
கண்ணீர்

எனக்கு
ஆறுதல் சொல்வதற்கு
எத்தனை
பேர்
சோகத்தில்
மெலிந்துபோன
என் உடம்பினிலும்
அடிக்க வருகிறார்கள்
விசமிகள்

நான்
கொடுமை பொறுக்க
முடியாமல் கையில் கத்தி
எடுக்க

உனக்குள்
பொறுமை அவசியம்
என்கிறான்
கடவுள்

இது
இலஞ்சம் வாங்கிவிட்டு
உண்மைகள்
மறைக்கப்படும்
காலம்

குற்றவாளி
சுற்றவாளி என்று
விடுதலை செய்கிற
உலகம்


அது
எப்படியாக இருந்தால் கூட
அடங்காமல்
ஆடும்
அநீதிகள்
எல்லாம் ஒருநாள்
மடங்கி முடக்கவேண்டிவரும்

உமிரோவியன்

## கருவறை வாசனை


அம்மா உன் நினைவுகளில்
அலைபாயும் மனது ஆனேன்
சும்மா கிடைக்குமா உன் மகிழ்வு
சுடுகிறது நெஞ்சம்
பெற்றவள் நீ ஆசைப்பட்டது அன்று
கனவு நிஜமாகிறது இன்று
காண நீ இல்லையே நானோ
கண்ணீரில் உன் வாசனை உணர்கிறேன்
பிறந்த நாள் முதல்
கண்ணுக்குள் எனை வைத்தாய்
கண்ணுறங்கும் போது
கண்ணைவிட்டகலாது போனாய்
மண்ணில் நான் பிறந்தபயன்
இன்றுவரை துன்பம் தான்
துளிர்விடும் மகிழ்வை
கண்டிட யாருமில்லை
எல்லோரும் இருந்தும் அநாதை தான்
அம்மா நீ இல்லாததால்
அரவணைத்த உந்தன் மடி
ஆயுளுக்கும் போதும் அம்மா
கருவறை வாசனை மறையாது காப்பேன் அம்மா
தெய்வத்துள் தெய்வம் ஆனவரே
என்னை கொஞ்சம் பாருங்களேன்
உந்தன் ஆசி இருக்கும் வரை
உந்தன் மகள் வாழ்வாள் தாயே...

மறக்க நினைக்கும்
உன்னை
மனது நினைத்து
மகிழ்கிறது!
சுவற்றில் வீசிய
பந்தாய்
மீண்டும் நினைவில்
வருகிறது!
மறக்கவும் முடியாமல்
நினைக்கவும் முடியாமல்
நொடிபொழுதெல்லாம்
திணறுகிறேன்!
மன்னித்து விடு
உனை மறக்க நினைத்ததற்கு!
அனுமதி கொடு
உன்னை மீண்டும்
மீண்டும்
நினைப்பதற்கு!
கவிதையொன்று பார்த்தேன்
பதிலாய்
கணப்பொழுதில்
பதில் வரைந்தேன்!



பொய்யான நல விசாரிப்புகள்
போலியான புன்னகைகள்
எனத் தெரிந்தும் !
இன்னும் இன்னும் மனம் ஏங்குவது
ஏனோ எனத் தெரியவில்லை ?
யாரோ ஒருவரின் அன்பில் துளிர்கிறது
எங்கோ ஒரு ஆத்மாவின் சந்தோஷம் !


கவிதைகள்
புது வெள்ளமாய்
கரைபுரள்கிறது!
எழுதுகோலும்
சிணுங்குகிறது!
உன் அன்பைச்சொல்ல
என்னைப் பயன்படுத்தாதே
என்று!
எப்படிச்சொல்வேன்
வெற்றுக்காகிதமும்
முணுமுணுக்குதே
என்னைக் கீறி
கிழிக்காதே என்று!



அந்தாட்டிக்காவின்
பனிப்பாறையில்
நான் பனிப்படலமாயிருந்தேன்!
உன் மூச்சுக்காற்றின்
உஷ்ணத்தால்
கரைகிறேன் நாளும்!



# புனைகதைப் புயல்



# முள்ளிடை முகிழ்த்த மலர்

## அன்னக்கிளி

தொடர் - 88

மறுநாட்காலையில் ரவியை கடைசியாக கண்டதாக கூறிய சுரேன் தற்செயலாக வந்தான். அவனுக்கு வீட்டு நிலமை எதுவும் தெரியாது. அதனால் அவன் கதைத்துக்கொண்டிருக்கும் போது ரவி சாவடைந்த பகுதி விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாகவும் அங்கு போய் ஒருதரம் பார்த்துவிட்டு வரவேணும் என்றும் கூறினான். இதனைக்கேட்ட செல்லம்மா அதிர்ச்சி அடையவில்லை வழமைபோல அமைதியாக இருந்தாள்.

இது ராம்குமாருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. ஏற்கனவே ரவியின் முடிவுபற்றிபக்குவமாக அம்மாவுக்கு சொல்லவேண்டும் என்று வயதான ஒரு குடும்பத்தினையே ஏற்பாடு செய்திருந்தான். பக்குவமாக கூறக்கூடியவர்கள் வந்து கூறும்போதே குழப்பம் ஏற்பட்டு விடும் என்று பயந்து கொண்டிருந்தவனுக்கு சட்டென இவன் கூறியபோது எதுவித வெளிப்பாடும் காட்டாது அம்மா இருப்பது அவனுக்கு அதிசயமாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது. ஆயினும் அடுத்து என்ன ஆகும் என்பது புரியாமல் தவித்தான். அம்மாவே மௌனம் கலைத்தாள்.



"தம்பி.... கடைசியாய் ரவி சாப்பிட்டு கீப்பிட்டு இருந்தவனோ..."

கேள்வியால் சுரேன் மட்டுமல்ல அனைவரும் அதிர்ந்து போயினர். அவன் தன்னை சுதாகரித்துக்கொண்டு...

"ஓம் அங்க அப்ப என்ன ரொட்டி .... கஞ்சி தானே அது சப்பிட்டவன்."

"நீயும்... அவடத்தைதான் இருந்தனியோ...."

கேள்வி பலமாக இருந்தது. பதில் கூறும்போது என்ன நடக்குமோ என்ற பயம் சுரேனுக்கு மட்டுமல்ல வதனா உள்ளிட்ட அனைவருக்கும் இருந்தது. அதனால் அவரின் மனம் கஸ்ரப்படாதபடி அமையும் வண்ணம் தனது பதில்களை பொய்கலந்து கூறி சமாளித்தான்.

"ஓ... கொஞ்சநேரத்துக்கு முதல் தான் கதைச்சிட்டு அங்கால போனனான். பிறகு வந்து கூட்டிற்று போறன் ரெடியாய் இரு எண்டுட்டு அம்மாக்களடிக்கு போக... அதுக்கிடையில நடந்திட்டு.."

கூறி முடித்து அமைதியானான். அவனை அறியாமலே பெருமூச்சு வெளியேறியது. காலை நேரத்திலும் உடல் வேர்த்தது. அதன்பின் அம்மா கேள்வி எதுவும் கேட்காது அமைதியாக இருந்தாள். அடுத்து என்ன நடக்கும் என்று அறியாமல் ராம் தவித்தான். வதனா சற்று மறைவாக கடைக்குள் நின்று கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்கு ஏற்கனவே தெரிந்த முடிவு என்பதால் சஞ்சலப்படாது நிதானமாக இருந்தாள். ஆனாலும் மாமியார் திடீரென கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்து விடுவாள் என்ற பயத்தால் உடல் வியர்த்தது.

"அப்ப பிறகு அவடத்தடிக்கு போனனியோ...."

போகவில்லை என்று கூறிச்சமாளித்தால் அவன் சாவை உறுதிப்படுத்த முடியாது. போய்ப்பார்த்தபோது கண்ட காட்சிபற்றி கூறவும் முடியாது தவித்தான். அம்மா விடுவதாக இல்லை

"அதில கனசனம் இருந்ததோ..."

கடைசியாக கேட்ட கேள்விக்கு பதில் கூறும் சாட்டில் முதல் கேள்விக்கான பதிலை சமாளிக்கலாம் என நினைத்து.

"நிறைய இருந்ததுகள்."

என்று கூறி அமைதியானான்.

"அப்ப... அவளவு சனமும் ஆப்பிட்டுட்டுதே."

ஆர்வமாய் கேட்டார்.

"இல்லை ஆனா... நிறையப்பேர்..."

"எத்தின.. வரும்..."

"அது... ஆருக்கு தெரியும்... தன்ர உயிரக்காப்பாத்த ஓடுற நேரம் ஆக்களையே எண்ணுதுகள்."

மௌனம் கலைந்து கூறினார் கணபதிப்பிள்ளையார்.

"ஓமையா... சரியாய் தெரியாது.....அப்ப மனப்பதட்டத்தில் எல்லாம் மறந்து போட்டுது.

"குடும்பத்தை விட்டுட்டு ஓடினாக்கள் எத்தின பேர். ஏன் பெறுமாத பிள்ளைத்தாச்சியையே விட்டுட்டு நந்திக்கடலுக்க பாஞ்சு ஓடினாக்களும் இருக்கினம்தானே."

கணபதிப்பிள்ளையார் மனைவியின் கேள்விக்கான பதிலை திசை திருப்பும்வகையில் தானும் சேர்ந்து கதைக்கத் தொடங்கினார்.

"மாத்தளன்னிலையே பயத்தில அப்பிடித்தானே சிலர் குடும்பங்களை விட்டுட்டு வந்ததுகள். ஏன் நீங்களும் அவங்கள் சுடத்துவங்க முன்னுக்கு ஓடிப்போட்டியள் தானே."

தன் புருசனையே போட்டு வாங்கினாள் செல்லம்மா..

"அதென்ன கன்றாவி.... சற்புறு எண்டு சீறிக்கொண்டு கை,காலுகளுக்காலை போகுது. அப்ப உயிரைக்காப்பாத்த ஓடினனான்தான் கரையில நிண்டு குளறினதைமறந்திட்டியே...."

"மறக்கேல்லையப்பா... சொன்னனான்...."

திடீரென தோன்றிய முரண்பாடு கதையை திசைமாற்றும் என நினைத்த போதும் சட்டென அது முடிவடைந்து மீண்டும் அதே கேள்வியை கேட்டார். பதில் கூறாது இருக்க எடுத்த முயற்சிகள் எல்லாம் தோல்வியில் முடிவடைந்ததால் எப்பிடியாவது சமயோசிதமாக கூறிமுடிக்கவேண்டும் என்ற முடிவுடன் தன்னைத்தயார் படுத்தினான்.

"போனனான்...."

என்று கூறியவனுக்கு அங்குகண்ட காட்சியைப்பற்றிக் கூற முடியவில்லை. சற்று அமைதியானான்.

"காயம் எவடத்தை...."

அம்மா இயல்பாக கேட்டாள்.

"அது..... முதல் கால்லை....."

"அதைக்கேக்கையில்லை... கடைசியாய்."

"அது... அது... நான் பாக்கயில்லை....."

தட்டுத்தடுமாறி பதில் கூறினான்.

"அப்ப அவன்ர முகம் என்னண்டு சொல்லுவாய்....."

"அது... அதம்மா... உடம்பை பாத்தனான்."

"என்ன தம்பி.. வடிவாய் பாக்கேல்லையோ..."

"முகத்தை பாத்திட்டு அதில கிடந்த தறப்பாளால மூடிற்று வந்திட்டம் அதில மினக்கிடயில்லை....."

சற்று தாமதித்தவன் தொடர்ந்து கூறினான்.

"ரவிய பாத்தவுடன எனக்கு ஏலாமப்போட்டுது. அங்க நிண்ட சனம் தான் மூடினது. அப்பவே நாங்களும் உள்ளுக்கு வர வெளிக்கிட்டுட்டம். அதால ஒண்டும் செய்ய ஏலாமப்போட்டுது"

இப்போது வேறு திசைப்பக்கமாக திரும்பியிருந்த செல்லம்மா அமைதியானாள். வதனாவின் கண்கள் மட்டுமல்ல சுரேன் முதல் அனைவரது கண்களும் பனித்தன. ஒவ்வொருத்தரும் இரகசியமாக துடைத்துக்கொண்டனர். நீண்ட நேர அமைதியை செல்லம்மாவே கலைத்தாள்.

"இரண்டு காலும் இல்லாம இந்த உலகத்தில இருந்து கஸ்ரப்படுவதைவிட என்ர பிள்ளை நின்மதியாய் போட்டுது."

என்று கூறி முகத்தை துடைத்துக்கொண்டாள். இதைக் கேட்ட வதனாவுக்கு தாங்கவே முடியவில்லை. துயரம் தொண்டையை அடைக்க மூச்சு முட்டியது. அருகில் வந்த தர்சாவை இறுக கட்டிப்பிடித்துக்கொண்டாள். அவளும் விம்மினாள். இவர்கள் கடை வாசல்கரையில் நிற்பதை யாரும் கவனிக்கவில்லை. எல்லோரும் துயரத்தில் ஆழ்ந்திருந்தனர். அதனால் அமைதியே நிலவியது. எல்லோருடைய தலைகளும் ஏதோ ஒன்றை வெறித்துப் பார்த்தபடி லயித்துப் போயிருந்தது. சற்று நேரத்தில் தன் சேலைத்தலைப்பால் முகத்தை அழுத்தித்துடைத்த செல்லம்மா கடகடவென எழுந்தாள். அவள் எழுந்தவேகத்தை கண்டு திகைத்தனர். என்ன செய்ய போகிறாளோ என பயந்தனர். விரக்தியில் ஏதாவது செய்து விடுவாளே என திகைத்தனர். அவர்களும் எழுந்தனர். அதற்கிடையில் விறுவிறென கடைக்குள் புகுந்தவள் மேசைலாச்சியை வேகமாக இழுத்துத்திறந்தாள்.

அவள் வருவாள்...



# ஆன்மீக உலகம்



## சுவாமி விவேகானந்திரன் சிந்தனைகள்



துன்பங்களைக் கண்டு அஞ்சாதே. பெரிய மரத்தின் மீது புயல் காற்று மோதத்தான் செய்யும். கிளறி விடுவதால் நெருப்பு நன்கு எறியத் தான் செய்யும். தலையில் அடிபட்ட பாம்பு முன்னிலும் வேகமாக படமெடுக்கத் தான் செய்யும். ஆகவே துன்பங்களைக் கண்டு துவண்டு விடாமல், உறுதியாய் எதிர்த்து நில். உன்னால் எதுவும் முடியும்.

எப்பொழுதும் விரிந்து மலர்ந்து கொண்டிருப்பது தான் வாழ்க்கை. மாறாக சுருங்கி, மடங்கிக் கொண்டிருப்பதே மரணமாகும். தன்னுடைய சுயநலத்தை மட்டும் கவனித்துக் கொண்டு, சுகபோகத்துடன் வாழும் ஒருவனுக்கு நரகத்திலும் இடம் கிடைக்காது.

மற்றவர்களுக்கு நன்மை செய்வதே தர்மம். தீமை செய்வதே பாவம். வலிமையும் ஆண்மையுமே வீரம். பல வீனமும் கோழைத்தனமுமே மரணம். மற்றவர்கள் மீது அன்பு செலுத்துவதே புண்ணியம். பிறரை வெறுத்து ஒதுக்குவதே பாவம்.

எழுங்கள், விழியுங்கள் என்ற அச்சமற்ற செய்தியை அறைகூவிச் சொல்வதற்காகவே நான் பிறந்திருக்கிறேன். இந்தப் பணியில் நீங்கள் என்னுடைய உதவியாளர்களாக இருங்கள்.

தொடர்ந்து மனதில் புனிதமான எண்ணங்களையே சிந்தியுங்கள். யாருக்காவது உங்களால் சிறு நன்மையாவது செய்ய முடியுமா என்று எண்ணி உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்.

பிரதிபலன் எதையும் கருதாமல் நாம் உலகிற்குச் செலுத்தும் ஒவ்வொரு நல்லெண்ணமும் நமக்குள் சேகரித்து வைக்கப்படுகிறது. இந்த நல்லெண்ணமே பாவ புண்ணிய பலன்களில் இருந்து நம்மை விடுவிக்கிறது.

சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை அனுசரித்து அமைத்துக் கொள்வது தான் வெற்றிகரமான வாழ்க்கைக்குரிய முழு ரகசியம். இந்த உண்மையைப் புரிந்து கொண்டவர்கள் வாழ்வில் மலர்ச்சி உண்டாகும்.

சமநிலையில் இருந்து பிறழாதவர்கள், நெஞ்சில் சாந்தகுணம் கொண்டவர்கள், இதயத்தில் இரக்கமும் அமைதியும் உடையவர்கள், பிறர் சொல்வதை ஆராய்ந்து ஏற்பவர்கள் ஆகியோர் தங்களுக்கு தாங்களே நன்மையைத் தேடிக்கொள்கிறார்கள்.

உழைப்பே வடிவெடுத்த சிங்கத்தின் இதயம் படைத்த ஆண்மகனையே திருமகள் நாடிச் செல்கிறாள்.

வீர இளைஞர்களே! முன்னேறிச் செல்லுங்கள். கட்டுண்டு கிடக்கச் செய்யும் தடைகளை வெட்டி வீழ்த்தவும், எளியவர்களின் துயரச்சுமையை குறைக்கவும், இருண்ட உள்ளங்களில் ஒளியேற்றவும் முன்னேறிச் செல்லுங்கள்.

நம்புங்கள். இறைவனின் கட்டளை வந்துவிட்டது. பாமரமக்களும், எளியவர்களும் நலம் பெற வேண்டும் உழைத்திடுங்கள். இறைவனின் கையில் நீங்கள் ஒருகருவி என்ற உணர்வுடன் பிறருக்கு சேவை செய்யுங்கள்.

உங்களிடம் நேர்மை இருக்கிறதா? பொதுநலத்துடன் சேவை செய்கிறீர்களா? அன்பு இருக்கிறதா? இம்மூன்றும் இருந்தால் பயமே வாழ்வில் தேவையில்லை. மரணம் கூட உங்களை நெருங்க முடியாது.

இறைநம்பிக்கையோடு செயல்படுங்கள். அவரையே எப்போதும் சார்ந்திருங்கள். உங்களை எந்தச் சக்தியும் எதிர்த்து நிற்க முடியாது.

வலிமையின்மையே துன்பத்திற்கான ஒரே காரணம். பொய்யும், திருட்டும், கொலையும், மற்ற அனைத்து பாவச் செயல்களும் மனபலவீனத்தாலே தோன்றுகின்றன.

உலகவாழ்வுக்குள் வந்துவிட்டீர்கள். அதற்கு அறிகுறியாக ஏதேனும் அடையாளத்தினை விட்டுச் செல்லுங்கள். எழுந்திருங்கள், உழையுங்கள். இல்லாவிட்டால் நாம் பூமியில் பிறந்ததில் ஒருபயனும் இல்லை.

## நபிகளின் பொன்மொழிகள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நபித்தோழர்களில் சிலர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "எங்கள் உள்ளத்தில் சில (தடுமாற்றமான) விஷயங்கள் எழுகின்றன. அவற்றை (வெளிப்படுத்திப்) பேசுவதைக்கூட நாங்கள் மிகப்பெரும் (பாவ)காரியமாகக் கருதுகிறோம்" என்று கூறினர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "உண்மையிலேயே நீங்கள் அத்தகைய உணர்வுகளுக்கு உள்ளாகின்றீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு நபித்தோழர்கள், "ஆம்" என்று பதிலளித்தார்கள். அதற்கு, "அதுதான் ஒளிவுமறைவற்ற (தெளிவான) இறைநம்பிக்கை" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி). நூல் : முஸ்லிம் 188

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் சமுதாயத்தாரில் (பாவம் செய்த) அனை வரும் (இறைவனால்) மன்னிக்கப்படுவர் (தம் பாவங்களைத்) தாமே பகிரங்கப்படுத்துகின்றவர்களைத் தவிர. ஒரு மனிதன் இரவில் ஒரு (பாவச்) செயல் புரிந்து விட்டுப் பிறகு காலையானதும் அல்லாஹ் அவனது பாவத்தை (பிறருக்குத் தெரியாமல்) மறைத்துவிட்டிருக்க, இன்னாரே! நேற்றிரவு நான் (பாவங்களில்) இன்னின்னதைச் செய்தேன் என்று அவனே கூறுவது பகிரங்கப்படுத்துவதில் அடங்கும். (அவன் செய்த பாவத்தை) இரவில் (பிறருக்குத் தெரியாமல்) இறைவன் மறைத்துவிட்டான். (ஆனால்) இறைவன் மறைத்ததைக் காலையில் அந்த மனிதன் தானே வெளிச்சமாக்கி விடுகிறான். அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி) அவர்கள் நூல்: புகாரி 6069

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மலையின் மீதிருந்து கீழே குதித்து தற்கொலை செய்துகொள்கிறவர் நரக நெருப்பில் (தள்ளப்பட்டு மேலிருந்து கீழே) என்றைக்கும் நிரந்தரமாக குதித்துக் கொண்டேயிருப்பர். விஷம் குடித்து தற்கொலை செய்துகொள்கிறவர் தம் விஷத்தைக் கையில் வைத்திருந்தபடி நரக நெருப்பில் என்றென்றும் நிரந்தரமாக குடித்துக் கொண்டேயிருப்பார். ஒரு கூரிய ஆயுதத்தால் தற்கொலை செய்து கொள்கிறவரின் கூராயுதத்தை அவர் தம் கையில் வைத்துக்கொண்டு நரக நெருப்பில் தம் வயிற்றில் தாமே என்றென்றும் நிரந்தரமாக அதனால் குத்திக் கொண்டேயிருப்பார்" என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி) நூல்: புகாரி 5778

## உன்னதப்பாட்டு

சாலமோன் ராஜா தனக்கு லீபனோ னின் மரத்தினால் ஒரு இரதத்தைப் பண்ணுவித்தார்.

அதில் தூண்களை வெள்ளியினாலும் அதன் தட்டைப்பொன்னினாலும் அதின் ஆசனத்தை இரத்தாம்பரத்தினாலும் பண்ணுவித்தார். அதின் உட்புறத்திலே எருசலேமின் குமாரத்திகளினிமித்தம் நேசம் என்னும் சமுக்காளம் விரித்திருக்கிறது.

சீயோன் குமாரத்திகளே நீங்கள் புறப்பட்டுப்போய் ராஜாவாகிய சாலொ மோனின் கலியாணநாளிலும் மனமகிழ்ச்சியின் நாளிலும் அவரு டைய தாயார் அவருக்குச் சூட்டின முடியோடிருக்கிற அவரைப் பாருங்கள்.

நீ ரூபவதி. என் பிரியமே. நீ ரூபவதி. உன் முக்காட்டின் நடுவே உன் கண்கள் புறாக்கண்களாயிருக்கிறது. உன கூந்தல் கீலேயாத் மலையில் தழை மேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது.

உன் பற்கள் மயிர் கத்தரிக்கப்பட்டபின் குளிப்பாட்டப்பட்டுக் கரை யேறுகிறவர்களும் ஒன்றாகிலும் மலடாயிராமல் எல்லாம் இரட்டைக் குட்டியீன்றவைகளுமான ஆட்டு மந்தையைப்போலிருக்கிறது.

உன் உதடுகள் சிவப்புநூலுக்குச் சமான மும், உன் வாக்கு இன்பமுமாயிருக்கிறது. உன் முக்காட்டின் நடுவே உன் கன்னங்கள் வெடித்த மாதுளம் பழம்போலிருக்கிறது.

உன் கழுத்து பராக்கிரமசாலிகளின் கேடகங்களாகிய ஆயிரம் பரிசைகள் தூக்கியிருக்கிற ஆயுதசாலையாக்கப்பட்ட தாவீதின் கோபுரம் போலிருக்கிறது.

உன் இரண்டு ஸ்தனங்களும் லீலி புஷ்பங்களில் மேயும் வெளிமானின் இரட்டைக்குட்டிகளுக்குச் சமானம்.

## இனப்படுகொலை என்ற வார்த்தையினை உச்சரிக்க தமிழர்தரப்பு தயங்குவது ஏன்?

தொடர்ச்சி..

ஆனால் சில தினங்கள் கழித்து புதுக்குடியிருப்பு மருத்துவமனை தாக்கப்பட்டது. 02.02.2009 தொடக்கம் 04.02.2009 குண்டுவீசி நோயாளர்கள் கொன்றழிக்கப்பட்டார்கள். ஐ.நா மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதி நிதிகள் குறித்த மருத்துவமனை வளாகத்தில் தங்கிநின்ற நிலையிலேயே சிறிலங்கா அரசு படைகள் மேற்படி மருத்துவமனை மீது தாக்குதலை மேற்கொண்டன. இவையெல்லாம் சிங்கள அரசு செய்தது இன அழிப்பு என்பதற்கு சாட்சிகள் இல்லையா?

பிரித்தானிய ஸ்கை ஒலிபரப்பு நிறுவனத்திற்கு 03.02.2009 அன்று வழங்கிய சிறப்பு நேர்காணல் ஒன்றில் பாதுகாப்பு வலத்திற்கு வெளியே எந்த வைத்தியசாலையும் இல்லை. அதனால் புதுக்குடியிருப்பு மருத்துவமனை ஒரு நியாயபூர்வமான இலக்கு என்று வைத்தியசாலைகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களைநியாயப்படுத்திசிறிலங்கா ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ச கருத்துத் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைகள் தாக்கப்படுவதை நியாயப்படுத்தியும் இனியும் மருத்துவமனைகள் தாக்கப்படும் என்பதை வலியுறுத்தியும் மேற்படி சிறிலங்கா அர சின் இராணுவப் பேச்சாளரும், மற்றும் ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்புச் செயலாளருமான கோதபாய ராஜபக்ச ஆகியோர் உத்தியோக பூர்வமாகவே உலக செய்தி நிறுவனங்களில் கருத்துக்களை வெளியிட்டனர். சர்வதேச செய்தி நிறுவனங்களுக்கு இவ்வாறான ஒரு கருத்தை துணி கரமாக அவர்களால் கூறமுடிகின்றது என்றால், தமது ஆக்கிரமிப்பிற்குட்பட்ட தமிழர்களை எந்தவகையில் படுகொலைசெய்திருப்பார்கள் என்பதை உணர்ந்துகொள்ளமுடியும்.

முள்ளியவளையில் இயங்கிய முல்லைத்தீவு பொது மருத்துவமனை, வள்ளிபுனத்தில் இயங்கிய முல்லைத்தீவு பொது மருத்துவமனை, விசுவமடுவில் இயங்கிய கிளிநொச்சி பொது மருத்துவமனை, உடையார்கட்டில் இயங்கிய கிளிநொச்சி பொதுமருத்துவமனை, மூங்கிலாறில் இயங்கிய மல்லாவி மருத்துவமனை, புதுக்குடியிருப்பு மருத்துவமனை என்பன மருத்துவமனைகள் என்பதற்காகவே தாக்கப்பட்டன. இவையெல்லாம் இன அழிப்பு என்பதை எம்மவர்க்கு ஏன் உணர்த்தவில்லை.


1958 முதல் இன்று வரை தமிழினத்துக்கு உரிமைகள் வழங்கப்படுவதாக கைச்சாத்திடப்பட்ட உடன்பாடுகள் எல்லாம் சிறிலங்கா அரசால் பல தடவைகள் குறிப்பாக கடைசி நோர்வே போர்நிறுத்த உடன்பாடு வரை கிழித்தெறியப்பட்ட வரலாறு எல்லோருக்கும் தெரியும். கடைசியாக நடந்த பேச்சுக்களின் போது இணைத்தலைமை நாடுகள் சிறிலங்காவுக்கு சார்பாக செயற்பட்டன. இந்த பேச்சுகாலத்தில் சிறிலங்கா படைத்தரப்பு தன் படையை பலப்படுத்தவே பயன்படுத்தியது என்பது தெளிவாக தெரிந்தது. பேச்சுகளின் காலங்களை தமிழரை ஏமாற்றும் காலங்களாகவே சிறிலங்கா அரசு பயன்படுத்தியது. இதையெல்லாம் எவ்வாறு இலகுவாக மறந்தோம் மன்னித்தோம் என்றுகூறிவிட்டு மீண்டும் இவ்வாறான அழிவுகளை எப்போது எதிர்கொள்ளப்போகின்றோம் என்று தெரியாமல் தினம் தினம் ஏக்கத்தோடு வாழமுடியும்.

மனிதகுலமே மன்னிக்கமுடியாத பாவங்களையெல்லாம் செய்துவிட்டு வரலாறுமுழுக்க தமிழினம் கலங்கித்துடிக்கும் வேதனைகளை யும், வலிகளையும் தமிழர்களுக்கு செய்துவிட்டு, வீரரென்றும் தீரரென்றும் மார்தட்டிக்கொள்ளும் இனப்படுகொலையாளிகளை எவ் வாறு தண்டிக்கப்போகின்றோம். இவர்களைப்போர்க்குற்றவாளிகள் என் பதை விட இனப்படுகொலையாளிகள் என்று உலகிற்கு புரியவைக்கப்போவது எப்போது? இன அழிப்பு என்ற வார்த்தைப்பிரயோகத்தினால் நாங் கள் அனுபவித்த கொடுமைகளை யும், சோதனைகளையும் விட இனி எந்தப்பாதகமும் எமக்கு நேர்ந்துவிடாது. இலங்கையில் சிங்கள ஆட்சியாளர்களின் ஆட்சியிலே தமிழர்களாகிய நாங்கள் நாய்கள், பூனைகளைவிட மோசமாக நடத்தப்பட்டோம், சுயவிமர்சனங்களுக்கும் உரிமை இல்லை. சுயமரியாதை உள்ள எந்த தமிழன் இந்த நாட்டைத் தன் நாடாகக் கருதுவான்?

தொடரும்...

# அறிவியல் உலகம்

## Android Wear இன் புதிய பதிப்பு அறிமுகம்



ஸ்மார்ட் கைக்கடிகாரம் போன்ற சாதனங்களுக்காக கூகுள் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட இயங்குதளமே Android Wear ஆகும். தற்போது Android Wear 5.1.1 பதிப்பினை கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

இப்பதிப்பானது முதன் முறையாக LG நிறுவனத்தின் Watch Urbane கடிகாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் வயர்லெஸ் தொழில்நுட்பமான WiFi இணைப்பிற்கான அப்பிளிக்கேஷன் உட்பட பல புதிய அப்பிளிக்கேஷன்கள் தரப்பட்டுள்ளன.மேலும் LG G Watch R மற்றும் Moto 360 என்பவற்றிலும் Android Wear இனை பயன்படுத்த முடியும்.

## Microsoft Office 2016 Preview பதிப்பு அறிமுகம்




அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகையான வேலைகளுக்கு சிறந்த மென்பொருள்களமைக்ரோசொப்ட் நிறுவனத்தின் Microsoft Office மென்பொருட்கள் விளங்குகின்றன. இம்~ மென்பொருளில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி Microsoft Office 2007, Mi crosoft Office 2010, Mi crosoft Office 2013 ஆகிய பதிப்புக்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இந்நிலையில் கடந்த 12 மாதங்களாக உருவாக்கப்பட்டுக்கொண்டிருந்த Micro soft Office 2016 பதிப்பின் Preview பதிப்பு தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இம்மென்பொருளினை மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையப்பக்கத்திலிருந்து தரவிறக்கம் செய்து நிறுவிக்கொள்ள முடியும்.


## iPhone 6 கைபேசிகளை பாதுகாக்கும் நீர் உட்புகாத மின்கல கவசம்



அப்பிள் நிறுவனத்தினால் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட iPhone 6 ஸ்மார்ட் கைப்பேசியானது மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பினை பெற்றுள்ளது. இந்நிலையில் குறித்த கைப்பேசியினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு துணைச் சாதனங்கள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றின் வரிசையில் தற்போது நீர் உட்புகாத மின்கல கவசம் (Waterproof Battery Case) Mophie நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. மேலும் இக்கவசத்தில் 2,750 mAh சக்தியை வழங்கக்கூடிய மின்கலம் இணைக்கப்பட்டுள்ளது. தவிர கறுப்பு வர்ணத்தில் கிடைக்கக்கூடியதாக இருப்பதுடன் இதன் விலையானது 129.95 டொலர்கள் ஆகும்.

## Samsung Galaxy Tab S2 விரைவில் அறிமுகம்



Samsung நிறுவனம் Samsung Galaxy Tab S2 எனும் புத்தம் புதிய டேப்லட்டினை அடுத்த மாதமளவில் அறிமுகம் செய்யவுள்ளது. இந்த tab let ஆனது 8 அங்குல அளவு மற்றும் 9.7 அங்குல அளவுகளை உடைய திரைகளைக் கொண்ட இரு பதிப்புக்களாக வெளியிடப்படவுள்ளது.

இவற்றில் 64 bit Samsung Exy nos Processor, பிரதான நினைவகமாக 3GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பன தரப்பட்டுள்ளன. இவை தவிர 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமரா மற்றும் 2.1 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கெமரா என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## ஆபத்தை ஏற்படுத்தும் குளிர்பானங்கள்



உணவுகளை உட்கொண்ட பின் குளிர்பானங்களை அருந்துவதால் உடலுக்கு ஆபத்துகள் ஏற்படுகின்றன. உணவு உட்கொண்ட பின்னர், குளிர் தண்ணீரோ, குளிர்பானமோ குடிப்பவர்களுக்கு இதயபாதிப்பு ஏற்படும் ஆபத்து அதிகம் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். இதற்கு காரணம் உண்ட உணவில் உள்ள எண்ணெய், கொழுப்புகள் ரத்த நாளங்களில் படியச் செய்வதே இதற்கு காரணம்.

உணவு உண்ட பின் குளிர்பானம் அருந்துவது இதயபாதிப்புகளை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். உணவு உண்டவுடன் குளிர்ச்சியான தண்ணீரை குடித்தால், அது நாம் சாப்பிட்ட உணவில் உள்ள எண்ணெய்த் துகள்களை கெட்டியாக்கி விடுகிறது. இதனால் சாப்பிட்ட உணவு ஜீரணம் ஆவதில் சிக்கல் ஏற்படுகிறது. அதுமட்டுமின்றி உடலில் இருக்கும் கொழுப்பின் அளவு அதிகரிக்கவும் அது காரணமாகி விடுகிறது.

இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் இதயம், சிறுநீரகம் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகள் வரலாம் என்றும் மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். மாரடைப்பு நோய் உட்பட பல்வேறு இதயநோய்க்கு ஆளானவர்கள் சாப்பிடும் போது கூல் தண்ணீரை தொடக்கூடாது என்றும் அவர்கள் அறிவுறுத்துகிறார்கள். குளிர் தண்ணீர் குடிப்பதனால் வேறு பல தீமைகளும் ஏற்படுத்தும் என்றும் அவர்கள் பட்டியலிட்டுள்ளனர். நெஞ்செரிச்சல், உயர் ரத்த அழுத்தம், சரும பாதிப்பு, பக்கவாதம், வயிற்றுவலி, பற்கள் பாதிப்பு போன்றவையும் ஏற்படுகின்றன. எனவே குளிர் தண்ணீர் அருந்துவதை தவிர்த்துவிடுங்கள், அதற்கு பதிலாக வெதுவெதுப்பான நீர் அருந்துங்கள்.

## Skype பெயரை பயன்படுத்த நீதிமன்றம் கட்டுப்பாடு




உலகில் அதிகளவானவர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் வீடியோ செட்டிங் மென்பொருளான Skype போன்றே ஒலிபரப்பு சேவையை வழங்கிவரும் Sky நிறுவனத்தின் பெயர் காணப்படுவதாக ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் ஒன்று தெரிவித்துள்ளது. மைக்ரோசொப்ட் நிறுவனம் குமிழிகள் போன்ற வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட லோகோவை அடிப்படையாகக் கொண்ட Skype எனும் பெயரை பதிவு செய்ய முற்பட்டுள்ளது.

இதற்கு எதிராக அமெரிக்க நிறுவனம் ஒன்று வழக்கு தொடர்ந்துள்ளது. இவ்வழக்கினை விசாரித்த நீதிமன்றம் Skype எனும் பெயர் Sky எனும் பெயரைப் போன்றே காணப்படுவதாகவும், Sky லோகோவில் காணப்படும் நிறம் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக Skype எனும் பெயரில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய நிலைக்கு மைக்ரோசொப்ட் நிறுவனம் தள்ளப்பட்டுள்ளது.

## Vodafone அறிமுகம் செய்யும் அன்ரோயிட் ஸ்மார்ட் கைப்பேசி




ஐக்கிய இராச்சியத்தின் பிரபல கைப்பேசி வலையமைப்பு சேவையை வழங்கி வரும் Vodafone நிறுவனம் Smart Prime 6 எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்துள்ளது. 4 அங்குல அளவு, 1280 x 720 Pixel Resolu ton உடைய HD தொடுதிரையினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியானது 1.2GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Quad Core Processor, 8GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது.

இவை தவிர 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கெமரா ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ள இக்கைப்பேசியின் விலையானது 79 பவுண்ட்ஸ்களாகும்.

## தினமும் 04 கப் தேநீர் அருந்துவதால் ஏற்படும் விளைவுகள்



தினமும் நான்கு கப் தேநீர் அருந்துவதும், வாரம் மூன்று கப் மது அருந்துவதும் கருவுறுதல் சிக்கலில் ஒரே அளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இதனால் பெண்களுக்கு 25% குழந்தை பிறக்கும் வாய்ப்பு குறைகிறது. காஃபைன் என்பது கார்பன், ஹைட்ரஜன், ஒக்சிஜன் கலந்த ஒரு ரசாயனப் பொருள் ஆகும். இது உடலுக்கு சுறுசுறுப்பைத் தருகிறது, ஆனால் கூடவே இதயத் துடிப்பை அதிகரிக்கச் செய்து இரத்தஅழுத்தத்தையும் அதிகரிக்கிறது. இவை உடலின் சமநிலையை சிறிது சிறிதாக பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன. குழந்தையின்மைக்குக் காரணமாக மருத்துவர்கள் பட்டியலிடும் புகைத்தல், மது அருந்துதல், அதிக உடல் எடை என்னும் அதி முக்கிய மூன்று காரணிகளுடன் இப்போது காஃபைன் எனும் விஷப் பொருளும் இணைந்துள்ளது.

கருவுறுதலில் மட்டுமல்ல, தாய்மை நிலையிலிருக்கும் பெண்கள் தேநீர் குடித்தால் அந்த நச்சுத் தன்மை கருவில் இருக்கும் குழந்தையைக் கூட சென்று தாக்குகிறது. தேநீர் குடித்துக் கொண்டே தினமும் ஒன்றுக்கு மேற்பட்ட சிகரெட்கள் புகைக்கும் பெண்கள், வாரம் தோறும் மூன்று கப் மதுவும் அருந்தினால் அவர்களுக்கு இயற்கையாக குழந்தை பிறக்கும் வாய்ப்பு வெறும் 5 விழுக்காடு என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சிறுநீரகங்களுக்காக உண்ண வேண்டிய உணவுகள்

உடலில் இரத்தத்தைத் சுத்தப்படுத்தும் ஒரு முக்கிய உறுப்பு தான் சிறுநீரகம். இது இரத்தத்தில் உள்ள டொக்ஸின்கள் மற்றும் அளவுக்கு அதிகமான தண்ணீரை பிரித்தெடுத்து, சிறுநீர்பைக்கு அனுப்பிவிடுகிறது. இதற்கு சிறுநீரகம் நன்கு செயற்பட வேண்டும். இல்லாவிட்டால், இரத்தத்தில் டொக்ஸின்கள் சேர்வதுடன், சிறுநீரக கற்கள் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்றவற்றிற்கு வழிவகுக்கும்.

எனவே சிறுநீரகங்களின் ஆரோக்கியமான செயற்பாட்டிற்கும், சிறுநீர் வெளியேற்றம் அதிகரிக்கவும் ஒருசில உணவுப் பொருட்களை அன்றாட உணவில் சேர்த்து வர வேண்டும். இங்கு சிறுநீரகங்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள சாப்பிட வேண்டிய உணவுகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவை என்னவென்று பார்ப்போமா. தர்பூசணியில் நீர்ச்சத்து அதிகம் உள்ளது. எனவே இது அதிக அளவில் சிறுநீரை உற்பத்தி செய்து, உடலில் இருந்து கழிவுகளை வெளியேற்றும்.

எலுமிச்சை ஜூஸை தினமும் குடித்து வந்தால், சிறுநீரக கற்கள் வரும் வாய்ப்பு குறையும். மேலும் எலுமிச்சை சிறுநீரகங்களை ஆரோக்கியமாக செயற்பட பெரிதும் உதவும். பெர்ரிப்பழங்களில் அன்டி-ஒக்ஸிடன்ட்டுகள் அதிகம் இருப்பதோடு, நோய்களை எதிர்த்துப் போராடும் பொருட்கள் பல நிறைந்துள்ளன. மேலும் இது சிறுநீரகங்களில் இருந்து யூரிக் அசிட்களை வெளியேற்றி, சிறுநீரகங்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவும். எனவே முடிந்த அளவு அவ்வப்போது பெர்ரிப் பழங்களை சாப்பிடுங்கள்.

அப்பிளிலும் அன்டி-ஒக்ஸிடன்ட்கள் மற்றும் நார்ச்சத்துக்கள் அதிகம் உள்ளது. இது சிறுநீரகங்களின் செயற்பாட்டை மேம்படுத்தும்.

பூசணி விதைகளில் சிறுநீரகங்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் அன்டி-ஒக்ஸிடன்ட்கள், கனிமச்சத்துக்கள் மற்றும் விட்டமின்கள் உள்ளன. எனவே இவற்றை உணவில் சேர்த்து வந்தால், சிறுநீரக கற்கள் உருவாவதற்கான வாய்ப்பு குறையும்.

இஞ்சியில் உள்ள அன்டி-ஒக்ஸிடன்ட் சிறுநீரகங்களின் செயற்பாட்டிற்கு நல்லது. மேலும் இது இரத்தம் மற்றம் சிறுநீரகங்களை சுத்தப்படுத்தும் சக்தி கொண்டது.

# விளையாட்டு உலகம்

## டென்னிஸ் வீரர் நடாலுக்கு டொக்டர் பட்டம் வழங்கி கௌரவிப்பு



ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பிரபல டென்னிஸ் வீரர் ரபேல் நடாலுக்கு ஐரோப்பிய பல்கலைக்கழகம் டொக்டர் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. மாட்ரிட் நகரில் நடைபெற்ற இந்த பட்டமளிப்பு விழாவில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர். குடும்பம், சமூகம், ஒழுக்கம், கட்டுப்பாடுகள் ஆகியவை விளையாட்டுத்துறையில் சாதிப்பதற்கு முக்கிய காரணிகளாக உள்ளன.

இவைகளின் ஆதரவு இல்லாமல் விளையாட்டுத்துறை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் சிறந்த மனிதனாக உருவாகியிருக்க முடியாது என, பட்டம் பெற்ற நாடல் தெரிவித்துள்ளார். நடால் ஒற்றையர் ஆட்டத்தில் இதுவரை 14 முறை கிராண்ட் சிலாம் பட்டம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. 2008ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் தங்கம் பதக்கம் வென்றுள்ளார்.

## தொடர் தோல்வியால் துவண்டு கிடக்கும் பஞ்சாப்




ஐ.பி.எல் தொடரில் பஞ்சாப் அணியின் அடுத்தடுத்த தோல்வியால் அதன் உரிமையாளர்களில் ஒருவரான பிரீத்தி ஜிந்தா கவலையில் இருக்கிறார். ஏற்கனவே பஞ்சாப் அணியின் மோசமான செயற்பாட்டிற்கு ரசிகர்களிடம் டிவிட்டர் வலைதளம் மூலம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார். இந்நிலையில் பஞ்சாப் அணி நிர்வாகம் வெளிநாட்டு வீரர்களை திருப்பி அனுப்பும்பணியில் களமிறங்கி இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

ஐ.பி.எல் வீரர்கள் ஒப்பந்த விதிப்படி 14 ஆட்டத்திலும் வெளிநாட்டு வீரர்கள் ஆட வேண்டிய கட்டாயம் இல்லை. இதனால் அவர்களை திருப்பி அனுப்புவதன் மூலம் 20 சதவீதம் கட்டணத்தை கழித்து கொள்ளலாம். பஞ்சாப் அணித்தலைவர் பெய்லி, மேக்ஸ்வெல், மில்லர், மிட்செல் ஜோன்சன், ஷோன்மார்ஷ், ஹென்டிரிக்ஸ், பெரேரா ஆகிய வெளிநாட்டு வீரர்கள் உள்ளனர். இந்த 7 வீரர்களுக்கான மொத்த செலவு ரூ.33.85 கோடியாகும். இந்த 7 பேரையும் தற்போது திருப்பி அனுப்புவதன் மூலம் ரூ.5 கோடியை மிச்சப்படுத்த முடியும்.

ரூ.12கோடிக்குதக்கவைக்கப்பட்ட மில்லர், ரூ. 6 கோடிக்கான மேக்ஸ்வெல் போன்ற அதிரடி வீரர்கள் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. பஞ்சாப் அணி 9 ஆட்டத்தில் விளையாடி 2 போட்டியில் மட்டுமே (மும்பை, ராஜஸ்தான்) வெற்றி பெற்றது. 7 ஆட்டத்தில் (ராஜஸ்தான், டெல்லி (2), கொல்கத்தா, சென்னை, ஐதராபாத், மும்பை) தோற்றது. இதனால் 'பிளேஓப்' வாய்ப்பை பெறுவது மிகவும் கடினம். பஞ்சாப் அணியில் உள்ள வெளிநாட்டு வீரர்கள் சிறப்பாக விளையாடாததே தோல்விக்கு காரணமாக கருதப்படுகிறது. எனவே தான் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

## இறுதி எச்சரிக்கையுடன் களமிறங்கிய சுனில் நரீன்



நடப்பு ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா அணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரீன் மீண்டும் பந்து வீச பி.சி.சி.ஐ. அனுமதியளித்துள்ளது. கொல்கத்தா அணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரீன் பந்துவீச்சு, விதிகளுக்குட்பட்டதாக இல்லையென கூறி, நடப்பு ஐ.பி.எல். தொடரில் ஓஃப் ஸ்பின் வீச அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. இதனால், நடப்பு ஐ.பி.எல். தொடரில் சில போட்டிகளில் ஆடிய சுனில் நரீன், ஓஃப்ஸ்பின் வீசத்தடை விதிக்கப்பட்டதையடுத்து கொல்கத்தா அணிக்காக , விளையாடவில்லை. இந்நிலையில், சுனில் நரீனுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்து அவரை மீண்டும் பந்து வீச பி.சி.சி.ஐ. அனுமதியளித்துள்ளது.

இன்னொருமுறை சுனில் நரீனின் பந்து வீச்சு, விதிமுறைகளை மீறும் வகையில் இருந்தால் அவருக்கு நிரந்தர தடை விதிக்கப்படும் என்றும் பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது. இதையடுத்து, கொல்கத்தாவில் நடைபெறவுள்ள டெல்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் அவர் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐ.பி.எல். தொடரில் சுனில் நரீன், இதுவரை 69 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். நடப்புத் தொடரில் 2 விக்கெட்டுகள் மட்டுமே அவருக்கு கிடைத்துள்ளது.

## சாதனைகளை குவித்து தள்ளிய கிறிஸ் கெய்ல்



பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் பட்டையை கிளப்பிய அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் பல சாதனைகளை படைத்துள்ளார். பெங்களூர் வீரர் கிறிஸ் கெய்லின் அதிரடி சதத்தால் பஞ்சாப் அணி, நடப்பு ஐ.பி.எல் தொடரை விட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அன்றைய போட்டியில் கெய்ல் 57 பந்துகளில் 117 ஓட்டங்கள் குவித்தார். இதில் 12 சிக்சர்கள், 7 பவுண்டரிகளும் அடங்கும். அதோடு அந்த போட்டியில் கெய்ல் பல சாதனைகளையும் படைத்திருக்கிறார். பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் கெய்லின் இந்த சதம், டி20 போட்டியில் 14வது சதமாகும், ஐபிஎல் தொடரில் பஞ்சாப் அணிக்கு எதிராக மட்டும் 7 முறை அரைசதம் அடித்துள்ளார். பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் மட்டும் 1500 ஓட்டங்களுக்கு மேல் குவித்து வரலாறு படைத்தார் கெய்ல்.

ஐ.பி.எல் தொடரில் 75 ஆட்டங்களில் விளையாடியுள்ள கெயில், 3 ஆயிரத்து 65 ஓட்டங்களை அடித்துள்ளார். மேலும், மிக வேகமாக 3 ஆயிரம் ஓட்டங்களை அடித்தவர் என்ற பெருமையையும் பெற்றார். ஐபிஎல் போட்டியில் கெய்ல் அடித்த 5வது சதம் இதுவாகும். வேறு எந்த வீரரும் 2 சதங்களுக்கு மேல் அடித்தது இல்லை. நடப்பு தொடரில் பிரெண்டன் மெக்கல்லம் முதல் சதத்தை பதிவு செய்திருந்தார். அதற்கு அடுத்தபடியாக கெய்ல் 2வது சதமடித்துள்ளார்.

## அவுஸ்திரேலிய அணியில் கலக்கப் போகும் சங்கக்கார




இலங்கை அணியின் நட்சத்திர ஆட்டக்காரரான குமார் சங்கக்கார, அவுஸ்திரேலிய உள்ளுர் அணியான ஹார்பட் ஹரிக்கன்ஸில் விளையாட 2 வருடங்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அவுஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள பிக் பாஷ் லீக் (Big Bash League) கிரிக்கெட் போட்டியில் ஹார்பட் ஹரிக்கன்ஸ் (Hobart Hurricanes) அணிக்காக விளையாடவுள்ள சங்கக்கார கூறுகையில், பிக் பாஷ் லீக் போட்டி ஒரு உலகத்தரம் வாய்ந்த போட்டியாகும்.

இது ரசிகர்களுக்கு விருந்தளிக்ககூடியது. உலகத் தரம் வாய்ந்த சில முக்கிய வீரர்கள் இதில் இடம் பெறுகின்றனர். இலங்கை அணியுடன் நான் இங்கு வரும் போது எல்லாம் இந்த சூழ்நிலையை பெரிதும் விரும்புவேன். இங்கு அதிக நேரத்தை செலவிட விரும்புகிறேன் என்று கூறியுள்ளார்.

இலங்கை அணிக்காக 130 டெஸ்ட் போட்டி, 404 ஒருநாள் போட்டி மற்றும் 56 டி20 போட்டிகளில் விளையாடியுள்ள சங்கக்கார, சமீபத்தில் நடந்த உலகக்கிண்ணத் தொடரோடு ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 39 வருடங்களின் பின் சாதனை படைத்த ஆண்டி முர்ரே




ஜேர்மனிமுனிச்நகரில்நடைபெற்றமுனிச் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆண்டி முர்ரே சம்பியன் பட்டம் பெற்று சாதனை படைத்துள்ளார். போட்டித்தொடரின் ஆண்கள் ஒற்றையருக்கான இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் பிரிட்டன் வீரர் ஆண்டி முர்ரே ஜேர்மனியின் பிலிப் கோல்ஸ்கிரெய்பரை எதிர்கொண்டார். ஆண்டி முர்ரே 3-4 என பின்தங்கிய நிலையில் இருக்கும் போது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

நிறுத்தப்பட்ட ஆட்டம் மீண்டும் தொடங்கியது. இருவரும் விட்டுக்கொடுக்காமல் விளையாடினார்கள். இதனால் முதல் செட் 'டை பிரேக்கர்' வரை சென்றது. இறுதியில் முர்ரே 7-6 (7-4) என அந்த செட்டை கைப்பற்றினார். ஆனால், இரண்டாவது செட்டை 5-7 என இழந்தார். இதனால் சம்பியன் பட்டத்தை முடிவு செய்யும் மூன்றாவது செட்டை கைப்பற்ற இருவரும் ஆக்ரோஷமாக விளையாடினார்கள்.

'டை பிரேக்கர்' வரை சென்ற இந்த செட்டை முர்ரே 7-6 (7-4) என போராடி கைப்பற்றினார். இதனால், 2-1 என முர்ரே வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றார். களிமண் தரையில் பிரிட்டன் வீரர் ஒருவர் ஏடிபி சம்பியன் பட்டம் வெல்வது கடந்த 39 வருடங்களுக்கு பின் இதுதான் முதன்முறையாகும். இதற்கு முன் 1976ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பஸ்டர் மோட்ராம் என்பவர் பால்மா போட்டியில் சம்பியன் பட்டம் வென்றிருந்தார். அதன்பின் முர்ரே தற்போது பட்டம் வென்றுள்ளார்.

## இலங்கை அணியின் உடற்பயிற்சி பயிற்றுவிப்பாளராக மைக்கல் மெயின்



இலங்கை கிரிக்கெட் அணிக்கு உடற்பயிற்சி வழங்கும் பயிற்றுவிப்பாளராக இங்கிலாந்தைச் சேர்ந்த மைக்கல் மெயின் நியமிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இலங்கை சுற்றுத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர், தனது கடமைகளை பொறுப்பேற்றார் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர் Hampshire கிரிக்கெட் அணியின் வீரர்களுக்கு பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுள்ளார்.

இவர், வீரர்களை வலுவூட்டுதல் பற்றியும், விளையாட்டு கற்கைகள் பற்றியும் பல்கலைக்கழக பட்டங்களை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நூலிழையில் உயிர்தப்பிய டெல்லி அணி வீரர்கள்



டெல்லி அணி வீரர்கள் சென்ற விமானம் மற்றொரு விமானத்துடன் மோதவிருந்த விபத்து அதிர்ஷ்டவசமாக தவிர்க்கப்பட்டுள்ளது. கொல்கத்தாவில் நடந்த ஐ.பி.எல் போட்டியில் டெல்லி அணி பங்கேற்றது. இதைத் தொடர்ந்து ராய்ப்பூரில் நடக்கும் போட்டியில் ஹைதராபாத் அணியை எதிர்கொள்ளவிருந்தது. இதற்காக டெல்லி வீரர்கள் வந்த கொல்கத்தா விமானம் ராய்ப்பூர் விமான நிலையத்தில் தரையிறங்கி நின்றுள்ளது. அதேசமயத்தில் மும்பையில் இருந்து வந்த இன்டிகோ விமானமும் தரையிறங்க முயற்சித்துள்ளது. இதனால் கொல்கத்தா விமானத்தில் இருந்த டெல்லி அணி வீரர்கள் பயத்தில் உறைந்தனர்.

இந்நிலையில் கொல்கத்தா விமானம் ரன்வேயில் நிற்பதை கடைசி நேரத்தில் பார்த்த மும்பை விமானத்தின் பைலட் சிறப்பாக செயற்பட்டு விமான விபத்தை தவிர்த்ததாக கூறப்படுகிறது. இதனால் கொல்கத்தா விமானத்தில் இருந்த டெல்லி அணி வீரர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர். இந்த சம்பவம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

எதிரணியினரை மதிக்க கற்றுக் கொள்வதே சிறந்த வீரராக உருவெடுக்க வழிவகுக்கும் என்று முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார். சென்னையில் உள்ள ஜெர்மன் ஆடம்பர கார் பி.எம்.டபிள்யூ தொழிற்சாலைக்கு சச்சின் டெண்டுல்கர் வருகை தந்திருந்தார்.

அதேபோல் ஆட்டத்தைதவறான உணர்வு நெறியில் ஆட வேண்டாம். சரியான ஆட்ட உணர்வை நாம் வெளிப்படுத்த வேண்டும். நாம் விளையாடும் போது அணி யாக ஒன்று திரண்டு ஆடுவது மற்றும் சக வீரரை நம்புவது என்பது அவசியம். களத்தில் ஓட்டங்கள் எடுக்கும் போது சக வீரர் மீது நம்பிக்கை வைத்து ஓட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# உலகச் செய்திகள்

## 214 பெண்களை கர்ப்பமாக்கிய தீவிரவாதிகள்



போகோஹராம் தீவிரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்ட பெண்களில் 214 பேர் கர்ப்பம் அடைந்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. ஆபிரிக்க நாடான நைஜிரீயாவில் போகோஹராம் தீவிர வாதிகள் அடிக்கடி தாக்குதல்களிலும், பெண்கள் மற்றும் சிறுமிகளை கடத்துவதிலும் ஈடுபட்டு வருகிறார்கள். இந்நிலையில், சமீபத்தில் சாம்பிசா (Sambisa) வனப்பகுதியில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 234 பெண்கள் மற்றும் சிறுமிகளை இராணுவத்தினர் மீட்டனர். தீவிரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்ட பெண்களில் 214 பேர் கர்ப்பமாக இருப்பது தெரியவந்துள்ளது. இவர்களை பாலியல் தொழில் அடிமைகள் போல தீவிரவாதிகள் பயன்படுத்தி வந்துள்ளனர்.

இதுகுறித்து ஐ.நா உணவுத் திட்ட நைஜீரிய செயல் இயக்குநர் பாபாடுன்டே ஓஷோடிமெஹின் (Baba tunde Osotimehin) கூறியதாவது, ஏற்கனவே இப்பெண்களுக்கு எச்.ஐ.வி உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கான பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. 214 பேர் கர்ப்பிணிகளாக உள்ளனர், சிலருக்கு கரு நல்ல வளர்ச்சி அடைந்த நிலையில் உள்ளது. சிலர் தற்போதுதான் கர்ப்பமுற்றுள்ளனர்.

அவர்களின் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சில குழந்தைகளும் மீட்கப்பட்டு உள்ளது. அவர்கள் வனப்பகுதியில் பிறந்தவர்கள் ஆவர். இப்போதுதான் அவர்கள் வெளி உலகையே பார்க்கிறார்கள் என்று கூறியுள்ளார்.


## 11 ஆயிரம் பேர்களின் உயிரை பறித்த எபோலா வைரஸ்



எபோலா வைரஸ் நோய் தாக்குதலினால் பலியானவர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்தை தாண்டிவிட்டதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. கடந்த 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மேற்கு கினியாவில் தொடங்கிய இந்த நோய் லைபீரியா, சியாராலியோன் ஆகிய நாடுகளுக்கும் வேகமாக பரவி மக்களின் உயிரை பறித்து வருகிறது. இக்கொடிய வைரஸ் காய்ச்சலால் அதிகம் பாதிக்கப்பட்ட கினியா, லைபீரியா மற்றும் சியாராலியோன் ஆகிய நாடுகளில் மட்டும் 11,005 பேர் பலியாகியுள்ளனர்.

மொத்தமாக 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. லைபீரியாவில் தான் எபோலா நோய் தாக்கம் அதிகமாக இருந்தது. அந்நாட்டில் மட்டும் 4716 பேர் பலியாகியுள்ளனர். தற்போது புதிதாக யாரும் அந்நாட்டில் எபோலாவால் பாதிக்கப்படாததால், வரும் மே 9ஆம் திகதி லைபீரியாவில் எபோலா நோய் தாக்குதல் முடிவுக்கு வந்துவிட்டதாக உலக சுகாதார நிறுவனம் அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.அதேபோல் கினியா மற்றும் சியாராலியோன் ஆகிய நாடுக ளிலும் இந்த நோயின் தாக்கம் குறைந்து வருகிறது. கடந்த வாரத்தில் மொத்தமாக 9 பேர் மட்டுமே எபோலாவினால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விலையுயர்ந்த நகைகள் கொள்ளை




பிரான்ஸில் உள்ள பிரபல நகை கடை ஒன்றில் துப்பாக்கி முனையில் 20 மில்லியன் டொலர் மதிப்பிலான நகையை திருடிய கும்பலை பொலிசார் தேடி வருகின்றனர். பிரான்ஸின் Cannes நகரில் பிரபலமான Cartier boutique என்ற நகை கடை உள்ளது. பிரான்ஸில் இன்னும் சில தினங்களில் கேன்ஸ் திரைப்பட திருவிழா (Cannes Film Fes tival) நடைபெற உள்ளதால், இந்த கடையில் விலை உயர்ந்த நகைகள் வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

திரைப்பட விழாவில் பங்கேற்கும் நடிகர், நடிகைகளை அலங்கரிக்க உலக முழுவதும் உள்ள பிரபல நகை கடைகளிலிருந்து, நகைகள் கொண்டு வரப்பட்டு Cartier boutique கடையில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த செவ்வாய் கிழமை காலை முகமூடிகளுடன் நுழைந்துள்ளனர். 4 திருடர்களில் ஒருவர் திருடர்களில் ஒருவன் கடைக்கு வெளியே காவல் இருக்க, மற்ற மூவர்களில் ஒருவர் கடைக்குள் இருந்த 2 பணியாளர்களை துப்பாக்கி காட்டி மிரட்டியுள்ளார். இதையடுத்து மற்ற 2 திருடர்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த பைகளில் கடையில் இருந்த நகைகளை அள்ளி போட்டுள்ளனர்.

பின்னர், கடையை விட்டு வெளியே வந்த அவர்கள் தங்களுடைய காரை நோக்கி ஓடிய போது, அவர்கள் பைக ளில் இருந்த விலை உயர்ந்த கை கடிகாரங்கள் சில நடைபாதையில் விழுந்துள்ளன. கீழே விழுந்த நகைகளை பின்னர், நகை கடை உரிமையாளர்கள் மீட்டுள்ளனர். இந்த கொள்ளை சம்பவம் பற்றி பொலிசார் நடத்திய விசாரணையில், கொள்ளையர்கள் தப்பிச்சென்ற கார் நகருக்கு வெளியே எரிந்த நிலையில் இருந்தது தெரியவந்துள்ளது.

மேலும்விசாரணையில்,கொள்ளையர்கள் பயன்படுத்திய அந்த கார், கடந்த மார்ச் மாதம் திருடு போயிருந்ததையும் பொலி சார் கண்டு பிடித்தனர். கொள்ளையர்கள் திருடிய நகைகளின் மதிப்பு 17.5 மில்லியன் யூரோ (20 மில்லியன் டொலர்) என மதிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து திரைப்பட விழாவிற்காக கொண்டு வரப்பட்ட நகைகள் தான் கொள்ளை போயுள்ளதா என்பதை இன்னும் உறுதி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும்,நகைகடையில்பொருத்தியிருந்த கண்காணிப்பு கெமராவின் உதவியுடன் கொள்ளையர்களை பிடிக்க பொலிசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## விமான விபத்து தொடர்பில் வெளியான அதிர்ச்சியூட்டும் தகவல்



ஜேர்மன் விமான விபத்து தொடர்பாக அதிர்ச்சியூட்டும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. ஜேர்மன் விங்க்ஸ் என்ற விமானம் பிரான்ஸ் ஆல்ப்ஸ் மலை யில் மோதி விபத்திற்குள்ளானதில் அதில் பயணம் செய்த 150 பேர் பலியா கினர். கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரிலிருந்து ஜேர்மனியின் டியூஸெல் டார்ப் நகரை நோக்கி சென்ற ஜேர்மன்விங்ஸ் பயணிகள் விமானம் பிரான்ஸ் நாட்டின் தென்பகுதியில் உள்ள அல்ப்ஸ் மலைத்தொடரில் பெலோன் பள்ளத்தாக்கில் விழுந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 144 பயணிகள் உள்பட 150 பேரும் பலியாகினர். துணை விமானி Andreas Lubitz விமானத்தை வேண்டுமென்றே திட்டமிட்டு மலையில் மோதியது கருப்புபெட்டியின் மூலம் தெரியவந்தது. இந்நிலையில், துணை விமானி விமானத்தை எந்தவித தொழில்நுட்ப காரணங்களும் இல்லாமல் நீண்ட நேரம் தாழ்வாக விமானத்தை பறக்கவைத்ததாக கூறப்படுகிறது. இதன் மூலம் அவர் திட்டமிட்டே விபத்தை நிகழ்த்தியுள்ளார் என்று ஜேர்மன் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## நேபாள பூகம்பத்தால் உயரம் குன்றிய எவரெஸ்ட் சிகரம்



நேபாளத்தை தாக்கிய பெரும் பூகம்பத்தின் விளைவுகளால் எவரெஸ்ட் சிகரத்தின் உயரமும் சற்று குறைந்திருக்கக்கூடுமென ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. செய்மதி தரவுகளின் அடிப்படையில் ஆராய்ந்த போது, சிகரத்தின் உயரம் 2.5 சென்ரி மீற்றர்களால் குறைந்திருக்கலாமென தெரியவந்ததாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஐரோப்பாவை சேர்ந்த சென்ரினல் என்ற ராடார் செய்மதி எவரெஸ்ட் சிகரத்தை படம் பிடித்துள்ளது. இந்த சிகரத்தின் மலையடிவாரத்தில் உள்ள திறந்தவெளி பூகம்பத்தின் பின்னர் செங்குத்தாக உயர்ந்ததும் தெரியவந்துள்ளது. இது பூகம்பத்தின் தாக்கம் தீவிரமாக இருப்பதற்குரிய காரணத்தை விபரிப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

## 22 வயதில் 80 வயது முதியவர் போல் மாறிய உடல்



மெக்சிகோவில் (Mexico) பெண் ஒரு வரை கடந்த 2 வருடங்களாக சங்கிலியால் கட்டிவைத்து கொடுமைப்படுத்திய சம்பவம் பரிதாபத்தை ஏற்படுத்தியுள்ளது. மெக்சிகோவில் உள்ள சலவை கடை ஒன்றில் ஜூண்டூரி (Zunduri - Age 22) என்ற பெண் கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் வேலைக்கு சேர்ந்துள்ளார்.அந்த சலவை கடையின் முதலா ளியான ஆகொ (Ochoa) என்ற பெண், ஜூண்டூரியை இரும்பு சங்கிலியில் கட்டிவைத்து கொடுமை செய்துள்ளார். மேலும், ஒரு நாளைக்கு 17 மணி நேரம் வேலை வாங்கியுள்ளார். அவர் சொன்னபடி வேலை செய்யவில்லை என கூறி உடல் முழுவதும் சூடு வைத்துள்ளார்.

இந்நிலையில் கடந்த ஏப்ரல் 25 திகதி ஜூண்டூரி அங்கு இருந்து தப்பித்துள்ளார். சலவை கடையில் தான் சந்தித்த கொடு மைகளை கூறிய ஜூண்டுரி, அவர்கள் தன்னை மிகவும் துன்புறுத்தியதாகவும், சங்கிலியால் கட்டப்பட்டு இருந்ததால் நின்றுகொண்டே தூங்கியதாகவும், மேலும் பொலித்தீன் பையில் மலம் கழிக்க வற்புறுத்தியதாகவும் தெரிவித்துள்ளார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள், ஜூண்டூரியின் உடல் 80 வயது முதி யவர் போல் உள்ளதாக கூறினர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள ஆகொவுக்கு 50 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கடற்கரையில் உறவு வைத்துக்கொண்ட தம்பதியருக்கு சிறைத்தண்டனை



அமெரிக்காவில் கடற்கரை ஒன்றில் உறவு வைத்துக்கொண்ட தம்பதியினரை பொலிசார் கைது செய்துள்ளனர். அமெரிக்காவின் ப்ளோரிடாவை (Flor ida) சேர்ந்த எலிசா அல்வரிஸ் (Elissa Alvarez),ஜோஸ் கேபலிரோ (Jose Cabal lero) தம்பதியினர் கடந்த ஆண்டு யூலை மாதம் 20ம் திகதி, அங்குள்ள கடற்கரையில் வைத்து உறவில் ஈடுபட்டனர்.

இதை அங்கிருந்த 3 வயது குழந்தை உட்பட ஏராளமானோர் பார்த்துள்ளனர். இது தொடர்பாக பொலிசார் அவர்களை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அவர்கள் இருவரை யும் குற்றவாளிகள் என கூறியுள்ளார்.

மேலும் அவர்களுக்கு 15 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்க வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் ஜோஸ் கேபலிரொ ஏற்கனவே போதைப்பொருள் கடத்தல் வழக்கில் சிறை சென்று வந்துள்ளதால் அவருக்கு கூடுதல் தண்டனை வழங்க வேண்டும் என அரசாங்க வழக்கறிஞர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

**சீனாவில் இளைஞர் ஒருவர் 3 வயது குழந்தையை இரக்கமில்லாமல் கொடூரமாக தாக்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சிறுவனை தாக்கிய இளைஞரை. யனான் நகர பொலிசார் கைது செய்தனர். அந்த நபருக்கு மனநோய் சம்பந்தமான சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**






பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

சகல விதமான தையல் இயந்திரங்களும் தங்கள் இருப்பிடத்திற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 077 6906182





# விந்தை உலகம்

## கண்ணை பறிக்கும் இயற்கை அழகுடன் தாஸ்மானியா

அவுஸ்திரேலிய மாநிலங்களுள் ஒன்றான தாஸ்மானியா தீவு, அவுஸ்திரேலிய கண்டத்தின் கிழக்குப் பகுதியிலிருந்து 240 கிலோ மீற்றர் தெற்கில் அமைந்துள்ளது. ஹோபார்ட்டை தலைநகராக கொண்டு செயற்படும் இந்த தீவில், 4 தனித்தனி பருவ காலங்கள் அமைந்துள்ளன.

அவற்றில் டிசம்பர் மாதம் முதல் மார்ச் வரை தான் மிகவும் சூடான பருவகாலமாக விளங்குகிறது. கோடை காலத்தில் தினசரி சராசரி வெப்பநிலையானது, 17 டிகிரி செல்ஷியஸ் முதல் 23 டிகிரி செல்ஷியஸ் வரை இருக்கும். அதேநேரத்தில், குளிர் காலத்தில் தினசரி சராசரி வெப்ப நிலையானது, 3 டிகிரி செல்ஷியஸ் முதல் 11 டிகிரி செல்ஷியஸ் வரை இருக்கும். தாஸ்மானியாவில் நீங்கள் எங்கு பயணம் செய்தாலும், எப்போது வேண்டுமானாலும் வானிலை திடீர் சரிவை காணலாம் என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.


## உங்கள் மனதை கட்டுப்படுத்த ஒரு சாதனம்



கடந்த 30 ஆண்டுகளாக மூளை இயங்கும் விதம் குறித்து தீவிர ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இதன் பலனாக, சாதாரண மக்கள் மூளையின் திறனை மேம்படுத்தவும், வேண்டிய மனநிலைக்கு வரும் விதத்தில் கட்டுப்படுத்தவும் என்ன தேவை என்பது தெரிய வந்திருக்கிறது.

இந்த ஆராய்ச்சியின் பலன் இப்போது எவருக்கும் பயன்படும் விதத்தில் எளிய சாதனங்களாக வர ஆரம்பித்திருக்கின்றன. மூளையில் நடக்கும் எல்லாமே மின்வேதியல் அடிப்படையில்தான். இதனால் மூளை இயங்கும்போது வெளிப்படும் மிக மெல்லிய மின் சமிக்ஞைகளை வைத்து மூளை தற்போது என்ன நிலையில் இருக்கிறது என்பதை அறியலாம். இந்த சித்தாந்தத்தின் அடிப்படையில் இயங்கும் ஈ.ஈ.ஜி (எலக்ட்ரோ என்செபலோகிராபி) போன்ற கண்காணிப்பு சாதனங்கள் மூளையில் நோய் அறிய பயன்படுகின்றன. தற்போது இந்த கண்டுபிடிப்புகளை வைத்து ஒரு தனி நபர் தனது மூளையின் இயக்கத்தை ஒரு "மொபைல் ஓப்" மூலம் அறிந்து கொண்டு, தன் மன நிலையை கட்டுப்படுத்த உதவும் சாதனங்கள் வர ஆரம்பித்திருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் சமீபத்தில் கிக்ஸ்டார்ட்டர்.கொம் தளத்தில் அறிமுகமாகியிருக்கும் நோர்பிஸ் (Narbis).

## உலகின் மிகப்பெரிய கட்டிடமான புர்ஜ் கலிபா



ஐக்கிய அரபு நாடுகளில் ஒன்றான துபாயில் கட்டப்பட்டுள்ளது. இது 124 மாடிகளை கொண்டது. இங்கு நட்சத்திர ஹோட்டல்கள், அலுவலகங்கள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள், குடியிருப்புகள் மற்றும் நீச்சல் குளங்கள் என அனைத்து அம்சங்களும் இடம் பெற்றுள்ளன. 2,717 அடி (828 மீற்றர்) உயரம் கொண்ட இந்த கட்டடம் முழுவதும் கருப்பு நிற சலவை கற்கள், எவர்சில்வர் மற்றும் கண்ணாடிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

124 மாடிகளுக்கும் செல்லும் வகையில் நகரும் படிக்கட்டுகள் மற்றும் லிப்ட் வசதிகள் இங்கு உள்ளன. இங்குள்ள இரண்டு லிப்டுகளும் நாளொன்றுக்கு சராசரியாக சுமார் 244.4 கிலோமீட்டர் தூரத்துக்கு முன்னும், பின்னுமாக சென்று வந்துள்ளன. அவ்வகையில், இந்த வளாகம் திறக்கப்பட்ட நாளில் இருந்து (சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன்னர்) இதுவரை 3 லட்சத்து 84 ஆயிரத்து 400 கிலோ மீட்டர் தூரத்தை இவை கடந்துள்ளன. இந்த தூரமானது, பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரத்துக்கு ஒப்பானது, என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டின் ஜனவரி மாதத்தில் இருந்து மார்ச் மாதம் வரையிலான மூன்று மாத காலகட்டம் வரை, முதல் லிப்ட் 49 ஆயிரத்து 833 முறை இயங்கி 21 ஆயிரத்து 329 கிலோமீட்டர் வரையிலும், இரண்டாவது லிப்ட் 52 ஆயிரத்து 939 முறை இயங்கி 22 ஆயிரத்து 658 கிலோமீட்டர் வரையிலும் சென்று வந்துள்ளன. ஏற்கனவே, உலகிலேயே மிகவும் உயரமான பகுதியில் இருந்து பூமியின் அழகை பார்வையிடும் இடம், உலகிலேயே மிகவும் உயரமான கட்டடம், மனிதர்களால் உருவாக்கப்பட்ட மிக உயரமான கட்டடம் என ஏழு கின்னஸ் சாதனைகளை புர்ஜ் கலிபா கட்டடம் படைத்துள்ளது என்பது, நினைவில் கொள்ளத்தக்கது.

## இராணுவ ரோபோக்களை தயாரிக்குமா கூகுள் நிறுவனம்



கூகுள் நிறுவனம், கடந்த மாதம், ரோபோக்களுக்கு "ஆளுமையை" தரக்கூடிய தன் கண்டுபிடிப்புக்கு காப்புரிமை பெற்று பரபரப்பை ஏற்படுத்தியது. இப்போது ரோபோக்களை இராணுவத்தில் பயன்படுத்துவதற்கு உதவும் தன் கண்டுபிடிப்பிற்கு சமீபத்தில் காப்புரிமை வாங்கியிருக்கிறது கூகுள். காப்புரிமைக்கான விண்ணப்பத்தில், "பலதரப்பட்ட ரோபோ சாதனங்களுக்கு, வேலைகளை பகிர்ந்தளிக்கும் அமைப்பு" என்று தன் கண்டுபிடிப்பை வர்ணித்திருக்கிறது கூகுள். இது கேட்பதற்கு அப்பாவித்தனமானதாக தொனிக்கலாம்.

தொழிற்சாலையில் பல ரோபோக்களை கட்டி மேய்க்க உதவுவது, தரையை சுத்தம் செய்து, புல்வெட்டும் ரோபோக்களை கண்காணிப்பது போன்றவற்றுக்கும் கூகுள் தன் கண்டுபிடிப்பை பயன்படுத்தலாம். என்றாலும், கூகுளின் கண்டுபிடிப்பு, ஒரே சமயத்தில் எத்தனை ரோபோக்களை இணைத்து வேலை வாங்க வல்லது என்பதற்கு எல்லை ஏதும் இல்லை. காப்புரிம விண்ணப்பத்தில், அண்ட்ரொய்ட் ஸ்மார்ட்போன் மூலம் பலவித திறன் உள்ள ரோபோக்களுக்கு வேலைகளை பகிர்ந்தளித்து கண்காணிக்கலாம் என்று கூகுள் சொல்லியிருக்கிறது. அதாவது, ஒரு பெரிய ரோபோ கூட்டத்தை, ஒருவர் உலகின் எந்த பகுதியில் இருந்தாலும், அங்கிருந்தபடியே கட்டுப்படுத்த முடியும்.

ஆனால் கூகுளின் இன்னொரு நிறுவனமான பாஸ்டன் டைனமிக்ஸ் உருவாக்கி வரும் ரோபோக்கள் படையை கட்டுப்படுத்தவும் இது பயன்படலாம். தானாக சிந்தித்து முடிவெடுத்து, செயற்படும் ஆயுதங்களை வருங்காலத்தில் தடை செய்யவேண்டும் என்ற எதிர்ப்பு எழ ஆரம்பித்திருக்கும் வேளையில் கூகுள் இப்படி ஒரு கண்டுபிடிப்புக்கு அனுமதி வாங்கியிருக்கிறது. யார் கண்டது, "ஐ ரோபோ" படத்தில் வருவதுபோல இராணுவ ரோபோக்களை கூகுள் தயாரிக்கப்போகிறதா, இல்லை, பரிசோதனைக்காக கால்பந்து விளையாடும் ரோபோ அணிகளை உலகிற்கு அறிமுகப்படுத்தப்போகிறதா?










email - vanni_inn@yahoo.com

Vanni Inn

Chinese, Indian, Sri Lankan Food available



Hotel Vanni Inn

A/C Room, Non A/C Room, Com Room, Quality Foods, Hall, Vehicle Parking

வவுனியா மண்ணில் நவீன வசதிகளுடன் கூடிய மங்கலகரமான அனைத்து நிகழ்வுகளுக்கும், மண்டபத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

2nd Cross Street, Vavuniya. Tel:- 0242222074, Fax:- 0242222074


இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 10.05.2015 அன்று வெளியிடப்பட்டது.